www.onlineuthayan.com
பக்கங்கள் : 26
உதயன்
சுடர் 27
கதிர் 236
வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 04 வியாழக்கிழமை (19/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## கிழக்குக் கடலில் 42 பேர் கைது

திருகோணமலை, ஜூலை 19

கிழக்குக் கடற்கரைப் பகுதியிலிருந்து சட்ட விரோதமான முறையில் ஆஸ்திரேலியா செல்லமுயன்ற 42 பேரை கிழக்குக் கடற்படைத் தலைமையகப் படையினர் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

அத்துடன், அவர்கள் ஆஸ்திரேலியா செல்வதற்குத் தயாரப்படுத்தி வைத்திருந்த படகையும் கைப்பற்றியுள்ளனர். கடந்த எட்டு நாள்களுக்குள் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்லமுயன்ற 335 பேரைப் பாதுகாப்பு அதிகாரிகள் கைதுசெய்துள்ளதுடன், ஏழு படகுகளையும் கைப்பற்றியுள்ளனர். (த)

## 'டெசோ'வில் பங்குகொள்வதா? ஆராய்கிறார் சம்பந்தன்

கொழும்பு,ஜூலை 19

சென்னையில் ஒகஸ்ட் 12 ஆம் திகதி நடைபெறவுள்ள 'டெசோ' மாநாட்டில், பங்குபற்றுவதா இல்லையா என்பது குறித்துக் கவனமாக ஆராய்ந்துவருவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழக முன்னாள் முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான மு.கருணாநிதியின் ஏற்பாட்டில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக த.தே. கூட்டமைப்பின் தலைவர் இரா. சம் 04↘

# கிழக்கில் மு.கா. தனி வழி அமைச்சர் ஹக்கீம் அதிரடி

### நிபந்தனைகளை ஏற்க அரசு மறுத்ததால் திருப்பம்



மட்டக்களப்பு, ஜூலை 19

அரசுடன் இணைந்து மு.கா. போட்டியிடுமா அல்லது தனித்துக் களமிறங்குமா என கடந்த சில நாள்களாக நிலவிய பரபரப்பான சூழ்நிலைகளுக்கு மத்தியில் நேற்றுக் காலை தனித்துப் போட்டியிடுவதென்ற அதிரடித் தீர்மானத்தை மு.கா. நிறைவேற்றியுள்ளது.

ஜனாதிபதி மற்றும் அரச உயர்மட்டத் தலைவர்களுடனான பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்ததையடுத்து மு.கா. உயர்பீட உறுப்பினர்களுடன் அடுத்தடுத்து இடம்பெற்ற பரபரப்பான பேச்சுகளைத் தொடர்ந்து மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் மேற்படி தீர்மானத்துக்கு உந்தப்பட்டுள்ளார்.

முஸ்லிம்கள் 04↘

## மு.காவின் அதிரடியால் ஆதரவாளர்கள் மகிழ்ச்சி

### கிழக்கு முழுவதும் பட்டாசு கொளுத்தி ஆரவாரம்

மட்டக்களப்பு, ஜூலை 19

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தில் தனித்துப் போட்டியிட எடுத்த அதிரடித் தீர்மானத்தைக் கட்சி ஆதரவாளர்கள் பெரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர்.

நேற்றுக் கட்சித் தலைமையகமான தாருஸ்ஸலாமில் எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் 04↘

## தப்பிவிட்டார் ஹக்கீம்

### வரவேற்கிறார் சம்பந்தன்

திருகோணமலை, ஜூலை 19

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதென்ற மு.காவின் முடிவை நான் வரவேற்கிறேன். அது ஒரு நல்ல முடிவு. அரசால் ஏமாற்றப்படுவதற்கு முன்னர் ஹக்கீம் ஏமாறாமல் வெளியேறியிருக்கிறார் என்றுதான் கூறவேண்டும்.

- இவ்வாறு நேற்று 'உதயனி'டம் கருத்துத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாகாணசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது குறித்துக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ரவூப் ஹக்கீமின் 04↘

## பறந்தது புலிக்கொடி



வடமராட்சி, ஜூலை 19

நெல்லியடி பஸ் நிலையத்தில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது புலிக் கொடியை ஏந்தியவாறு திடீரென மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத நபர்களினால் சிறிது நேரம் அங்கு பரபரப்பு நிலவியது.

இதற்கு மத்தியிலும் கவனவீர்ப்புப் போராட்டம் எதுவித சலனமும் இன்றித் தொடர்ந்து நடந்து முடிந்தது.

புலிக்கொடிகளை ஏந்தி வந்த மோட்டார் சைக்கிள்கள் அங்கு கடமையில் நின்ற பொலிஸாருக்கு மிக அருகில் பயணித்தபோதும் பொலிஸார் அவர் 04↘

## அரசின் அடாவடித்தனத்தை எதிர்த்து நெல்லியடியில் நேற்றுப் போராட்டம்

வடமராட்சி, ஜூலை 19

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதி நிமலரூபன் படுகொலை மற்றும் வடக்கின் நில ஆக்கிரமிப்பு ஆகியவற்றைக் கண்டித்து நேற்றுப் முற்பகல் 11 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நெல்லியடி மத்திய பஸ் நிலையத்தில் பலத்த பாதுகாப்புக் கெடுபிடிக்கு மத்தியில் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

பெருந்தொகையான ஆண்கள், பெண்கள் ஒன்றுகூடிப் பல்வேறு வாசகங்கள் கொண்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கோஷங்களை ஓயாமல் எழுப்பிக் கொண்டிருந்தனர். 04↘




## உதயன் மீது சி.ஐ.டி. விசாரணை

யாழ்ப்பாணம், ஜூலை 19

இராணுவத் தளபதியின் கருத்துத் தொடர்பில் கடந்த பதினோராம் திகதி உதயன் பத்திரிகையில் வெளியான செய்திக்காக உதயன் பத்திரிகை ஆசிரியர் கொழும்பில் இருந்து வந்த குற்றத் தடுப்பு புலனாய்வுப் பொலிஸ் பிரிவு அதிகாரிகள் குழுவால் நேற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

செய்தி தொடர்பில் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜகத்ஜெயசூரிய செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த விசாரணை நடத்தப்படுவதாக 04↘

## நிமலரூபனின் இறுதிச்சடங்கு கௌரவமாக நடக்கவேண்டும்

### உயர்நீதிமன்றம் அறிவிப்பு

கொழும்பு,ஜூலை 19

வவுனியா சிறைச்சாலை போராட்ட சம்பவத்தின் பின்னர் அங்கிருந்து அனுராதபுரம் சிறை, அதன்பின்னர் மஹர சிறைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் தாக்குதல்களுக்கு உள்ளாகிக் கொல்லப்பட்ட தமிழ்க் கைதி நிமலரூபனின் இறுதிச் சடங்குகளைக் கௌரவமான முறையில் நடத்த அனுமதியளிக்குமாறு உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நிமலரூபனின் சடலத்தை மஹர எல்லைக்குள் அடக்கம் செய்யவேண்டும் என்ற கடவத்தை நீதவானின் உத்தரவை எதிர்த்து, தனது மகனின் உடலைத் தமது சொந்த இடமான வவுனியாவில் நல்லடக்கம் செய்வதற்கு அனுமதியளிக்குமாறு அவரது பெற்றோர் 04↘

## மன்னார் நீதிமன்றத்தின் முன் உப்புக்குளம் மக்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 19

மன்னார் நீதிமன்றத்துக்கு முன்னால் உப்புக்குளம் கிராம மக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தை அடக்க கலகம் அடக்கும் பொலிஸார் மேற்கொண்ட கண்ணீர்ப்புகைக்குண்டுப்பிரயோகம் மற்றும் குண்டாந்தடித் தாக்குதலைத் தொடர்ந்து மன்னார் பஸார் பகுதியில் நேற்று புதன்கிழமை மதியம் வரை பதற்றநிலை ஏற்பட்டது.

மேலும், ஆர்ப்பாட்டக்காரர்கள், பொலிஸார் மீது கல்வீசித் தாக்குதல் நடத்தினர். இதன்போது மூன்று பொலிஸாரும், இரண்டு ஆர்ப்பாட்டக்காரர்களும் கடும் காயங்களுக்கு உள்ளான நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மன்னார் ஜோசப்வாஸ் நகர் மீனவர்களுக்கு மாற்று இடம் வழங்கப்படும் வரை தொடர்ந்தும் 04↘



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லியடியில் திரண்ட மக்கள்...



# வட பகுதியில் வங்கிகளின் கடன் வழங்கல் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

வடக்கு மாகாணத்திலுள்ள வங்கிகள் கடன் வழங்கும் வீதம் இந்த வருடத்தின் அரையாண்டின் இறுதியில் 65 சதவீதம் வரையில் உயர்வடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் பா.சியதீபன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்திலுள்ள வங்கிகள் போர் முடிவடைந்த பின்னர் கடன் வழங்கும் திட்டத்தைத் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றன. வங்கிகள் தமக்குக் கிடைக்கின்ற வைப்பிலிருந்து 75 தொடக்கம் 85 சதவீதம் வரையில் கடன்களை வழங்க முடியும்.

மேலும் 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்ததிலிருந்து இன்று வரை ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 84 கடன்கள் மத்திய வங்கியின் பல்வேறு திட்டங்களினூடாக வழங்கப்பட்டுள்ளன. இதன் பெறுமதி 10 ஆயிரத்து 832.75 மில்லியன் ரூபாவாகும்.

இதில் வறுமை ஒழிப்புத் திட்டத்தினூடாக 10 ஆயிரத்து 839 கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் பெறுமதி 632 மில்லியன் ரூபாய்கள். விவசாயக் கடன் திட்டத்தினூடாக 71 ஆயிரத்து 247 கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் பெறும்தி 7 ஆயிரத்து 91.3 மில்லியன் ரூபாய்கள். வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக 18 ஆயிரத்து 341 கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் பெறுமதி 2 ஆயிரத்து 329.28 மில்லியன் ரூபா ஏனைய திட்டங்களினூடாக ஆயிரத்து 857 கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் பெறுமதி 780.17 மில்லியன் ரூபா.

இவை அனைத்தும் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கடன் விவரங்களே. இதனை விட வங்கிகள் தமக்குரிய கடன் திட்டங்களையும் வழங்கி வருகின்றன.

2009ஆம் ஆண்டின் இறுதியில் வங்கிகள் கடன் வழங்கும் வீதம் 19 சதவீதமாகக் காணப்பட்டது. இது 2010ஆம் ஆண்டின் இறுதியில் 33 சதவீதமாகவும், 2011ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் 53 சதவீதம் வரையிலும் அதிகரித்தது. தற்போதைய நடப்பாண்டின் அரையாண்டு வரையில் கடன் வழங்கல் 65 சதவீதம் வரையில் காணப்படுகின்றன.

சில வங்கிகள் தமது இங்குள்ள வைப்புகளுக்கு மேலதிகமாகத் தென்னிலங்கையிலிருந்தும் கடன் பெற்றுக் கொடுக்கின்றன - என்றார். (த-5)

## மண்கும்பானில் மணல் ஏற்றியவருக்கு அபராதத் தொகை 2,25,000 ரூபா

யாழ்ப்பாணம்,ஜூலை 19

மண்கும்பானில் சட்ட விரோதமாக மணல் ஏற்றிச் சென்ற புளியங்கூடலைச் சேர்ந்தவருக்கு ஊர்காற்றுறை நீதிமன்றம் 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது. அந்த அபராதம் குறைக்கப்படவில்லை. காரைநகரில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்றவருக்கு 35 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தது ஊர்காவற்றுறை நீதிமன்று.

இந்தக் குற்றங்களுக்காக புளியங்கூடலைச் சேர்ந்த கனகரத்தினம் மீபாகரன் என்பவருக்கு கடந்த வியாழக்கிழமை 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதமும் காரைநகர் சின்ன ஆலடியைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவனேஸ்வரன் என்பவருக்கு கடந்த திங்கட்கிழமை 35 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

மீபாகரன் முன்னர் பல தடவைகள் சட்டவிரோதமாக மணல் ஏற்றியிருந்த போதும் நீதிமன்றில் முன் குற்றவாளி இல்லையென்றும் தான் சுற்றவாளியெனவும் வாதாடினார். எனினும் பின்னர் குற்றவாளியென்பதை அவர் ஒப்புக்கொண்டார். இதனால் அவருக்கு 2 லட்சத்து 25 ஆயிரம் அபராதமும் 5 வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இந்த அபராதத் தொகை 35 ஆயிரமாகக் குறைக்கப்பட்டது என்று நேற்று உதயனின் 7 ஆம் பக்கத்தில் தவறுதலாக செய்தி பிரசுரமாகி விட்டது. அந்த அபராதத் தொகை குறைக்கப்படவில்லை. மாறாக காரைநகரைச் சேர்ந்த சிவனேஸ்வரனுக்கே 35 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

காரைநகர் பிரதேச செயலகத்தினால் நிர்மாணிக்கப்பட்டு வரும் கலாசார மண்டபத்துக்கு மணல் ஏற்றிச் சென்ற டிரக்டரின் சில்லு ஒன்று காற்றுப் போய்விட்டமையால் மாற்றுவழிகள் மேற்கொண்டு புறப்படும் போது, 6 மணிவரை வரையறுக்கப்பட்டிருந்த அனுமதி 6 மணியைத் தாண்டிவிட்டமையால் செல்லுபடியற்றதாகி விட்டது.

இதனால் பொலிஸார் அவருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தனர். இதனால் மக்கள் நலன் கருதி அபராதத்தொகையை குறைக்குமாறு மன்றில் கோரப்பட்டதையடுத்து சிவனேஸ்வரனுக்கு 35 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா உத்தரவிட்டார். (த-4)

## செலான் வங்கி தலைவருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

தனது கணக்கிலிருந்த பணம் கையாடப்பட்டுள்ளதாக வங்கியின் வாடிக்கையாளர் ஒருவர் செய்த மனு தொடர்பில் முன்னாள் சட்டமா அதிபரும் செலான் வங்கித்தலைவருமான மொஹான் பீரிஸை எதிர்வரும் 24ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நேற்று அழைப்பாணை விடுத்துள்ளார்.

நாவலவைச் சேர்ந்த முறைப்பாட்டாளரான ஷிரானி அணோமாதுல்லெவ, கொழும்பு மோசடி விசாரணைப் பணியகத்தில் இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார். 1995ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி செலான் வங்கியில் கணக்கு ஆரம்பிக்கப்பட்டபோது 22,659 அமெரிக்க டொலர் மற்றும் 105,580 ரூபாவை வைப்பிலிட்டதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் கூறினார்.

2006ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வங்கிக்கு சென்ற தான், வைப்பிலிடப்பட்ட பணத்தின் இலாபத்தை தெரியப்படுத்துமாறு வங்கியிடம் கேட்டபோதிலும், அதனைத் தெரிவிக்க வங்கி தவறியதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் கூறினார்.

கோட்டை வங்கிக் கிளையைச் சேர்ந்த அதிகாரிகள் தனது பணத்தை கையாடியிருக்கலாம் என குற்றஞ்சாட்டியுள்ள அவர், இது தொடர்பில் விசாரணையை முன்னெடுக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (த)

## மு.காவில் போட்டியிட ஸ்ரீரங்கா விருப்பமாம்

கொழும்பு, ஜூலை 19

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்காவை செயலாளர் நாயகமாகக் கொண்ட பிரஜைகள் முன்னணி எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளது எனத் தெரிய வருகிறது.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை கட்சித் தலைமையகமான தாருஸ்ஸலாமில் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்கா, கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து போட்டியிடுவதற்கான விருப்பத்தை வெளியிட்டுள்ளார் எனவும் முஸ்லிம் காங்கிரஸ் தகவல்கள் தெரிவித்தன.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காகக் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்த அஸாத் சாலியும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டுள்ளார்.

எனினும், பிரஜைகள் முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் [illegible] எதுவும் அறிவிக்கவில்லை என அந்தக் [illegible] (த)

## லஞ்சம் பெற்ற அதிகாரி கைது

கொழும்பு,ஜூலை 19

லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் அதிகாரி ஒருவர் லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவிசாவளை பிரதேச இரத்தினக்கல் அகழ்வு தொழிலாளி ஒருவரிடம் 50,000 ரூபா லஞ்சம் கோரி அதில் 45,000 ரூபாவை பெற்ற வேளை அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இரத்தினக்கல் அகழ்வு தொழிலாளி சட்ட விரோதமாக இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்டுள்ளார். அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காதிருப்பதற்கு அதிகாரியால் லஞ்சம் பெறப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட அதிகாரி கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு தலா 5 லட்சம் ரூபா இரு சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மேலும் இம்மாதம் 31ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் ஆஜராகுமாறு சந்தேகநபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக லஞ்ச ஒழிப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

## விரிவுரையாளர்களுடைய கோரிக்கை நியாயமற்றது

கொழும்பு,ஜூலை 19

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை நியாயமற்றது என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார். பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பளப் பிரச்சினை குறித்து மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸ்ஸநாயக்க நாடாளுமன்றில் நேற்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே உயர்கல்வி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச கலை இலக்கியப் போட்டிகளின் வெற்றியாளர்கள்

வவுனியா,ஜூலை19

வவுனியா பிரதேச செயலகத்தால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பிரதேச கலை இலக்கியப் போட்டிகளில் கலந்து கொண்டு முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்டோர் விவரம் வருமாறு:-

கட்டுரை
(கனிஷ்ட பிரிவு)

பூ.புவிதா- புதுக்குளம் மகா வித்தியாலயம், சி.தர்சா- வவுனியா இறம்பைக்குளம் மகளிர் ம.வி., த.விஜேந்தினி- விபுலானந்தாக் கல்லூரி, து.ஜானுசா - இறம்பைக்குளம் மகளிர் ம.வி.

கட்டுரை
(சிரேஷ்ட பிரிவு)

ம.தனுஜா - இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, கி.தர்சனா- சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, சி.சியாமளச் செல்வி - இறம்பைக்குளம் ம. வி., யோ.சுகன்ஜா - புதுக்குளம் ம. வி.

கவிதை
(கனிஷ்ட பிரிவு)

வி.டிலக்ஷனா- சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, ம.கயிலினி - சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, தி.டனுசன், இ.மிலோசன்- வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்.

கவிதை
(சிரேஷ்ட பிரிவு)

க.கோபிகா - வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், ஜி.கரிஸ்மியா - வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், சி.தாட்சாயினி- சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, ந.பிரம்மியா- வவுனியா தமிழ் மத்திய ம.வி.

கவிதை பாடும் போட்டி, நேரடியானது
(கனிஷ்ட பிரிவு)

ந.சிபிஷா- இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, இ.கேதுஜா -இறம்பைக்குளம் ம.வி., கு.சாருசனா , செல்வி நவீந்திரன் கிருஷ்ணராஜ்- பெரியகோமரசன் குளம் ம.வி.

கையெழுத்துப் போட்டி (கனிஷ்ட பிரிவு)

சி.திவ்வியா - தமிழ் மத்திய மகா வித்தியாலயம், கு.சுவாதிகா - இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, இ.எ.சகானா, உ.கிசோமி - பெரியகோமரசன்குளம் மகா வித்தியாலயம்.

பாடல் நயத்தல்
(சிரேஷ்ட பிரிவு)

வி.வினித்தா, ம.மோகனப்பிரியா - பெரியகோமரசன்குளம் ம.வி., ஸ்ரீகரன் கேசவன், ஜெ.ஷதுசன் தமிழ் மத்திய ம.வி.

கவிதை
(கனிஷ்ட பிரிவு)

த.ஆரபி - இறம்பைக்குளம் மகளிர் ம.வி. (க-400)

## எமது பிள்ளைகளிடம் கட்டணமா? கொதிக்கின்றனர் முகாம் மக்கள்

வவுனியா, ஜூலை19

நலன்புரிப் பாடசாலை மாணவர்களிடம் பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட்டமை தொடர்பாகப் பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

முல்லை வலயப் பாடசாலைகளுக்கிடையிலான இரண்டாம் தவணைப் பரீட்சைகள் நேற்று புதன் கிழமை ஆரம்பமாகின.

இதற்கான பரீட்சை வினாத்தாள்கள் முல்லைத்தீவுக் கல்வி வலயத்தால் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

கதிர்காமர் நலன்புரிப் பாடசாலை, ஆனந்தகுமாரசாமி நலன்புரிப் பாடசாலை ஆகியவற்றுக்கும் இவை அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

முல்லைத்தீவு கல்வி வலயத்தால் நலன்புரிப் பாடசாலை அதிபர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புக்கு அமைவாக ஒவ்வொரு மாணவர்களிடமிருந்தும் 25 ரூபா தொடக்கம் 70 ரூபா வரை பரீட்சைக் கட்டணமாக அறவிடப்பட்டுள்ளது.

நலன்புரி முகாமில் எவ்வித வசதிகளும் அற்ற நிலையிலும் வருமானம் இல்லாத நிலையிலும் வாழும் எமது பிள்ளைகளிடம் பரீட்சைக் கட்டணத்தை அறவிட்டமையானது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என்று மாணவர்களின் பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நலன்புரிப் பாடசாலைகளில் பரீட்சை எழுதும் மாணவர்களின் நலன்கருதி 'சோ ஆ' நிறுவனத்தால் இலவசமாக காகிதாதிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-410)

## மாற்று இடம் ஒதுக்கும்வரை கோந்தைப்பிட்டி இறங்குதுறை ஜோசப்வாஸ் மீனவருக்கும்

### நீதிமன்றம் உத்தரவு

மன்னார், ஜூலை 19

மன்னார் ஜோசப்வாஸ் நகர் மீனவர்களுக்கு மாற்று இடம் ஒதுக்கப்படும் வரை அவர்கள் தொடர்ந்தும் கோந்தைப்பிட்டி மீன்பிடி இறங்கு துறை முகத்தில் கடற்றொழிலில் ஈடுபடலாம் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இறங்குதுறைமுகம் தொடர்பாக உப்புக்குளம் மீனவர்களுக்கும், ஜோசப்வாஸ்மீனவர்களுக்கும் இருந்த சச்சரவு அடிதடி, வாடி உடைப்பு, ஆர்ப்பாட்டங்கள் என்று மோசமான நிலையை அடைந்தது.

இந்த நிலையில் இது குறித்த வழக்கு கடந்த திங்கட்கிழமை மதியம் மன்னார் நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது , '' ஜோசப்வாஸ் நகர் மீனவர்களுக்கு மாற்று இடம் வழங்கப்படும் வரை தொடர்ந்தும் கோந்தைப்பிட்டிப் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட முடியும். இவர்களுக்கான பாதுகாப்பை மன்னார் பொலிஸார் வழங்க வேண்டும். அத்துடன் வாடி உடைப்பு சம்பவத்தோடு தொடர்புடையவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும்'' என்று நீதிவான் உத்தரவிட்டார். (ங-க-12)

# முன்னாள் போராளிகளின் மீது வன்னியில் பாயும் மர்மநபர்கள்

### பல பகுதிகளில் தொடர்கிறது பதற்றம்

கிளிநொச்சி, ஜூலை 19

**தடுப்பு முகாம்களில் இருந்து புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் ஒன்றிணைக்கப்பட்ட வன்னிப் பகுதியைச் சேர்ந்த முன்னாள் போராளிகளை மர்ம நபர்கள் சிலர் மீண்டும் அவர்களை பிடித்து விசாரணை செய்வதுடன், கடுமையாகத் தாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

நட்டாங்கண்டல், வன்னிவிளான்குளம், பாண்டியன்குளம் போன்ற பகுதிகளில் மோட்டார் சைக்கிள்களில் வந்த மர்மநபர்கள் முன்னாள் போராளிகளின் பட்டியல் ஒன்றை வைத்துக் கொண்டு ஊர்மக்களிடம் அவர்களின் இருப்பிடங்களை விசாரணை செய்துள்ளார்கள். அதன் பின்னர் குறித்த முன்னாள் போராளிகளின் வீடுகளுக்குச் சென்ற மர்மநபர்கள் அவர்களை விசாரணைக்காக குறித்த பகுதியில் உள்ள பாடசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளார்கள்.

அங்கு கடும் தொனியில் அவர்களை விசாரித்தபின் உடல் ரீதியான தாக்குதல்களிலும்மர்மநபர்கள் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் ''உங்களை நாங்கள் விசாரித்தது பற்றியோ அல்லது தாக்கியது பற்றியோ எவரிடமும் முறையிடக்கூடாது அவ்வாறு முறையிட்டால் மீண்டும் தடுப்புக்குச் செல்ல நேரிடும்'' என்று எச்சரிக்கை விடுக்கப்பட்ட பின்னரே முன்னாள் போராளிகள் வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய முன்னாள் போராளிகள் மீதான நடவடிக்கையில் கொழும்பில் இருந்து வந்துள்ள விசேட புலனாய்வுப் பிரிவொன்றே ஈடுபட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

இறுதிப்போரின் போது படையினரிடம் சரணடைந்த போராளிகளை உரிய விசாரணைகளின் பின்னர் தடுப்பு முகாம்களுக்கு அனுப்பி அங்கு அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னரே சமூகத்துடன் ஒன்றிணைக்கப்பட்டனர். இத்தகைய முன்னாள் போராளிகளின் விடுவிப்பு நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் அமைச்சர்களும், படைத்தளபதிகளும் விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் ஏனைய மக்கள் போல இயல்பு வாழ்வில் ஈடுபட எல்லாவித உதவியும் செய்யப்படும் என்றும், அவர்கள் மீதான எந்தவொரு துன்புறுத்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாது என்றும் உறுதிமொழி வழங்கி இருந்தனர்.

ஆனால் தற்போது அத்தகைய வாக்குறுதிகளுக்கு மாறாக சமூகத்தோடு இணைந்து வாழ முற்படும் முன்னாள் போராளிகளை மர்மநபர்கள் அடித்து, விசாரிப்ப தால் வன்னிப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய அச்சநிலை காரணமாக முன்னாள் போராளிகள் பலர் தமது சொந்த இடங்களை விட்டு வேறு இடங்களுக்குச் சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

நட்டாங்கண்டல்பகுதியில் ஆரம்பித்த மர்மநபர்களின் இந்தச் செயற்பாடு தற் போது வன்னிவிளாங்குளம், பாண்டியன்குளம் என்று பரவியுள்ளதால் இனி தமது ஊர்களிலும் இத்தகைய நிலை ஏற்படுமோ என்ற அச்சம் வன்னி மக்களிடையே தோன்றியுள்ளது. (ங-6)

## புனரமைக்கப்படாத வீதியால் சிரமம்

துணுக்காய்,ஜூலை 19

மாந்தை கிழக்கு நட்டாங்கண்டல் பிரதான உள்ளக வீதி புனரமைக்கப்படாமல் உள்ளதால் மக்கள் பயணம் மேற்கொள்வதில் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இங்கு மக்கள் குடியமர்ந்து மூன்று ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. ஆனால் இந்த வீதி இன்னமும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது.

மேலும் நட்டாங்கண்டலில் மகப்பேற்று நிலையமொன்றும் இயங்கி வருகின்றன. பாண்டியன்குளத்திலிருந்து நாட்டாங்கண்டல் சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளதால் மகப்பேற்று நிலையத்துக்கு இந்த வீதியூடாகச் செல்வோர் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் நோயாளர்களை அம்புலன்ஸ் வண்டி மூலம் மல்லாவி வைத்தியசாலைக்கு இந்த வீதியூடாக எடுத்து வருவதிலும் அதிக சிரமங்கள் காணப்படுகின்றன.

எனவே மழை காலத்துக்கு முன்னர் இந்த வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-415)

## கிணற்றில் கைக்குண்டுகள்

கிளிநொச்சி, ஜூலை 19

*கிளிநொச்சி விவேகானந்த நகர்ப் பகுதியிலுள்ள ஒருவர் தமது காணியில் இருந்த பழைய கிணறு ஒன்றைத் துப்புரவு செய்ய முயன்றபோது இரண்டு கைக்குண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*கிளிநொச்சி விவேகானந்த நகர்ப் பகுதியில் தமது காணியில் உள்ள பழைய கிணறு ஒன்றை ஒருவர் துப்புரவு செய்ய முயன்றுள்ளார். அப்போது அதற்குள் இரு கைக்குண்டுகள் காணப்பட்டுள்ளன. இது தொடர்பாக அந்தப் பகுதி இராணுவத்தினருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)*



கோந்தைப்பிட்டி இறங்குதுறையை ஜோசப்வாஸ் நகர் மீனவரும் பயன்படுத்தலாம் என்று மன்னார் நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிராக நீதிமன்றுக்கு முன்னால் உப்புக்குளம் மீனவர்களும் மக்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது பெருமளவு பொலிஸார் நீதிமன்றின் முன்னால் குவிக்கப்பட்டிருந்தனர். (ங-12)

## மருத்துவர்கள் சிகிச்சையளிப்பதுடன் நிற்காமல் நல்ல நூல்களையும் வெளியிட வேண்டும்

### முல்லை அரச அதிபர் வேண்டுகோள்

முல்லைத்தீவு,ஜூலை19

மருத்துவர்கள் சிகிச்சையளிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது மக்களை வளப்படுத்தும் வகையிலான நூல்களையும் ஆக்கங்களையும் வெளியிட முன்வரவேண்டும். - இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

மருத்துவர் ச.சிவதாஸ் எழுதிய 'நலமுடன்' எனும் நூல் வெளியீட்டு விழா கடந்த 16 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்புரையாற்றும் போதே முல்லைத்தீவு அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

> சிவதாஸ் இலக்கியம், புகைப்படத்துறை, சமூக சேவை என்பவற்றிலும் அர்ப்பணிப்போடு செயற்படுகிறார்

மக்கள்கடவுளுக்குஅடுத்தபடியாக மதிப்பது மருத்துவர்களைத் தான். எனினும் தமது வேலைப்பளு காரணமாக மருத்துவச் சேவைக்குள் மூழ்குவதால் ஏனைய துறைகளில் மருத்துவர்கள் நாட்டம் காட்டுவது குறைவு. இதனால் அவர்களது வெளிப்பாடுகள் தெரியவராமலே போகின்றன. எனினும் சிவதாஸ் வித்தியாசமானவர். அவர் ஒரு மனநல வைத்திய நிபுணர் என்பதையும் தாண்டி இலக்கியம், புகைப்படத்துறை, சமூக சேவை என்பவற்றிலும் அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருகிறார் - என்றார்.

இந்த நிகழ்வில் இந்தியாவில் இருந்து வருகை தந்த மனநலத்துறைத் தலைவரும் ஸ்ரான்லி மருத்துவக் கல்லூரியின் பேராசிரியருமான ம.திருநாவுக்கரசு, வவுனியா பொது வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி த.சத்தியமூர்த்தி, வைத்திய அதிகாரி ஜெயராஜ், கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ங-க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி பெரும் காற்று; அதற்குமுன் நிற்குமா மரம்?

### ஹக்கீமுக்கு பிள்ளையான் சவால்

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ ஒரு பெரும் காற்று. அந்தக் காற்றுக்கு முன் மரம் நிற்குமா?

-இவ்வாறு நேற்றுக் கேள்வி யெழுப்பினார் ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணியின் கிழக்கு மாகாண முதலமைச் சர் வேட்பாளரும், முன்னாள் முதலமைச்சருமான சிவநேச துரை சந்திரகாந்தன்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கி ரஸ் கிழக்கு மாகாணத்தில் தனித்துப் போட்டியிடுவது தொடர்பில் கருத்து வெளி யிட்ட அவர், மேலும் கூறி யவை வருமாறு:-

தனித்துப் போட்டியிட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங் கிரஸ் எடுத்துள்ள முடிவு அவர்களின் தனிப்பட்ட கட் சியின் முடிவு. அதனை விமர் சிக்க நான் விரும்பவில்லை. ஆனாலும், அவர்கள் தனியே சென்று கேட்பது அரசின் வெற்றியைப் பலவீனப் படுத்தாது. அரசுதான் மீண் டும் கிழக்கு மாகாணசபை யைக் கைப்பற்றும். மீண்டும் முதலமைச்சரை அரசுதான் நியமிக்கும். இதில் துளி யளவு சந்தேகமும் உங்க ளுக்கு வரக்கூடாது. - என் றார் சந்திரகாந்தன்.

## பறந்தது புலிக்கொடி

01 களை இடைமறிக்கவோ கைது செய்யவோ இல்லை. கவனவீர்ப்புப் போராட்டம் பகல் 11 மணிக்கு ஆரம்பமாகி விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண் டிருக்கையில் சுமார் 15 நிமிடங்கள் கடந்த நிலையில் இரு மோட்டார் சைக்கிள்களில் கொடிகாமம் வீதி வழியாக பஸ் நிலையத்துக்குள் நுழைந்தனர். இரு மோட்டார் சைக்கிள் களிலும் தலா இருவர் கறுப்பு ஜக்கட்டுக்கள் மற்றும் மூடிய ஹெல்மட்டுக்களை அணிந்தவாறு இருந்தனர். அவர்களின் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்தவர்கள் ஆளுக்கொரு புலிக்கொடியை உயர்த்திப்பிடித்தவாறு இருந்தனர்.

கொடிகாமம் வீதிப்பக்கம் இருந்து வந்த புலிக்கொடி ஏந்திய இரு மோட்டார் சைக்கிள்களும் பஸ் நிலையத்தின் கிழக்குப் பக்கமாக (கொடிகாமம் வீதி) வந்து வடக்குப் பக்க மாக யாழ். வீதிக்குத் திரும்பாமல் நிலையத்தின் மேற்குப் பக்கமாகச் சென்று பின்னர் போராட்டக் காரர்கள் குழுமிநின்ற தெற்குப் பக்கமாகத் திரும்பி அவர்களுக்குப் பின்பக்கமாகச் சென்று மீண்டும் கொடிகாமம் நோக்கிச் சென்று மறைந்து விட்டனர். இவ்வாறு செல்லும்போது அவ்விடத்தில் நின்ற வயோதிபர் ஒருவரை இவர்கள் தள்ளி வீழ்த்தி விட்டுச் சென்ற தாகத் தெரிவிக்கப்பட்டது. (த-8-253-86)

## மு.கா.வின் அதிரடியால் ஆதரவாளர்கள் மகிழ்ச்சி

01 சேர்ந்த ஆதரவாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் பட்டாசு கொளுத்தி தமது மகிழ்ச்சியை வெளிக் காட்டியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டி யிட வேண்டும் அல்லது எம்முடன் இணைந்து போட்டியிட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்படப் பல அரசியல் தலைமைகள் கடந்த ஒரு வாரகாலமாக வேண்டு கோள் விடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்து போட்டியிடத் தலைவர் ஹக்கீம் எடுத்த முடிவு தமிழ் மக்களுக்கு இழைக் கின்ற துரோகம் என்ற விமர்சனமும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு தலைமைகளிடமிருந்தும், ஐக்கிய தேசியக் கட்சி பிரதிநிதிகளிடமிருந்தும் வந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், கிழக்கு மாகாண சபைத்தேர்தலின் பின் அரசு டன் இணைந்து ஆட்சியமைக்குமா அல்லது தமிழ்த் தேசி யக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைக்குமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

## தப்பிவிட்டார் ஹக்கீம்

01 இந்த முடிவை மக்களின் நலன்கருதி எடுக்கப் பட்ட முடிவாகவே நாம் கருதுகிறோம். தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் தமிழர்களும், முஸ்லிம்களும் இணைந்து செயற் படவேண்டுமென்பதில் நாங்கள் மிகவும் உறுதியாக உள்ளோம். நாங்கள் இணைந்து செயற்படுவது வேறு எவருக் கும் எதிரான ஒரு விடயமாகக் கருதப்படக்கூடாது. இரண்டு இனங்களுக்கும் ஏற்படும் நன்மை கருதி நாம் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும். இந்த விடயத்தில் நாங்கள் எப்போதும் தாராளமாக நடப்போம்." - இப்படிக் குறிப்பிட்டார் சம்பந்தன் எம்.பி.

## உதயன் மீது சி.ஐ.டி. விசாரணை

01 குற்றப்புலனாய்வுப் பிரிவுனர் தெரிவித்தனர். கொழும்பிலிருந்து வந்த இரு அதிகாரிகள் அடங் கிய குழு சுமார் மூன்று மணி நேரம் உதயன் பத்தி ரிகை ஆசி ரியரை யாழ். பொலிஸ் நிலையத்தில் உள்ள குற்றப்புலனாய் வுப் பொலிஸ் பிரிவில் வைத்து விசாரணை நடத்தியது.

ஆசிரியரிடமிருந்து வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டு மேல் நடவடிக்கைகளுக்காக அதனை சட்டமா அதிபர் திணைக் களத்துக்கு சமர்ப்பிக்கவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

## 'டெசோ'வில் பங்குகொள்வதா? ஆராய்கிறார் சம்பந்தன்

01 பந்தன் தெரிவிக்கையில், இந்த மாநாடு ஓகஸ்ட் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கு போதிய கால அவகாசம் உள்ளது. இதுகுறித்து நாம் கவனமாக ஆராய் கிறோம். நாம் அவசரப்பட்டு தீர்மானம் மேற்கொள்ள வேண் டிய அவசியமில்லை'' என்றார்.

தனக்கு வழங்கப்பட்டுள்ள அழைப்பிதழில், இந்த மாநாடு இலங்கையில் தனிநாடொன்றை உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடலெனக் குறிப்பிடப்படவில்லை எனவும் சம்பந்தன் கூறினார். வடக்கு-கிழக்கில் போதிய சுயாட்சியுடன் சுயமதிப்புடனும் சுயகௌரவத்துடனும் தமிழ் மக்கள் வாழ்வதற்கான உரிமைகள் குறித்த கலந்துரையாடல் என்றே அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித் தார். (த)

## நிமலரூபனின் இறுதிச்சடங்கு கௌரவமாக நடக்கவேண்டும்

01 தாக்கல்செய்திருந்த மனு மீதான பரிசீலனையின் போதே, உயர்நீதிமன்றம் இவ்வாறு அறிவித்துள் ளது. இந்த மனுமீதான விசாரணையின்போது கருத்து தெரிவித்த அரசதரப்பு வழக்குரைஞர், இந்த மரணச்சடங் கினை சில சக்திகள் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற் படுத்தும் விதத்தில் பயன்படுத்தக்கூடும் என்று கூறியி ருந்தார்.

எனினும் நிமலரூபனின் பெற்றோர், சட்டத்தை நடை முறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி, மரணச்சடங்கை சுமுமாக நடத்த இணக்கம் தெரிவித்தால் உடலை ஒப்படைப்பதற்கு ஆட்சேபம் தெரிவிக்கப்படமாட் டாது என்றும் அரசதரப்பு வழக்குரைஞர் தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர், வழக்கு விசாரணையை வரும் 20ஆம் திகதி வரை ஒத்திவைத்த தலைமை நீதியரசர் ஷிராணி பண் டாரநாயக்க, மரணச்சடங்கினை வவுனியாவில் நடத்து வதற்கு அனுமதி வழங்குவது குறித்த அரசின் இறுதி தீர்மா னத்தை அறிவிக்குமாறு உத்தரவிட்டார். (த)

## அரசின் அடாவடித்தனத்தை எதிர்த்து நெல்லியடியில் நேற்றுப் போராட்டம்

01 தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் தேசிய ஜனநாயக மார்க்ஸிஸ்ட் லெனின் கட்சியின் தலை வரான சி.கா.செந்திவேல் தலைமையிலான அணி குறிப்பிட்ட தொகை ஆதர வாளர்களுடன் மஞ்சள் நிற அட்டையில் சிவப்பு நிறத் தில் எழுதப்பட்ட தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் சுலோக அட்டைகள், பெரிய பதாகைகளுடன் வந்து இணைந்துகொண்டனர். இவர் களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், தமி ழரசுக் கட்சியின் கொழும்பு மாவட்ட கிளைச் செயலாளர் ந.வித்தியாதரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம் பலம், செ.கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநா தன், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆர்.இ.ஆனந்தராஜா, பருத்தித் துறை முன்னாள் நகர பிதா வின்சன் டி போல், கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசு, வல்வெட் டித்துறை நகரசபைத் தலை வர் ந.அனந்தராஜ், மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்ன ணியின் ஊடகப் பேச்சாள ரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான பாஸ்கரா, விக்கிரமபாகு கருணாரட்ன தலைமையிலான நவசமச மாயக் கட்சியைச் சேர்ந்த விஜயசிங்க, மதகுரு வண. சக்திவேல் மற்றும் கரவெட் டிப் பிரதேச சபை உறுப்பினர் கள் உட்பட பெருந்தொகை யான ஆண்கள், பெண்கள் கலந்துகொண்டு சுலோக அட்டைகளைத் தாங்கிய வாறு இடைவிடாது தமிழி லும் சிங்களத்திலும் கோஷங் களை எழுப்பினார்கள்.

எமது பிள்ளைகளை விடு தலை செய், எமது நிலம் எமக்கே வேண்டும், எமது நிலத்தைப் பறிக்காதே, இராணுவமே வெளியேறு, சிறைக் கைதிகளை சித்திர வதை செய்யாதே ஆகிய வாசகங்களையும் நிமலரூபன் படுகொலை, சிறைச்சா லைத் தாக்குதல்களுக்கு விசாரணை வேண்டும், படுகொலைகளை நிறுத்து, அரசியல் கைதிகளை விடு தலை செய். நில ஆக்கிர மிப்பை நிறுத்து ஆகிய வாச கங்களையும் கொண்ட பெரிய பதாகைகளை போராட் டத்தில் ஈடுபட்டோர் தாங்கி நின்றனர்.

போராட்டம் நடை பெற்ற பகுதி எங்கும் பெரும் எண்ணிக்கையான பொலி ஸாரும் படையினரும் குவிக் கப்பட்டிருந்தனர். கலகம் அடக்கும் பொலிஸாரும் தயார்நிலையில் இருந்தனர். போராட்டம் நடைபெற்ற பகுதியூடாக சென்ற வாக னங்கள் பொலிஸாரால் சோத னையிடப்பட்டதுடன் அவற் றில் பயணித்த மக்களும் விசா ரணைகளுக்கு உட்படுத் தப்பட்டனர். (த-8-253)

## மன்னார் நீதிமன்றத்தின் முன் உப்புக்குளம் மக்கள் ஆர்ப்பாட்டம்

01 மன்னார் உப்புக்குளம் கோந்தைப்பிட்டி மீன்பிடி இறங்கு துறைமுகத்தினுடாக கடல் தொழிலில் ஈடுபட முடியும் என கடந்த திங்கட்கிழமை மன்னார் நீதி மன்றம் ஜோசப்வாஸ் நகர் மீனவர்களுக்கு அனுமதி வழங் கியதைத் தொடர்ந்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னார் உப்புக்குளம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் நேற்று புதன் கிழமை காலை தமது வர்த்தக நிலையங்களை மூடிய நிலை யில் மன்னார் நீதிமன்றத்திற்கு செல்லும் பிரதான வீதிக்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முதலில் காலை 9.30 மணி தொடக்கம் மன்னார் சதோசா விற்பனை நிலையத்திற்கு முன் வீதிக்கு இருமருங்கிலும் நின்று தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதனால் போக் குவரத்துக்கு எவ்வித இடையூறுகளும் ஏற்படவில்லை.

இந்த நிலையில் மு.ப. 11 மணியளவில் மன்னார் நீதி மன்றத்திற்குச் செல்லும் பிரதான வீதியை முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன் போது ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என ஆயிரக்கணக்கான உப்புக்குளம் வாழ் மக்கள் கலந்து கொண்டு பதாகைகளை ஏந்தி தமது எதிர்ப்பை வெளிப் படுத்தினர்.

இதனால் நீண்ட நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந் தது. மன்னாரில் இருந்து வெளி இடங்களுக்கும், வெளி இடங்களில் இருந்து மன்னாருக்கும் செல்ல வேண்டிய பஸ்கள் நீண்ட நோரம் தரித்து நின்றன.

இதனால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

இந்த நிலையில் நூற்றுக்கணக்கான பொலிஸாரும், கலகம் அடக்கும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்த நிலை யில் பொலிஸார் குறித்த ஆர்ப்பாட்டக்காரர்களை வெளி யேற்ற முயற்சி செய்த நிலையில் பொலிஸாருக்கும் ஆர்ப் பாட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

இதன் போது கலகம் அடக்கும் பொலிஸார் மேற் கொண்ட கண்ணீர் புகைக்குண்டு பிரயோகம் மற்றும் தடிய டித் தாக்குதலைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலி ஸார் மீது கல்வீச்சுத்தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனால் சுமார் இரண்டு மணி நேரம் நீதி மன்றம் சார்ந்த பகுதி உட்பட மன்னார் பஸார் பகுதியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

இதன்போது பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகைக்குண்டுத் தாக்குதல் மற்றும் தடிகளினால் தாக்கினர்.

இதன் போது பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் எனப் பலர் காயமடைந்தனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸார் மீது கல்வீசி தாக்குதலை நடத்தினர்.

மேற்படி சம்பவத்தின் போது மூன்று பொலிஸாரும், இரண்டு ஆர்ப்பாட்டக்காரர்களும் கடும் காயங்களுக்கு உள் ளான நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 8 பேரை மன்னார் பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

தற்போது மன்னார் நீதிமன்றம், பஸார் பகுதி மற்றும் உப்புக்குளம், கோந்தைப்பிட்டி ஆகிய இடங்களில் இராணு வத்தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர். மாலை 2 மணிக்கு பின்னர் போக்குவரத்துக்கள் வழமைக்குத் திரும்பின. (ங-12)

## கிழக்கில் மு.கா. தனி வழி அமைச்சர் ஹக்கீம் அதிரடி

01 தொடர்பாக முன் வைக்கப்பட்ட நிபந்தனைகளை அரசு ஏற்க மறுத்ததையடுத்தே மு.கா. இத்தீர்மானத்துக்கு வந்ததாக அக்கட்சியின் உயர்மட்டப் பிரமுகர்கள் 'உதயனி'டம் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் மிக நீண்ட நேரம் பேச்சுகளில் ஈடுபட்டபோதி லும், அப்பேச்சு வெற்றிய ளிக்கவில்லை. இதனை யடுத்தே அதிரடியாக மு.கா. தனித்துப் போட்டியிடத் தீர்மானித்தது.

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் மு.கா. தனது மரச்சின்னத்தில் தனித்துப் போட்டியிடுகிறது. எனினும், மு.கா. மத்திய அர சுக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்ளவில்லை யென அக்கட்சியின் பேச்சா ளர் ஒருவர் தெரிவித்தார்.

அரசின் இணக்கப்பாட் டுடனேயே நாம் கிழக்கில் தனித்துப் போட்டியிடுகின் றோம். கிழக்கில் நாம் பெறும் ஆசனங்களைக்கொண்டு அரசிடம் பேரம்பேசி கிழக்கு மாகாணசபையை ஐ.ம.சு.மு வுடன் இணைந்து ஆட்சி அமைப்போம் என்றும் அப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

பரபரப்புமிக்க குறித்த அதிரடி முடிவுடன் மு.கா. தலைமையகம் வந்தடைந்த அமைச்சர் ரவூப் ஹக்கீமை மு.கா. நாடாளுமன்ற உறுப் பினர்கள், உயர்பீட உறுப்பி னர்கள் மற்றும் போராளிகள் ஆகியோர் பெரும் காகோ ஷம் செய்து நாரேதக்பீர் முழக் கத்துடன் கட்டியணைத்து முத்தமழை பொழிந்து வரவேற் றதைக் காணமுடிந்தது.

இதன் பிற்பாடு மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம், தவிசாளர் பஷீர் சேகுதாவூத் மற்றும் செயலாளர் நாயகம் ஹசனலி ஆகியோரின் முன் னிலையில் மூன்று மாவட் டங்களிலும் போட்டியிடும் வேட்பாளர்கள் தத்தமது மாவட்ட வேட்பு மனுக் களில் கைச்சாத்திட்டனர்.

மு.கா. தனது வேட்பு மனுக்களை இன்று மூன்று மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் சமர்ப்பிக்கத் திட்ட மிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஊழலும் குற்றச் செயல்களும் ஒழியும் காலம் வாராதோ!

வசதி படைத்த குடும்ப உறுப்பினர்களை தொலைபேசி மூலம் பயமுறுத்தி பணம் பறிப்பதில் ஈடுபட்டு வந்துள்ள கும்பல் ஒன்றை மிரிஹான பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளார்கள் என்ற செய்தி இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகக் கூடும் என்று உள்ளூர அஞ்சிக் கொண்டிருந்த அனேகருக்கு ஆறுதலாக இருக்கக் கூடும். மிரிஹானவில் மட்டுமல்ல நாட்டின் பல பகுதிகளிலும் இவ்வாறான சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டு வந்தவர்கள் பிடிபட்டிருக்கிறார்கள் என்பது செய்தி.

கொழும்பு குற்றப்பிரிவு பொலிஸார் விமானப்படை விங் கொமாண்டர் பதவி வகிக்கும் ஒருவரை கைது செய்திருக்கிறார்கள். அவர் மீதான விசித்திர குற்றச்சாட்டு என்னவென்றால் ஜனாதிபதியின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக் ஷவைப் போல் விமானப் படைத் தளபதியுடன் தொடர்பு கொண்டு பேசி, தமக்கு கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு இடமாற்றம் கிடைக்க வழி செய்வதற்காக நபர் ஒருவரை ஏற்பாடு செய்திருந்தமையாகும். விமானப்படைத் தளபதி தமக்கு வந்த தொலைபேசி அழைப்பில் சந்தேகம் கொண்டு பொலிஸாருக்கு அறிவித்ததில் விங் கொமாண்டர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டார்.

இது ஒரு விதம். இதைவிட யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பொலிஸார் மீது யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு பாரதூரமானது. யாழ்ப்பாணத்தில் கடமை புரியும் பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு இங்குள்ள வர்த்தகர்கள் மாதம் தோறும் பெருமளவில் இலஞ்சம் வழங்க வேண்டிய நிலைமை இருப்பதாகவும், யாழ்.பிரதேச பொலிஸ் நிலையங்களுக்குப் பொறுப்பதிகாரிகளாக வருவதற்கு பொலிஸ் அதிகாரிகள் பெரும் போராட்டமே நடத்துகிறார்கள் என்றும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இலஞ்ச மற்றும் ஊழல் புலனாய்வு ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்குரிய எரிபொருள் வழங்குவது தொடர்பான பிரேரணையின் போது பேசுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் இந்தக் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருக்கிறார். அரசு சார்ந்த கட்சி ஒன்றின் உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான சந்திரகுமார் யாழ்ப்பாண பொலிசாரின் நடத்தைகள் தொடர்பாக வெளிப்படுத்தியுள்ள இந்தக் குற்றச்சாட்டுக்களை அரசும் இத்துறைக்குப் பொறுப்பான அமைச்சரும் அதிகாரிகளும் எழுந்தமானமாக எடுத்து ஒதுக்கிவிடமுடியாது. ஏனென்றால் பொறுப்புள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் குற்றச்சாட்டுக்கள் இவை.

பணம் படைத்தவர்களை தொலைபேசி மூலம் அச்சுறுத்தி பெருந் தொகைப் பணத்தைத் தாம் கூறும் வங்கிகளில் வைப்பிடும் படி கோரிக்கை விடுத்தார் என்ற குற்றச்சாட்டில் மிரிஹானாவில் கைது செய்யப்பட்டவரை பொலிஸார் விசாரித்த போது இந்த விதமான கொள்ளைச் சம்பவத்தில் மகர சிறையில் 36 வருடச் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் ஒருவரும் சம்பந்தப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளதாம்.

வர்த்தகர் ஒருவர் பொலிஸில் தெரிவித்துள்ள புகாரின்படி தமக்கு வந்த தொலைபேசி மிரட்டலில் குறித்த ஒரு வங்கியின் ஒரு கணக்கில் 50 ஆயிரம் ரூபாய் வைப்பிலிடும்படி கூறப்பட்டுள்ளது. இல்லையெனில் சர்வதேச கல்லூரியொன்றில் கல்வி கற்கும் அவரது மகள் கடத்தப்படுவார் என்றும் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. அடுத்தநாளும் அதேவிதமான ஒரு தொலைபேசி அழைப்பில் மேலும் 30 ஆயிரம் ரூபாய் வங்கியில் அதே கணக்கில் வைப்பிடும்படி தமது மனைவிக்குத் தெரிவிக்கப்பட்டதாக அவர் கூறியிருக்கிறார். அதன்பேரிலேயே பொலிஸில் முறையிட அவர் முடிவு செய்தராம்.

தொலைபேசியில் மிரட்டிய நபர் குறித்த வங்கியில் பணத்தை எடுப்பதற்கு வந்த போது பொலிஸார் மறைவாகக் காத்திருந்து கைது செய்தார்கள். இலகு வாகப் பணம் சம்பாதித்து பணக்காரர் ஆகிவிட வேண்டும் என்ற எண்ணம் இப்பொழுது பெரும்பாலும் எல்லா மக்களிடமும் காணப்படுகின்றது. உத்தியோக பதவிகளில் இருப்பவர்கள் மேற் பதவிக்கு வருவதற்குக் குறுக்கு வழிகளில் முயல்கிறார்கள். இன்னும் பலர் பெரும் அளவில் பணம் சம்பாதித்துக் கொள்வதற்கும் வீடுவாசல்கள், சொத்து சுகங்களைத் தேடிக் கொள்வதற்கும் இலஞ்சம், ஊழல் என்று குறுக்கு வழிகளை நாடுகிறார்கள். வேறும் பலர் களவெடுப்பதையும் கொள்ளையடிப்பதையும் அச்சுறுத்திப் பணம் பறிப்பதையும் தமது தொழிலாகக் கொண்டு விடுகிறார்கள். இது ஒருகலாசாரமாகவே இன்று வளர்ந்து வருகிறது.

பொதுசேவைகளில்- அரச சேவையாய் இருந்தாலென்ன, தனியார் துறையாய் இருந்தாலென்ன பணத்தின் மீது குறிவைக்காத மனிதரைக் காணமுடியாமல் இருக்கிறது. கோயில்களில் கொள்ளையடிப்பவர்கள், ஏன் சுவாமி சிலைகளையே தூக்கிச் சென்று விற்பவர்கள்பெருகிவிட்டார்கள்.

இதற்கெல்லாம் காரணம் என்ன, எமது கல்வியில், அரசியல் முறையில், சமூக அமைப்பில் ஏன் சமய விழுமியங்களிலும் கூட எங்கோ, ஏதோ தவறு அல்லது குறை இருக்கிறது. இதனைக் கண்டுபிடித்து நாட்டையும் மக்களையும் நல்வழியில் அழைத்துச் செல்ல ஒரு மகான் தோன்ற மாட்டாரா என்ற எண்ணம் தோன்றுகிறது.

அந்த மகான் இந்த நாட்டையும் மக்க ளையும் நல்வழியில் திருப்பி முன்னேற்ற வேண்டும். ஆனால் அப்படி யான ஒரு மகான் இந்த நூற்றாண்டில் அதுவும் இந்த நாட்டில் தோன்றுவார்- தோன்றும் பாக்கியம் இருப்பதாகத் தெரியவில்லை.

### யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களில்

# மிதிவெடி அகற்றிய பகுதிகள் கையளிக்கத் தயார் நிலையில்

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாணத்தில் 85 ஆயிரத்து 731 சதுர மீற்றர் பரப்பளவிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் 2 லட்சத்து 14 ஆயிரத்து 840 சதுர மீற்றர் பரப்பளவிலும் மிதிவெடி அகற்றி முடிக்கப்பட்டு அவை கையளிக்கப்படுவதற்குத் தயார் நிலையில் உள்ளதாக யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் வ.முருகதாஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தெல்லிப் பழைப் பிரதேச செயலர் பிரிவின் ஜே/228 கிராம சேவகர் பிரிவில் புற்றுநோய் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள காணியில் 22 ஆயிரத்து 559 சதுர மீற்றர் பரப்பளவு துப்புரவு செய்யப்பட்டுக் கையளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் 18 கண்ணிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் ஒட்டுப் பேலி (ஜே/330) கிராம அலுவலர் பிரிவில் 54 ஆயிரத்து 411 சதுர மீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் 2 ஆயிரத்து 417 கண்ணி வெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

இதேபோன்று எழுதுமட்டுவாழ் பகுதியில் 31 ஆயிரத்து 320 சதுர மீற்றர் பரப்பளவில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன. இந்தப் பகுதியில் 16 வெடிக்காத வெடி பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 6 பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளன. பொன்நகர், ஸ்கந்தபுரம் , மலையாளபுரம், உருத்திரபுரம், செல்வா நகர் ஆகிய பகுதிகளில் 1 லட்சத்து 24 ஆயிரத்து 388 சதுர மீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளில் 462 ஆயிரம் கண்ணி வெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

இதனைவிடக் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் கோரக்கன் கட்டுப் பகுதியில் 84 ஆயிரத்து 176 சதுர மீற்றர் பரப்பில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளில் 101 கண்ணிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

பரந்தன் சந்திக்கு அண்மையில் வைத்திலிங்கம் கமம் பகுதியில் 5 ஆயிரத்து 976 சதுர மீற்றர் பரப்பில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதுடன் 15 கண்ணிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசங்கள் விரைவில் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(த-5)

## 9 வருடங்களின் பின் வெற்றிடம் நிரப்பல்

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ். போதனா வைத்தியசாலையில் எக்ஸ்ரே பிரிவுக்கான அத்தியட்சகர் பதவி வெற்றிடம் கடந்த ஒன்பது ஆண்டுகளின் பின்னர் நிரப்பப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிய என். லோகநாதன் இந்தப் பிரிவில் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டு தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த எக்ஸ்ரே பிரிவில் அத்தியட்சகராகக் கடமையாற்றி வந்த இரவீந்திரன் கடந்த 2003 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்றுச் சென்றார்.

கடந்த ஒன்பது ஆண்டு காலமாக இந்தப் பதவிக்கு ஒருவரும் நியமிக்கப்படாத நிலையில் இது வெற்றிடமாக இருந்து வந்துள்ளது.

(ம-17)

## தொழில்சார் வினைத் திறனை மேம்படுத்தும் கருத்தமர்வுகள்

### பிரதேச ரீதியாக சுழற்சி முறையில்

குருநகர், ஜூலை 19

வடக்கு, கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளை தமது சங்க அங்கத்தவர்களது தொழில்சார் வினைத் திறனை மேம்படுத்தும் நோக்குடன் அவர்களுக்கு அலுவலக நிர்வாக நடைமுறைகள், நிதிப் பிரமாணங்கள், தொழில்சார் மருத்துவ சமூக உளவியல், மொழித்தேர்ச்சி ஆகிய விடயங்களில் பிரதேச ரீதியாக சுழற்சி முறையில் கருத்தமர்வுகளை நடத்தவுள்ளது.

இதற்கான நடவடிக்கை எடுத்து வருவதாக இந்த சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளைத் தலைவர் க.சம்ஸநாதன் வடமாகாணத்தில் இயங்கும் ஆதாரவைத்தியசாலைத் தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கருத்தமர்வுகள் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, சங்கானை, அச்சுவேலி, சாவகச்சேரி ஆகியவைத்தியசாலைகளில் பிரதி சனிக்கிழமைகளில் மூன்று மணித்தியாலங்களுக்கு நடத்தப்படவுள்ளது.

நிறுவனங்களின் அத்தியாவசிய சேவைக்கு இடையூறு ஏற்படாதவாறு அங்கத்தவர்களுக்கு கடமை லீவு அனுமதி பெற்று இந்த செயலமர்வு நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரியப்படுத்தியுள்ளார். (ம-51)

## இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 19

சுதுமலை அருள்மிகு எச்சாட்டி வைரவர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம், வருடாந்த திருவிழா ஆகியவற்றை முன்னிட்டு ''அப்பனே வைரவா'' என்னும் இசை இறுவட்டு வெளியிடப்பட்டுள்ளது.

ஆலய முன்றிலில் தொழிலதிபர் இ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்தவிழாவில் ஓய்வு பெற்றநீதிபதி மு.திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறப்புவிருந்தினராக வைரவர் ஆலய அறங்காவலர் சபை உறுப்பினர் செல்வி ரோகினி பேராயிரவன் கலந்து கொண்டார்.

(ம-115)

## யாழ்.பல்கலைக்கழக சர்வதேச ஆய்வு மாநாடு

### வெள்ளியும், சனியும் இடம்பெறும்

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாடு முதல் தடவையாக யாழ்.பல்கலைக் கழகத்தில் நாளை வெள்ளிக் கிழமையும் நாளை மறுதினம் சனிக் கிழமையும் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் சிறி சற்குணராஜா இணைப்பாளராக செயற்படும் இந்த மாநாட்டில் பல்கலைக்கழகத்தின் பல்வேறு பாடங்களையும் உள்ளடக்கி குழுக்கள் ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்ட பல ஆய்வாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டில் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதுடன் களனி பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சரத் அமுனுகம பிரதான உரை நிகழ்த்தவுள்ளார்.

300 இற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்படுவதுடன் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனம் சார் ஆய்வாளர்களும், இந்தியா, பிரித்தானியா, அமெரிக்கா போன்ற பல நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்களும் கலந்து கொண்டு பல்துறை சார்ந்த ஆய்வு சிறப்புரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

இந்த மாநாட்டின் 650 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்ள இருப்பதால் அனைத்து பீட விரிவுரையாளர்களும் மாணவர்களும் போதனை சாரா ஊழியர்களும் பல நன்மைகளைப் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-14)

## உற்பத்தியை அதிகரிக்க மா மரம் கத்தரித்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 19

உணவு விவசாய நிறுவனத்தின் திட்டத்துக்கு அமைவாக நல்லூர், உரும்பிராய் ஆகிய விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் மாமரங்களை கத்தரித்தலும், பயிற்றுவித்தலும் திட்டம் விவசாய திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. மாமரங்களைக் கத்தரித்து மாமரங்களின் உற்பத்தியையும், தரத்தையும் மேம்படுத்தும் நோக்குடன் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியத்தின் திட்டத்தில் விவசாயத் திணைக்களத்தால் பயிற்றப்பட்ட இளைஞர்கள் கத்தரிக்கும் செயற்பாட்டை மேற்கொள்ளவுள்ளனர்.

நல்லூர் பிரிவில் 200 மாமரங்களும், உரும்பிராய் பிரிவில் 400 மாமரங்களும் கத்தரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதால் ஆர்வமுடைய நல்லூர் பிரிவு விவசாயிகள் பருத்தித்துறை வீதி, சங்கிலியன் சிலையடியில் அமைந்துள்ள விவசாய போதனாசிரியர் பிரிவிலும், உரும்பிராய் பிரிவு விவசாயிகள், கோப்பாய் கிருஷ்ணர் கோயிலடியில் அமைந்துள்ள விவசாய போதனாசிரியர் பிரிவிலும் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

மாமரங்களை கத்தரிப்புச் செய்யும் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் தடுக்கப்பட வேண்டும்

மன்னார்,ஜூலை 19

இந்திய இழுவைப் படகுகளின் வருகையைத் தடுப்பதற்கும் வடக்கு மீனவர்கள் தமது தொழிலைச் சிறப்பாக மேற்கொள்வதற்குமான வழிவகைகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளதாகத் தேசிய மீனவர் ஒத்துழைப்பு பேரவையின் தேசிய இணைப்பாளரான ஏ.ஜேசுதாசன் தெரிவித்தார்.

அண்மையில் வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்தாலோசிக்கும் உயர் மட்டக் கூட்டமொன்று மன்னாரில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போருக்குப் பின்னர் வடக்கு மீனவர்கள் தமது தொழிலைத் திறம்பட மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

தற்போது இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய இழுவைப்படகுகளின்வருகை அதிகரித்துள்ளதால் இவர்கள் தமது தொழிலை உரிய முறையில் மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். அந்த மீனவர்கள் மேலும் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

"இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் என்ற வகையில் நாங்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். சிறு மீனவர்கள், மீன்பிடிச் சங்கங்களின் தலைவர்கள் ஆகியோருடன் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் கலந்தாலோசித்து வருகின்றோம்.

தற்போது இந்திய இழுவைப் படகுகளின் வருகை அதிகரித்துச் செல்கின்றது. இந்தப் பிரச்சினைகளை உடன் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது தொடர்பில் மன்னார் மாவட்டத்திலுள்ள துறைசார் நிபுணர்களையும் மதத் தலைவர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்துள்ளோம்.

இதன்போது இலங்கை அரசுக்கும் பொறுப்புமிக்க அதிகாரிகளுக்கும் எவ்வாறு ஆலோசனைகளை வழங்க முடியும் என்ற தீர்மானங்களை எடுத்துள்ளோம்.

எதிர்காலத்தில் இந்திய இழுவைப்படகுகளின் வருகையைத் தடுப்பதற்கு எமது மீனவர்கள் சிறப்பாகத் தமது தொழிலை மேற்கொள்வதற்குமான வழிவகைகளை உருவாக்குவதற்கான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன- என்றார். (க-12)

# முறையற்ற தெரிவுகளால் மூடிக் கிடக்கும் வீடுகள்

கிளிநொச்சி, ஜூலை 19

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கான நிரந்தர மற்றும் தற்காலிக வீடுகளை வழங்கும் செயற்பாடுகளின்போது பயனாளிகள் தெரிவில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள இயக்கச்சிப் பகுதியில் சுவிஸ் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட சுமார் 15 க்கும் மேற்பட்ட வீடுகள் அதன் உரிமையாளர்கள் மீளக்குடியேறாத நிலையில் பூட்டப்பட்டுக் காணப்படுகின்றன.

இதேவேளை, இந்தப் பகுதியில் 20 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வீட்டு வசதிகள் இன்றித் தறப்பாள் குடிசைகளிலும் தற்காலிக குடிசைகளிலும் பல்வேறு சிரமங்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இதேபகுதியில் அமைக்கப்பட்ட பல தற்காலிக வீடுகளும் ஆள்கள் இன்றியே காணப்படுகின்றன. மேற்படி பகுதிகளைச் சேர்ந்த பலர் கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களில் வசித்து வரும் நிலையில் கிராம அலுவலர் கிராமத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களை விடுத்து வேறு இடங்களில் இருப்பவர்களுக்கு வீட்டுத் திட்டங்களை வழங்கியமையே இவ்வாறு வீடுகள் ஆள்களின்றிக் காணப்படுவதற்குக் காரணமாக அமைகின்றது.

இதேபோன்று கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் டி.ஆர்.சி. நிறுவனத்தால் அமைக்கப்பட்ட சுமார் 40 க்கும் மேற்பட்ட தற்காலிக வீடுகள் ஆள்கள் இல்லாத நிலையில் காணப்படுகின்றன.

இதற்கும் முறையற்ற பயனாளிகள் தெரிவே காரணமாக அமைகின்றன. இவ்வாறு வீட்டு வசதிகள் இல்லாது மழை, வெயில் காலங்களில் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், வயோதிபர்கள் உட்பட பலரும் சிரமப்பட்டு வருகின்றனர். (க-6)

## பால், முட்டை கிடைக்காத ஓமந்தை கோட்ட மாணவர்கள்

வவுனியா, ஜூலை 19

வவுனியா வடக்கு வலயத்தினுள் மாணவர்களுக்குப் பால், முட்டை என்பன வழங்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்களின்போசாக்கை மேம்படுத்தும் வகையில் வவுனியா மாவட்டத்திலுள்ள கல்வி வலயங்களில் நாளாந்தம் பால்,முட்டை என்பன வழங்கப்படுகின்றன. ஓமந்தைக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கும் கல்வி வலயத்தின் அனுசரணையுடன் பால், முட்டை என்பன வழங்கப்படுகின்றன. ஆனால் இங்குள்ள ஒரு சில பாடசாலைகளுக்கு இவை வழங்கப்படவில்லை எனப் பெற்றோரும் மாணவர்களும் குறை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாகப் பெற்றோர்கள் அதிபர்களிடம் விசாரித்தபோது இதற்குத் தேவையான நிதியை இன்னும் கல்வித் திணைக்களம் வழங்கவில்லை என அதிகாரிகள் கூறுவதாகத் தெரிவிக்கப் படுகிறது. (க- 410)

## கிரவலால் மறைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லம்



அக்கராயன், ஜூலை 19

விசுவமடு மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த இடம் கிரவல் மண் குவியல் நிறைந்து காணப்படுகின்றது.

முல்லைத்தீவு - பரந்தன் பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகளுக்காகவே இங்கு கிரவல் மண் குவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மலைக்குன்று போன்று கிரவல் மண் குவிக்கப்பட்டுள்ளதால் மக்கள் இதனை ஆச்சரியத்துடன் பார்ப்பதைக் காணமுடிகின்றது.

விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் துயிலும் இல்லம் முற்று முழுதாக அழிக்கப்பட்டுள்ளது. இந்த இடமே தற்போது கிரவல் மண்ணால் நிறைந்து காணப்படுகின்றது.

தமது பிள்ளைகள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தை இனிமேல் எம்மால் பார்க்கவே முடியாது என்று கூறியவாறு இந்த இடத்தைப் பார்க்கும் சிலர் கதறியழுவதையும் காண முடிந்தது.

இதேவேளை முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் படை முகாம்கள் உருவாக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க-18)

# பருத்தித்துறை – பூநகரி பஸ் சேவைக்கு கோரிக்கை

பூநகரி, ஜூலை 19

பூநகரிப் பிரதேசத்தில் உள்ள அரச திணைக்கள நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளில் கடமையாற்றும் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களின் நலன்கருதி பருத்தித்துறையிலிருந்து பூநகரி வரையிலான பஸ் சேவையை மேற்கொள்ளுமாறு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடக்கு மாகாணப் பொது முகாமையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பூநகரியில் கடமையாற்றும் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து கொடிகாமம் சென்று அங்கிருந்து சாவகச்சேரிக்கு வந்து யாழ்ப்பாணத்திலிருந்து வரும் பூநகரிக்குச் செல்லும் பஸ்ஸில் தினமும் பயணித்து அதே மார்க்கத்தில் மாலையில் திரும்பிச் செல்கின்றனர்.

இந்த உத்தியோகத்தர்களின் நலன்கருதி கிழமை நாள்களிலாவது காலையும் மாலையும் சேவையில் ஈடுபடக் கூடிய வகையில் பருத்தித்துறை சாலையிலிருந்து பஸ்சேவையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# குன்றும் குழியுமாக முல்லை கடற்கரை வீதி

முல்லைத்தீவு நகரிலுள்ள கடற்கரைக்குச் செல்லும் வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

மீளக்குடியமர்வு இடம்பெற்று பெருமளவு மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள போதிலும் இங்குள்ள முக்கிய வீதியான கடற்கரை வீதி புனரமைக்கப்படாத நிலையில் மோசமாகக் காணப்படுகின்றது.

இந்தக் கடற்கரை வீதியைப் பெருமளவு ஊர்திகளும் பொதுமக்களும் தினமும் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் இந்த வீதியைப் புனரமைக்காது புறக்கணித்திருப்பதானது இதனைப் பயன்படுத்துவோருக்குப் பெரும் இடர்களை உருவாக்கியுள்ளது.

இதனால் இந்த வீதியை புனரமைத்துத் தரும்படி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதேவேளை முல்லைத்தீவு நகரின் முக்கிய வீதிகள் பலவும் புனரமைக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன. (க-18)

# இரணைமடு அலைகரைப் பகுதியில் கால்நடைகளைப் பராமரிக்க ஏற்பாடு

பயிர்ச் செய்கைக் காலங்களில் கால்நடைப் பண்ணையாளர்கள் கால்நடைகளைப் பராமரிப்பதற்கு இரணைமடுக் குளத்தின் அலைகரைப் பகுதியில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பயிர்ச் செய்கைக் காலங்களில் கால்நடைகளை வைத்துப் பராமரிப்பதற்குக் கடந்த காலங்களில் இரணைமடுக் குளத்தின் அலைகரைப் பகுதிகள் பயன்படுத்தப்பட்டன.

கடந்த போருக்குப் பின்னரான மீளக்குடியமர்வின் பின்னர் அலைகரைப் பகுதிகளில் கால்நடைகளை மேய்ப்பதற்கு இராணுவத்தினர் தடை விதித்திருந்தனர்.

இதனால் கால்நடைப் பண்ணையாளர்கள் கால்நடைகளைப் பராமரிப்பதில் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இதனையடுத்துக் கால்நடைப் பண்ணையாளர்கள் விடுத்த கோரிக்கை தொடர்பாகக் கிளிநொச்சி மாவட்டப் பொதுமக்கள் தொடர்பாடல் பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.எல்.அரிப்டீன், அம்பாள்நகர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஜெயராசா ஆகியோர் இராணுவத்தினரிடம் கலந்துரையாடி அதற்கான அனுமதியைப் பெற்றுள்ளனர்.

தற்போது சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகளைப் பண்ணையாளர்கள் இரணைமடுக் குளத்தின் அலைகரைப் பகுதிக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இதனால் அதிகளவான கால்நடைப் பண்ணையாளர்கள் பயன்பெறும் வாய்ப்புத் தோன்றியுள்ளது. (க-6)

## வீதி புனரமைப்பு

வவுனியா இறம்பைக்குளம் உமா மகேஸ்வரன் வீதியைச் செப்பனிடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இறம்பைக்குளம் வீதியின் தபால்பெட்டிச் சந்தியிலிருந்து கோயில்குளம் சிவன் கோயிலுக்குச் செல்லும் உமா மகேஸ்வரன் வீதியைப் புனரமைக்கும் பணிகளே தற்போது இடம்பெற்று வருகின்றன. நீண்ட காலமாகவே இந்த வீதி குன்றும் குழியுமாகக் காணப்பட்டதோடு இதனூடாக பயணித்த மக்கள் சிரமங்களையும் எதிர்கொண்டு வந்தனர்.

இது தொடர்பான செய்திகள் பலமுறை வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க- 421)

# அமைச்சரின் வருகையை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த முள்ளிக்குளம் மக்கள்

முல்லைத்தீவு,ஜூலை19

கடந்த சனிக்கிழமை அமைச்சர் வருவார் எனத் தகவல் தெரிவிக்கப்பட்டதால் அமைச்சரை எதிர்பார்த்துக் காத்திருந்த மலங்காடு பகுதியில் மீளக்குடியமர்ந்த முள்ளிக்குளம் மக்கள் ஏமாற்ற[illegible]

மன்னார் முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக மலங்காடு என்னும் பகுதியில் அடர்ந்த காடுகளுக்குள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை அமைச்சர் [illegible] வருவதாக முசலிப் பிரதேச சபைத் தலைவரால் இவர்களுக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டது.

இவர்களும் அமைச்சர் வருகை தந்து உதவிகளைப் புரிவாரென்ற நம்பிக்கையுடன் இரவு 9 மணிவரை காத்திருந்தனர். ஆனால் அமைச்சர் வரலில்லை.

இதனால் தாம் ஏமாற்றமும் மனக்கவலையும் அடைந்ததாக அங்கு கூடியிருந்த சுமார் 300 க்கும் மேற்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் அன்றையதினம் அமைச்சர் குழுவினர் இரவு 8 மணியளவில் காயக்குழி என்னும் கிராமத்துக்குச் சென்று அங்குள்ள குடும்பங்களுக்குத் தலா 50 ஆயிரம் பணமும் ஒரு ஏக்கர் விவசாயக் காணியும் வழங்குவதாக உறுதியளித்தார் என்றும் தெரிய வருகின்றது. (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று கட்டங்களாக இடிகுண்டு அபிவிருத்தி

## கட்டுடை விவசாயிகள் நலன் கருதி

யாழ்ப்பாணம்,ஜூலை 19

கட்டுடை இடிகுண்டு மூன்று கட்டமாக விரைவில் உட்கட்டுமான அபிவிருத்தி இடம்பெறும். நூறுவருட பழமை வாய்ந்த சொத்து முதலில் பாதுகாக்கப்படும்.

வடக்கு நீர்பாசன பிரதம பொறியியலாளர் எந்திரி க.கருணாநிதி இவ்வாறு தெரிவித்தார்.

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட கட்டுடை இடிகுண்டு அபிவிருத்திக்கு சொண்ட் நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்த நிறுவனத்தின் நிதி நிலமைக்கு ஏற்ப முதலில் கட்டுடை இடிகுண்டு அபிவிருத்தி திட்டத்தை பாதுகாத்தல், இதற்கு இடிகுண்டு நீர்த்தேக்கத்திட்டத்தைச் சுற்றிப் பாதுகாப்பு சுவர் அமைத்தல், பின்னர் இங்குள்ள கழிவு மண்ணை உறிஞ்சி அகழ்ந்தொடுத்தல், பின் உட்சுவருக்கு பாதுகாப்பளித்து மழை நீரைத் தேக்குதல் போன்றவாறு கட்டம் கட்டமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளன தலைவர் க.முதலியார் கூறுகையில்:-

கட்டுடை இடிகுண்டு நீர்த்தேக்க திட்டம் அபிவிருத்தி குறித்து கடந்த 10 ஆண்டுகளாகப் பல அபிவிருத்தி கூட்டங்களிலும், இணைப்புக் கூட்டங்களிலும் பேசி வருகின்றோம்.

இந்தத் திட்டத்தின் பலா பலன்களையும் விவசாய மற்றும் குடிதண்ணீர் தேவைப்பாடுகள் தொடர்பாக முதற் கட்ட உட்கட்டுமான அபிவிருத்தியின் பின்னர் எதிர்பார்க்கலாம்.

மானிப்பாய் பிரதேச சபையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் திட்டத்தைமுன்னிறுத்த 'சொண்ட்' நிறுவனம் விரைந்து அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும்.- என்றார்.

வலி.மேற்கு பிரதேச சபை தொழில்நுட்ப அலுவலர் சி.புலேந்திரன் கூறுகையில்:-

கட்டுடை நீர்த்தேக்கத் திட்டத்தில் இருந்து குடிதண்ணீர் பெறுவதற்கான முன்மொழிவை நாம் மானிப்பாய் பிரதேச சபைத் தலைவரிடம் கோரவுள்ளோம்.

இதற்குச் சபைத் தலைவர் சம்மதம் தெரிவித்தால் இடிகுண்டு குடிதண்ணீரை சுத்திகரித்து வலி.மேற்கு மக்களுக்கு வழங்க தயாராக உள்ளோம்.- என்றார்.(ம-50)

# சாவகச்சேரி – கச்சாய் வீதியில் பொலிஸ் சேவையை அதிகரிக்குக

## இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை

தென்மராட்சி,ஜூலை 19

சாவகச்சேரி - கச்சாய் வீதியில் அண்மைக் காலமாக போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இந்த வீதியில் பொலிஸாரின் சேவையை அதிகரிக்குமாறு மக்கள் கோரியுள்ளனர்.

ஏ-9 வீதியின் பல இடங்களில் வீதி அகலிப்பு பணிகள் இடம்பெற்று வருவதை அடுத்து ஏ-9 வீதியில் வரும் வாகனங்கள் பளை-கிளாலி-கச்சாய் ஊடாகத் தமது பயணத்தை மேற்கொண்டு வருவது அதிகரித்துள்ளது.

விடத்தற்பளை, கிளாலி, கெற்பேலி, கச்சாய் அல்லாரை, கோயிற்குடியிருப்பு போன்ற பிரிவுகளைச் சேர்ந்த மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்த சாவகச்சேரி-கச்சாய் வீதியை அண்மைக் காலமாகப் பெரும் எண்ணிக்கையில் வாகனங்கள் பயன்படுத்தி வருகின்றன.

அத்துடன் வீதியால் செல்லும் வாகனங்கள் வேகக் கட்டுப்பாடின்றி செல்வதால் இந்த வீதியில் உள்ள ஆயிரக் கணக்கான மக்கள் தினமும் பயப் பீதியுடன் பயணிக்க வேண்டியுள்ளது.

**வீதியைப் பயன்படுத்தும் வாகனங்கள் வேகக் கட்டுப்பாடின்றி செல்வதால் இந்த வீதியில் உள்ள ஆயிரக் கணக்கான மக்கள் தினமும் பயப் பீதியுடன் பயணிக்க வேண்டியுள்ளது.**

இந்த வீதியைப் பயன்படுத்தும் மக்களின் நலன் கருதி வாகனங்கள் வேகமாக செல்வதைக் கட்டுப்படுத்தவும், இவற்றால் ஏற்படும் வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்காகவும் 24 மணி நேரப் பொலிஸ் சேவையை இந்த வீதியில் நடைமுறைப் படுத்துமாறும் மக்கள் கோரியுள்ளனர். வேகமாகச் செல்லும் மோட்டார் சைக்கிள்களால் மோதுண்டு தினமும் பொது மக்கள் காயமடையும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றது.

அண்மையில் வேகமாக வந்த வாகனம் சாவகச்சேரி இலங்கை மின்சார சபை அலுவலகத்துக்கு முன்பாக சைக்கிளில் சென்ற இருவரை மோதியதில் 13 வயது பாடசாலை மாணவன் பலியானமை குறிப்பிடத்தக்கது. (ம-9)



ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு நேற்றுக் கீரிமலையில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு பிதிர்க்கடன்களை நிறைவேற்றினர். காலை தொடக்கம் நண்பகல் வரை மக்கள் கீரிமலைக்கு படையெடுத்தனர். கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதோடு ஆலய சுற்றாடலில் உள்ள அன்னதான மடங்களில் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு வடபிராந்திய போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் போக்குவரத்துச் சபை என்பன நேற்று விசேட பஸ் சேவைகளை நடத்தின. (ம-86-17)

# ஸ்ரான்லி வீதிக்கு குடிதண்ணீர் வழங்க விரைவில் நடவடிக்கை

## வர்த்தகர் சந்திப்பில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிக்கு குடிதண்ணீர் வசதியை மீண்டும் ஏற்படுத்தித்தர வேண்டும் என்ற வர்த்தக சங்கத்தின் கோரிக்கையை யாழ்ப்பாணம் மாநகர சபை ஏற்றுக்கொண்டது. யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வருக்கும் யாழ்ப்பாணம் வர்த்தகர் சங்கத்துக்கும் இடையில் சந்திப்பு ஒன்று யாழ்ப்பாணம் வர்த்தகச் சங்கக் கட்டடத்தில் இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட ஸ்ரான்லி வீதி வர்த்தகர்கள் இந்தக் கோரிக்கையை முன் வைத்தனர்.

கடந்த காலத்தில் ஸ்ரான்லி வீதியில் குழாய் மூலம் குடிதண்ணீர் பெறுவதற்கான வசதிகள் செய்யப்பட்டு இருந்தன. தற்போது குழாய் மூலம் நீர் பெறும் வசதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களை விட தற்போது ஸ்ரான்லி வீதியில் வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

வர்த்தக நிலையங்கள் குடிதண்ணீர் பெறுவதில் கஷ்டங்களை அனுபவிப்பதால் மீண்டும் முன்னைய குழாய் மூலமான குடிதண்ணீர் திட்டத்தை வழங்குவதுடன் பத்து வரையான குடிதண்ணீர் பெறும் இணைப்புக்களையும் பொருத்தித்தர வேண்டும் என்ற வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனை ஏற்றுக் கொண்ட மாநகரசபை முதல்வர் விரைவில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (ம-86)

# நல்லூர் ஆலயச் சூழலில் இடையூறுகள் நிவர்த்தி

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு ஆலய சுற்றாடலில் பொது மக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு யாழ். மாநகர சபையால் நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. இதேவேளை இம்முறை அதிக எண்ணிக்கையான பொது மக்கள் ஆலய திருவிழாவில் கலந்து கொள்வதற்கான வாய்ப்புகளும் காணப்படுவதால் பொது மக்கள் மிகவும் கவனமாகத் தமது உடைமைகளைப் பாதுகாக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்துக்கு வருகை தருவோர் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு தங்க நகைகள் அணிந்து வருவதைத் தவிர்க்குமாறும் யாழ். மாநகர சபை தெரிவித்துள்ளது.

பொலிஸார் கடமையில் ஈடுபட்டாலும் கூட திருடர்களின் கைவரிசைகள் வருடாந்தம் இடம்பெற்று வருகின்ற நிலையில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

# தேவரதம் விரைவில் திருத்தம்

*யாழ்ப்பாணம், ஜூலை 19*

*ஊர்காவற்றுறை அனலைதீவுக்கான பிரதேச சபையின் படகு தேவரதம் விரைவில் திருத்தம் செய்து சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.*

*மிகவும் நீண்ட காலமாக இந்தப் படகு சேவையாற்ற முடியாதவாறு பழுதடைந்து மெலிஞ்சிமுனை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.*

*இந்தப் படகைத் திருத்தி அனலைதீவு, எழுவைதீவுகளுக்கான சேவையை ஆரம்பிக்க வேண்டும் எனக் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதும் நீண்ட நாள் கோரிக்கை இப்போதுதான் கவனத்தில் எடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.*

*ஊர்காவற்றுறை பிரதேசசபை படகைத் திருத்தம் செய்வதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. (ம-7)*

# பரு. சந்தை அமைப்பு பணிகள் மந்த கதியில்

வடமராட்சி,ஜூலை 19

பருத்தித்துறை நவீன சந்தைக் கட்டடத்தின் மேல்மாடி வேலைகள் மிக மந்தகதியில் நடைபெற்று வருவதால் அதன் திறப்பு விழா மிகத் தாமதம் அடைந்து வருகின்றது.

இந்தச் சந்தைக் கட்டடத்தின் தளக் கட்டட வேலைகள் மிகக் குறுகிய காலத்தில் மிக வேகமாக நடைபெற்று முடிந்துள்ள நிலையில் மேல்மாடிக் கட்டடத்தையும் கட்டி முடித்த பின்னரே நவீன சந்தையைத் திறப்பதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. என்றிப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் மேல்மாடிக் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படுவதால் கடந்த ஜனவரி மாதம் பின்னர் ஏப்ரல் மாதம் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இன்னமும் அந்தக் கட்டட வேலைகள் பூர்த்தியடையவில்லை.

மந்த கதியில் கட்டட வேலைகள் நடைபெறுவதால் மக்கள் பாவனைக்குத் திறந்து விட இன்னமும் மூன்று மாதங்களுக்கு மேல் செல்லலாம் என வர்த்தகர்கள் கருதுகின்றார்கள்.(ம-8)

# வலி.தென்மேற்கில் அபிவிருத்தி பணிகள் குறித்து ஆராய்வு

வலி.தென்மேற்கு,ஜூலை 19

வலி.தென்மேற்கு பிரதேசத்தின் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ள சொண்ட் நிறுவனம் முன்வந்துள்ளது. மூன்று வேலைத் திட்டங்களை மேற்கொள்வது பற்றி ஆராய்ந்து வருகிறது.

இது தொடர்பான கலந்துரையாடல் சொண்ட் நிறுவன அதிகாரிகளுக்கும் பிரதேசசபை உறுப்பினர்களுக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

மக்களின் நலன்கருதி வலி.தென் மேற்கு பிரதேசத்தில் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ள வேண்டிய நிலையிருந்த போதும் போதிய வருமானம் சபைக்குக் கிடைக்காத நிலையில் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலை குறித்து மக்கள் விசனம் தெரிவித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் சொண்ட் நிறுவனம் வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் பல லட்சம் ரூபா செலவில் மூன்று அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு முன்வந்துள்ளது.

கட்டுடையிலுள்ள இடிகுண்டு நீர்த்தேக்கம், மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்திலுள்ள திறந்த வெளி அரங்கு, மீனவர்கள் கடலுக்குச் செல்வதற்கு வசதியாக கல்லுண்டாய் பகுதியில் வீதி அமைத்தல் ஆகிய மூன்று வேலைத் திட்டங்களுமே மேற்கொள்ளப்படவுள்ளன. (ம-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி தேர்தல்

## பிராணப்புக்கு தே.மு.க. ஆதரவு



ஜனாதிபதி தேர்தலில் பிரணாப் முகர்ஜிக்கு தே.மு.தி.க. ஆதரவளிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கும் பிரணாப் முகர்ஜிக்கு ஆதரவளிக்க வேண்டி, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன், விஜயகாந்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்த நிலையில் அகில இந்திய காங்கிரஸ் தலைமையிலிருந்தோ அல்லது பிரணாப்பிடமிருந்தோ முறையான கடிதம் வருமாயின் பிரணாப்புக்கு ஆதரவளிப்பதாக விஜயகாந்த் தெரிவித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

அ.தி.மு.க. ஆதரவுடன் பி.ஏ.சங்மா நிற்கின்றார். இந்த நிலையில் அ.தி.மு.க.வுக்கு எதிராக செயற்படும் நோக்குடனும் தனது கூட்டணியை மத்திய அரசில் இணைக்கும் நோக்குடனும் விஜயகாந்த் செயற்பட திட்டமிட்டிருக்கின்றார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (ம)

## ஜனாதிபதித் தெரிவுக்கு முன் பாடப் புத்தகத்தில் பிரணாப்

கட்சிரோலி, ஜூலை 19

நாட்டின் 14 ஆவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில், மகாராஷ்டிரா மாநிலத்தில் செயல்பட்டுவரும் கோண்ட்வானா பல்கலைக்கழகத்தில் பாடப் புத்தகத்தில், பிரணாப் முகர்ஜி நாட்டின் 14 ஆவது ஜனாதிபதி என்று அச்சிடப்பட்டிருப்பது அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

மகாராஷ்டிரா மாநிலம் கட்சிரோலி பகுதியில் இயங்கி வருகிறது கோண்ட்வானா பல்கலைக்கழகம். புதிதாக உருவாக்கப்பட்ட இந்தப் பல்கலைக்கழகத்தில் நடப்பு கல்வியாண்டின் இளங்கலை அரசஅறிவியல் பிரிவின் முதலாமாண்டு மாணவர்களுக்கான இந்தியாவில் ஜனநாயகம் என்ற பாடப் புத்தகத்தின் 4 ஆவது பாடப் பிரிவின் 84 ஆவது பக்கத்தில் யூனியன் எக்ஸிகியூட்டிவ்ஸ் என்ற தலைப்பின் கீழ் நாட்டின் ஜனாதிபதிகளின் பட்டியலில், 14 ஆவது ஜனாதிபதி என்று பிரணாப் முகர்ஜியின் பெயர் இடம் பெற்றுள்ளது.

கோண்ட்வானா பல்கலைக்கழகத்தில் சமீபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்தப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கிவரும் கல்லூரிகளைச் சேர்ந்த 40 இற்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் கலந்து கொண்ட விழாவில் இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக கல்வி வாரியத்தின் தலைவர் சஞ்சய் கோர் மற்றும் அரசறிவியல் ஆராய்ச்சிப் பிரிவு மாணவர் மதுகர் அர்ஜூன்கர் உள்ளிட்டோர் இந்த புத்தகத்தின் ஆசிரியர்கள் ஆவர்.

பாடப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள கருத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், பல்கலைக்கழகம் இது குறித்து எவ்வித கருத்தையும் இதுவரை வெளிப்படுத்தவில்லை.

இன்று நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலில், ஐக்கிய முற்போக்கு கூட்டணி வேட்பாளர் பிரணாப் முகர்ஜியை எதிர்த்து அ.தி.மு.க., பா.ஜ. உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவு பெற்றவரும் மற்றும் லோக்சபா முன்னாள் சபாநாயகருமான பி. ஏ. சங்மாவும் களம் இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இந்திய பொருளாதாரத்தை விமர்சித்த ஒபாமாவுக்கு பதிலடி கொடுத்த சங்மா



இந்திய அரசு என்ன செய்ய வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி சொல்வது வெட்கக்கேடானது என ஜனாதிபதி வேட்பாளர் பி.ஏ. சங்மா பதிலடி கொடுத்துள்ளார்.


இந்தியா, சில்லறை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீட்டை அனுமதிக்க முடிவு செய்துள்ளது.

இதனால் பல்வேறு துறைகளில் இந்தியா முதலீட்டை அதிகரிக்காமல் இழந்து வருகிறது. இந்தத் தவறின் காரணமாகவே அமெரிக்கர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இந்தியாவில் வெளிநாட்டு முதலீட்டுக்கு உகந்த சூழல் குறைந்து வருகிறது. வளர்ச்சி என்பது இந்தியாவுக்குப் பெரும் சவாலாக உள்ளது என்று ஒபாமா பி.டி.ஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார்.

இதற்கு நாடு முழுவதும் உள்ள எதிர்கட்சிகள் ஒபாமாவுக்கு கடும் கண்டனம் எழுப்பியிருந்தன. இந்த நிலையில் ஜனாதிபதி வேட்பாளர் பி.ஏ.சங்மா, இந்தியாவின் பொருளாதாரத்தை ஒபாமா விமர்சித்திருப்பது கண்டத்திற்கு உரியது. இந்தியா என்ன செய்ய வேண்டுமென்று அமெரிக்க ஜனாதிபதி கூறுவது வெட்கக்கேடானது என கூறியிருக்கின்றார். (ம)

## யானைத் தந்தங்கள் வைத்திருந்த புகார் மோகன்லால் மீது குற்றச்சாட்டு பதிவு



யானை தந்தங்கள் வைத்திருந்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் மலையாள நடிகர் மோகன்லால் மீது கேரள நீதிமன்றம் குற்றச்சாட்டைப் பதிவு செய்தது.

கடந்த 2010 ஆம் ஆண்டு மலையாள நடிகர் மோகன்லாலின் வீடு, அலுவலகம் உள்ளிட்ட இடங்களில் வருமானவரித் துறையினர் சோதனை நடத்திய போது அவரது வீட்டில் முறைகேடாக யானைத் தந்தங்கள் வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது.

இது தொடர்பாக வனத்துறை அதிகாரிகள் மோகன்லால் மீது வனப்பாதுகாப்பு சட்டம் 1972 இன் கீழ் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தினர். யானைத் தந்தங்களையும் பறிமுதல் செய்தனர்.

இந்த நிலையில் கொச்சி, வனத்துறை கோட்ட அதிகாரி நாகராஜூ என்பவர், மலையாத்தூர் முதன்மை நீதிவான் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்தார்.

அதில் வன்பாதுகாப்பு சட்டத்தின் விதிமுறைகளை மீறியும், உரிய ஆவணங்கள் இன்றியும் யானைத் தந்தங்கள் வைத்திருந்ததாக நடிகர் மோகன்லால், பி.என்.கிருஷ்ணகுமார், என்.கிருஷ்ணகுமார் ஆகியோர் மீது வழக்கு தொடந்தார்.

இதைத்தொடந்து வனப்பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 44(6) கீழ் நடிகர் மோகன்லால் உள்ளிட்ட மூன்று பேர் மீது சட்டவிரோதமாக யானைத் தந்தங்கள் வைத்திருந்ததாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு குற்றச்சாட்டு பதியப்பட்டுள்ளது. (ம)



அரசு நிலம் கையகப்படுத்துதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து மகாராஷ்டிரா மாநிலம் சதாராவில், பெண்கள் வாயில் கறுப்புத் துணி கட்டி ஊர்வலம் நடத்தினர்.

## மும்பை தாக்குதல் குற்றவாளியை நாடு கடத்தக் கோரும் இன்ரர்போல்

நாட்டில் நடைபெற்ற பல்வேறு குண்டு வெடிப்புகளில் தொடர்புடைய தீவிரவாதி ஃபசிஹ் மஹ்மூத் (வயது 28) என்பவரை சவுதியில் இருந்து இந்தியா கொண்டுவர முடியாது என்று இன்ரர்போல் தெரிவித்துள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற மும்பை தாக்குதலில் தொடர்புடைய லஷ்கர்-இ-தொய்பா அமைப்பின் தீவிரவாதி அபு ஜிண்டால் கடந்த ஜூன் 22 ஆம் திகதி டில்லி சிறப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவர் அளித்த வாக்குமூலத்தில், மற்றொரு தீவிரவாதியான ஃபசிஹ் மஹ்மூதுவுக்கும் இந்தத் தாக்குதலில் தொடர்பிருப்பது தெரியவந்தது.

இந்த நிலையில் குறித்த தீவிரவாதி கடந்த ஜூன் மாதம் சவுதி அரேபியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் டெல்லி, பெங்களூர் ஆகிய இடங்களில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்புள்ள நிலையில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் குறித்த குற்றவாளியை நாடு கடத்திக் கொண்டுவர இன்ரர்போலின் உதவி நாடப்பட்டது. ஆனால் இது தொடர்பாக இன்ரர்போல் மத்திய உள்துறை அமைச்சகத்துக்குத் தெரிவித்துள்ள தகவலில் ஃப்சிஹ் மஹ்மூதுவை நாடு கடத்திக் கொண்டுவர திட்டமில்லை. சவுதி அரேபியா அரசுதான் அவரை இந்தியாவுக்கு நாடு கடத்த வேண்டும் என கூறியுள்ளது.

இதற்கிடையே ஃபசிஹ் மஹ்மூத் குறித்த முக்கிய ஆவணங்கள் சவுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் இந்திய குடியுரிமை பெற்றவர் தானா என்ற அடிப்படையில் நாடு கடத்த சவுதி அரேபியா பரிசீலிக்கும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

# மும்பைத் தாக்குதல் குறித்த அறிக்கை சட்டவிரோதமானது

### ஜாகிர் ரகுமான் லக்வியின் சட்டத்தரணி தெரிவிப்பு

இஸ்லாமாபாத், ஜூலை 19

பாகிஸ்தான் நீதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை சட்டவிரோதமானது என நீதிபதி அறிவித்துள்ளார். இந்த அறிக்கை, மும்பைத் தாக்குதல் வழக்கு விசாரணையில் ஆவணமாக சேர்க்கப்படமாட்டாது என அறிவித்துள்ளார். மேலும், நீதி விசாரணைக் கமிஷனின் நடவடிக்கைகள், அறிக்கை சரியானதா என்பது குறித்து பரிசீலிக்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு உள்ளது.

இவ்வாறு மும்பை தாக்குதலில் மூளையாகச் செயல்பட்டு, பின்னின்று நடத்திய லஸ்கர்-இ-தொய்பா தளபதி ஜாகிர் ரகுமான் லக்வியின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இப்போது நீதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை சரியாக இல்லை என கூறப்பட்டுள்ள இந்த நிலையில் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை வழக்கில் சாட்சியமாக சேர்க்கப்படாது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் மும்பை தாக்குதல் வழக்கு, இந்திய தரப்பில்பெருத்தபின்னடைவை ஏற்படுத்தி உள்ளது. மும்பை தாக்குதல்கள் தொடர்பாக பாகிஸ்தானுக்கு ஒரு ஆணைக்குழுவை அனுப்பி வைக்க இந்தியா திட்டமிட்டிருந்த போதிலும் அதுவும் சிக்கலில் முடிந்துள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தத் தாக்குதல் தொடர்பாக அஜ்மல் கசாப் என்ற தீவிரவாதி மட்டும் உயிருடன் பிடிபட்டான். அவன்மீதானவழக்கை மும்பை தனி நீதிமன்றம் விசாரித்து மரண தண்டனை விதித்தது. அதை மும்பை உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

மும்பைத் தாக்குதல்கள் தொடர்பாக பாகிஸ்தானில், ராவல்பிண்டி நகரில் அமைந்துள்ள தீவிரவாத தடுப்பு நீதிமன்றிலும் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

இந்த வழக்கில், மும்பைத் தாக்குதலில் மூளையாக செயல்பட்டு, பின்னின்று நடத்திய லஸ்கர்-இ-தொய்பா தளபதி ஜாகிர் ரகுமான் லக்வி உள்ளிட்ட 7 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதற்கிடையே மும்பை தாக்குதல்கள் தொடர்பாக பாகிஸ்தானில் இருந்து 8 உறுப்பினர்களைக் கொண்ட நீதி விசாரணை ஆணைக்குழு மும்பைக்கு வந்தது.

ஒரு நீதிபதி, பொலிஸ் அதிகாரி மற்றும் 9 தீவிரவாதிகளின் உடல்களை பிரேத பரிசோதனை நடத்திய 2 மருத்துவர்களிடம் அந்த ஆணைக்குழு விசாரணை நடத்தியது.

அப்போது, இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே உள்ள ஓர் உடன்பாட்டின்படி, சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய பாகிஸ்தான் நீதி விசாரணை ஆணைக்குழுவுக்கு அனுமதி இல்லை என இந்திய அதிகாரிகள் கூறிவிட்டனர்.

இருப்பினும் குறுக்கு விசாரணை நடத்தாமல், நீதி விசாரணை அறிக்கை தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கை ராவல்பிண்டி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், பாகிஸ்தான் நீதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை செல்லாது என அறிவிக்கக்கோரி ஜாகிர் ரகுமான் லக்வி, ராவல்பிண்டி நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தார்.

இந்த மனு விசாரணைக்கு வந்தபோது அரசு தலைமை சட்டத்தரணி ஜுல்பகார் அலி சவுத்ரி, இந்தியாவில் சாட்சிகளிடம் குறுக்கு விசாரணை நடத்த அனுமதி பெற்று, மற்றொரு ஆணைக்குழுவை மும்பைக்கு அனுப்பி வைக்கலாம் என யோசனை கூறினார். இந்த நிலையில், ஜாகிர் ரகுமான் லக்வியின் மனு, நீதிபதி ஹபீப் உர் ரகுமான் சவுத்ரி முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

அப்போது அவர், பாகிஸ்தானிய நீதி விசாரணை ஆணைக்குழுவின் நடவடிக்கைகள், அறிக்கை அனைத்தும் செல்லாது, அவை சட்டபூர்வமானது அல்ல என ஒரு பரபரப்பு உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்தியாவில் சாட்சிகளிடம் குறுக்கு விசாரணை நடத்த வழி வகுத்து, இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே புதிய உடன்பாடு ஏற்பட்டால், மற்றொரு ஆணைக்குழுவை மும்பைக்கு அனுப்பி வைப்பது குறித்து, அரசு தரப்பில் நீதிமன்றத்தை அணுகலாம் எனவும் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கென்யா மக்கள் சித்திரவதையை ஒப்புக்கொண்டது பிரிட்டன் அரசு



லண்டன், ஜூலை 19

கென்யா தங்கள் ஆட்சியின் கீழ் இருந்த போது, நடந்த போராட்டத்தில் மக்கள் சித்திரவதை செய்யப்பட்டனர் என்பதைப் பிரிட்டிஷ் அரசு முதன் முறையாக ஒப்புக் கொண்டுள்ளது.

கென்யா பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த காலத்தில், 1950ஆம் ஆண்டுகளில் மாவ் மாவ் போராட்டம் நடந்தது.

இந்தப் போராட்டத்தில் ஆட்சியாளர்களால் தடுத்து வைக்கப்பட்டவர்கள் சித்திரவதை செய்யப்பட்டுத் துன்புறுத்தப்பட்டார்கள் என்பதைப் பிரிட்டிஷ் அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

இந்த போராட்டம் தான் கென்யா, பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலை பெறுவதற்கு வழி வகுத்தது.

அப்போது தாங்கள் துன்புறத்தப்பட்டதற்கு நஷ்டஈடு கோரி, சில மாவ் மாவ் தலைவர்கள் லண்டனிலுள்ள உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தனர்.

இது குறித்து பிரிட்டிஷ் அரச சட்டத்தரணி கைமான்ஸ் பீல்ட் கூறுகையில், காலனித்துவ ஆட்சியாளர்களின் நிர்வாகத்தின் கீழ் மாவ் மாவ் போராட்டக்காரர்கள் சித்திரவதையை அனுபவித்தார்கள் எனவும் அவர்கள் தரக்குறைவாக நடத்தப்பட்டார்கள் என்றும் எழுந்துள்ள குற்றச்சாட்டைத் தான் மறுக்க விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.(ம)

## ஹிலாரி கிளின்டன் புதிய சாதனை



அதிக அளவிலான நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன், புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன், தினம் தினம் சர்வதேச ஊடகங்களில் இடம் பெற்று வருகிறார்.

காரணம் ஏதாவது ஒரு நாட்டுக்கு இவர் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருவதே ஆகும்.

ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகளில் இவர் தூதரக ரீதியான நட்புறவு கொண்டு வருகிறார். அதன்படி இவர் அமெரிக்க வெளிவிவகாரத் துறை வரலாற்றில் அதிக நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு சாதனை படைத்துள்ளார்.

இது தொடர்பாக வெளிவிவகாரத்துறை வெளியிட்டுள்ள தகவல், கடந்த 2009 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா நிர்வாகத்தின் கீழ், வெளிவிவகாரத்துறை அமைச்சராக பொறுப்பேற்றார் ஹிலாரி கிளின்டன்.

இவர் முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்டனின் மனைவி. இவர் இதுவரை 102 நாடுகளுக்குச் சென்று 8 லட்சத்து 43 ஆயிரத்து 839 மைல்கள் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இவருக்கு முன்பு, முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனின் நிர்வாகத்தின் கீழ் வெளிவிவகாரத் துறை அமைச்சராக இருந்த மெடிலினி அல்பிரைட் (1997-2001) என்பவர் 98 நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்து சாதனை படைத்தார்.

அவரது சாதனையை முறியடித்து, கடந்த மாதம் பின்லாந்து நாட்டுக்கு சென்றதன் மூலம் 99 நாடுகளுக்கும், பின்னர் லாட்வியா நாட்டுக்கு சென்றதன் மூலம் 100 நாடுகளுக்கு சென்ற பெருமையைப் பெற்றுள்ளார் கிளின்டன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கிளின்டன் இஸ்ரேலில் நிருபர்களிடம் கூறுகையில், பெருமையாக உள்ளது. என்னுடைய கடமையை செய்கிறேன். இன்னும் நிறைய நாடுகளுக்கு செல்ல விரும்புகிறேன். எனினும் தற்போது இஸ்ரேல் தான் எனது கடைசிப் பயணமாக இருக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.(ம)



தெற்குப் பிரான்ஸ் பகுதிக்கு சென்றுவந்த பிரான்ஸ் அதிபர் பிரான்காயிஸ் ஹோலன்ட் மற்றும் அவரது துணையான வெல்ரி ட்ரிர்வெய்லர்.(ம)

## மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மீது வழக்கு



மாலே, ஜூலை 19

நீதிபதியை, சட்டவிரோதமாக சிறையிலடைக்க உத்தரவிட்டதாக, மாலைதீவு முன்னாள் அதிபர் முகமது நஷீத் மீது, வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாலைதீவு அதிபராக முகமது நஷீத் இருந்த போது, அரசியல் பாரபட்சத்துடன் உத்தரவு பிறப்பித்ததாக, நீதிபதி அப்துல்லா முகமது என்பவரைக் கைது செய்து, சிறையில் அடைக்க உத்தரவிட்டார்.

இதையடுத்துப் பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில், மோதல் வெடித்தது. இதையடுத்து, அதிபர் பதவியில் இருந்து நஷீத் விலக்கப்பட்டார்.

இந்த நிலையில், சட்டவிரோதமாக நீதிபதி அப்துல்லா முகமதுவை, 22 நாள்கள் சிறையில் அடைத்த குற்றத்துக்காக முகமது நஷீத் மற்றும் முன்னாள் அமைச்சர் இப்ராஹிம் ஆகியோருக்கு எதிராக, தற்போதைய அரசு, கடந்த திங்கள்கிழமை வழக்குத் தொடர்ந் துள்ளது. (ம)

## 94 வயதில் மண்டேலா



நெல்சன் மண்டேலா தனது 94 ஆவது பிறந்த தினத்தை நேற்றுக் கொண்டாடினார். இதனை முன்னிட்டு அந்த நாட்டில் இரண்டு கோடி பேர் அவரது பிறந்த நாள் பாடலைப் பாடி சாதனை படைத்துள்ளனர்.

தென் ஆபிரிக்காவின் விடுதலைக்காக போராட்டம் நடத்தி பல ஆண்டுகள் சிறையில் இருந்தவர் நெல்சன் மண்டேலா. இவரது போராட்டத்தின் பலனாக தென் ஆபிரிக்கா ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்றது.

தென் ஆபிரிக்க ஜனாதிபதியாக பதவி வகித்த மண்டேலா தற்போது, முதுமை காரணமாக அனைத்து அரசியல் நடவடிக்கைகளிலிருந்தும் ஒதுங்கிக் கொண்டார்.

கேப் மாகாணத்தின் குனு என்ற தனது சொந்த ஊரில் அவர் தற்போது வசிக்கிறார். இந்த நிலையின் நேற்று 94 ஆவது பிறந்த நாள் கொண்டாடிய மண்டேலாவுக்கு, வாழ்த்து கூறும் விதமாக அனைத்துப் பள்ளிகளிலும் காலை 8 மணிக்கு அனைத்து மாணவர்களும் ஒன்று சேர்ந்து மண்டேலாவுக்கு வாழ்த்துப் பாடியுள்ளனர்.

பள்ளி மாணவர்களுடன் மற்றவர்களும் சேர்ந்து மொத்தம் இரண்டு கோடி பேர் வாழ்த்துப் பாடல் பாடியுள்ளனர்.

தென் ஆபிரிக்க மக்களின் சமூக நீதிக்காக அவர் 67 ஆண்டு காலம் உழைத்ததை நினைவு கூரும் வகையில், அவரது ஆதரவாளர்கள் [illegible] பொதுச்சேவையாற்றியுள்ளனர். (ம)

## இந்தியா – பாக். அதிகாரிகள் சந்திப்பு

இந்தியா - பாகிஸ்தான் மூத்த அதிகாரிகள் இஸ்லாமாபாத்தில் இன்று சந்தித்துப் பேசவுள்ளனர். இந்த சந்திப்பின்போது ஜம்மு காஷ்மீர் வழியாக இருதரப்பு வர்த்தக உறவுகள் மற்றும் பயண மேம்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்தப்படவுள்ளது.

இந்தியத் தரப்பில் வெளியுறவு அமைச்சகத்தின் இணைச் செயலாளர் சின்கா தலைமையிலான குழுவும், பாகிஸ்தான் தரப்பில் அந்த நாட்டு வெளியுறவுத் துறை இயக்குநர் சீரா அக்பரி தலைமையிலான குழுவும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலோசனை நடத்த உள்ளனர்.

இரு நாடுகளுக்கிடையே நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கைகள் குறித்து அண்மையில் நடத்தப்பட்ட வெளியுறவு செயலாளர்கள் கூட்டத்தில் பேசப்பட்டது. அந்தப் பேச்சுகள் குறித்து இன்று நடைபெறும் சந்திப்பின்போது ஆலோசிக்கப்படும் எனத் தெரிகிறது.(ம)

## கடும் வரட்சியால் தவிக்கும் அமெரிக்கா



அமெரிக்காவின் பாதிப் பகுதிக்கு மேல் வரட்சியின் பிடியில் உள்ளதாம். வரலாறு காணாத வெயிலும், மழை பெய்யாததுமே இதற்கு காரணம் என்று கூறப்படுகிறது.

மழை வர மேலும் தாமதமானால் அமெரிக்கா முழுவதுமே வரட்சியின் பிடி யில் சிக்கிக் கொள்ளும் நிலை ஏற்படும் என தேசிய காலநிலை தகவல் மையம் எச்சரித்துள்ளது.

கடந்த 1930 மற்றும் 1950 ஆம் ஆண்டுகளில்தான் இப்படிப்பட்ட பெரும் வறட்சியை அமெரிக்காக சந்தித்தது. அதன் பிறகு தற்போது தான் வறட்சி அங்கு தாண்டவமாட ஆரம்பித்துள்ளதாம். வறட்சி காரணமாக பயிர்கள் கருக ஆரம்பித்துள்ளன. மழை வராவிட்டால் நிலைமை மேலும் மோசமாகும் என கணிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தேசிய காலநிலை தகவல் மையம் வெளியிட்டுள்ள மாதாந்திர அறிக்கையில், நாட்டின் 55 சத வீதப் பகுதியில் வறட்சி காணப்படுகிறது. கடந்த ஜூன் மாதம், இதுவரை இல்லாத அளவுக்கு பெரும் வெப்ப மாதமாக காணப்பட்டது. இப்படி ஜூன் மாதத்தில் கடும் வெப்ப நிலை நிலவியது அமெரிக்க வரலாற்றில் இது 14 ஆவது முறையாகும்.

அமெரிக்காவில் நிலங்கள் அனைத்துமே கிட்டத்தட்ட வறண்டு போய்க் காணப்படுகின்றன. பயிர்கள் கருகி வருகின்றன. ஈரப்பதம் வெகுவாகக் குறைந்து போய் விட்டது. கடந்த 18 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வெப்ப நிலை அதிகரித்துக் காணப்படுகிறது.

1956 ஆம் ஆண்டுக்குப் பிறகு அதிக அளவிலான நிலப்பரப்பு வரண்டு போயிருப்பது இதுவே முதல் முறையாகும். அப்போது 58 சதவீத நிலப்பரப்பு வறண்டு கிடந்தது.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாகிஸ்தான் குண்டுவெடிப்பில்

# 13 பேர் பரிதாபமாகச் சாவு



இஸ்லாமாபாத், ஜூலை 19 பாகிஸ்தானில் பஸ்சில் குண்டு வெடித்ததில் இரண்டு குழந்தைகள் உட்பட 13 பேர் பலியானார்கள்.

மேலும் நான்கு பேர் காயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியை ஒட்டி செபாய் கிராம் அருகே பஸ் சென்ற போது இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. சம்பவம் குறித்து விசாரித்த பொலிஸார், ரிமோட் மூலமாக இந்தக் குண்டு வெடிப்பு சம்பவம் நிகழ்த்தப்பட்டுள்ளதாவும், இதுவரைக்கும் எந்த அமைப்பும் இந்த குண்டுவெடிப்புக்குப் பொறுப்பேற்கவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் அப்பகுதியில் உள்ள லஷ்கர் அல்லது தாலிபன் அமைப்பினர் இந்த சம்பவத்தை நிகழ்த்தி இருக்கலாம் என்றும் அதிகாரிகள் சந்தேகின்றனர். (ம)



பலஸ்தீன அதிபர் மெகாமத் அப்பாஸ், இத்தாலியின் ரோமில் உள்ள அரசு தலைமையகத்துக்கு வந்தார். அவரை இத்தாலி பிரதமர் மரியோ மோன்டி, வாழ்த்தி வரவேற்றார்.

# சீனாவுக்கு எதிர்ப்புக் கூறி புத்த துறவி தீக்குளிப்பு

சீன அடக்கு முறையைக் கண்டித்து, திபெத்தில் புத்த துறவி ஒருவர் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார்.

சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள திபெத்தின் விடுதலைக்காகத் தலாய் லாமா போராடி வருகிறார்.

இதன் காரணமாக அவர் கடந்த, 1959ஆம் ஆண்டு இந்தியாவுக்குத் தப்பி வந்து, தர்மசாலாவில் வசிக்கிறார்.

சீன அரசு தலாய் லாமாவை பிரிவினைவாதியாகக் கருதுகிறது. திபெத்தில் உள்ள புத்த துறவிகள் தலாய் லாமாவை ஆதரிக்கின்றனர். அவர் தாயகம் திரும்ப வேண்டும் என விரும்புகின்றனர்.

**திபெத்தில் உள்ள புத்த துறவிகள் தலாய் லாமாவை ஆதரிக்கின்றனர். அவர் தாயகம் திரும்ப வேண் டும் என விரும்புகின்றனர்.**

தலாய் லாமா நாடு திரும்ப வேண்டியும், சீன அடக்குமுறையைக் கண்டித்தும், கடந்த 2009ஆ ம் ஆண்டிலிருந்து 44 துறவிகள் தீக்குளித்துள்ளனர்.

இதற்கிடையே நேற்று முன்தினம் திபெத்தில் உள்ள பர்காம் என்ற இடத்தில் உள்ள புத்த மடாலயத்தில் லோப் சாங் லோசின் என்ற, 18 வயது புத்த துறவி தற்கொலை செய்து கொண்டார்.

தீக்குளிப்பு முயற்சியில் ஈடுபட வேண்டாம் என தலாய் லாமா அறிவுறுத்தியும் இது போன்ற சம்பவங்கள் தொடர்கின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம)

# சாகே ஸ்டாலேனின் மரணத்தில் மர்மம்



பிரபல ஹாலிவுட் நடிகர் சில்வெஸ்டர் ஸ்டோலோனின் மகன் சாகே ஸ்டாலோன், அமெரிக்காவில் உள்ள தனது வீட்டில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார்.

இவரது மரணம் குறித்து பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இருப்பினும் எவ்வித காரணங்களும் தெரியாமல் மர்மம் நீடிக்கிறது.

இந்த நிலையில் சாகேயின் சாவு குறித்து முரண்பட்ட தகவல்கள் வெளிவந்துள்ளன. அவருடைய சட்டத்தரணி பிரான்ஸ்டெரின் கூறுகையில், சாகே தனது காதலியைத் திருமணம் செய்ய விரும்பினார். ஆனால் அதற்கு முன்பே இறந்து விட்டார் என்றார்.

மேலும் சாகேக்கு குடிப்பழக்கம் கிடையாது என்றும் கூறியுள்ளார். ஆனால் விசாரணை நடத்தும் அதிகாரிகளோ, வீட்டில் இருந்து ஏராளமான போத்தல்களைக் கைப்பற்றி இருப்பதாகவும், அவற்றில் வெறுமையான போத்தல்களாக பியர் போத்தல்கள்தான் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சாகே ஸ்டாலோனின் மரணத்தில் நீடிக்கும் குழப்பம் மேலும் அதிகரித்துள்ளது. (ம)


# JCBவாடகைக்கு



யாழ், மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் காணிகள் துப்புரவு செய்தல், பழைய கட்டடங்கள் இடித்து அகற்றல் நிலம் மட்டப்படுத்தல் போன்ற வேலைகளை மேற்கொள்ளச் சிரமப்படுகிறீர்களா? குறைந்த கட்டணத்தில் நிறைந்த பயன்பெற அழையுங்கள்

0774053637,
0756737207

(20552) (15-14)


# 3 வயதில் 1.5 அடி உயரமான சிறுமி

சீனாவில் ஹூவாய்- ஹூவா பகுதியை சேர்ந்த 3 வயது சிறுமி லியாங் சியாவோசியாவோ, தன் வயதுக்குரிய வளர்ச்சி இல்லாததால் 54 செ.மீ. உயரமே இருக்கிறாள். சிறுமி லியாங், பிறக்கும் போது 1.05 கிலோ எடை, 33 செ.மீ. உயரம் இருந்தாள்.

கடந்த 3 ஆண்டுகளில் 22 செ.மீ. உயரமே வளர்ந்திருக்கிறாள். எடை தற்போது 2.5 கிலோவாக இருக்கிறாள். எடை குறைவாக இருப்பதால் சாங்சா நகரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறாள். அங்கிருக்கும் மற்ற குழந்தைகளோடு தட்டு தடுமாறி விளையாடுகிறாள்.

இவளைப் பற்றி மருத்துவர்கள் கூறியதாவது:-

மரபியல் குறைபாடு காரணமாக அவளது உடல் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருக்கிறது. அவள் இனி வளர்வதற்கு வாய்ப்பு இல்லை என்றும் ஒருவேளை வயதானாலும் இவ்வளவு உயரம்தான் இருப்பாள் எனவும் தெரிவித்துள்ளனர். கடந்த 6 மாதங்களுக்கு முன்பு, அமெரிக்காவின் வட கரோலினா மாநிலத்தில் உள்ள சார்லோட் நகரில் உள்ள மருத்துவமனையில் நிக்கி- சாம்மூர் தம்பதிக்கு 25 வாரங்களில் குழந்தை பிறந்தது.

இக்குழந்தை ஒரு சோடா போத்தலின் அளவே இருந்தது. குழந்தையை காப்பாற்ற மருத்துவர்கள் மிகவும் போராடினர். 6 மாதங்கள் அவசர சிகிச்சை பிரிவில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டதன் பலனாக குழந்தை உயிர் பிழைத்துள்ளது. (ம)


### திருக்கைலாய யாத்திரை

வவுனியா கோவிற்குளம் சிவாலய உறுப்பினர்கள் 4 பேர் தமிழ்நாடு சேலத்தில் உள்ள 'சாம்ராட் கொலிடேஸ்' என்னும் யாத்திரைக் குழுவினருடன் திருக்கைலாய யாத்திரை செய்வதற்கான ஆயத்தம் செய்துள்ளோம்.

அவர்கள் இப்போது 5உறுப்பினர்கள் ஒன்றாக வந்தால்தான் பயணவசதிகள் செய்து தரப்படும் என்று கூறுகிறார்கள்

ஆகவே எம்மோடு யாத்திரை செய்ய விரும்பும் ஒருவர் சேர்ந்தால் 21.08.2012 இல் சென்னையில் இருந்து புறப்பட்டு டில்லி, நேபாளம், திபெத் மூலம் திருக்கைலாயப் பயணம் செய்யலாம். விவரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: அகிலாண்டேஸ்வரி சமேத
அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில், தொலைபேசி:024 222 1685
கோவிற்குளம், வவுனியா. (16817)(5-6-7) அருளகம் சிறுவர் இல்லம்



# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் : 1949.12.31



மறைவு : 2012.06.19

### திருமதி பரந்தாமன் சாரதாதேவி

கடந்த 19.06.2012 அன்று இறைபதம் எய்திய எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்தியம் இன்று (19.07.2012) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்த நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

என்றும் நினைவில்
பரந்தாமன் (கணவர்)
அரவிந்தநாதன் (மகன்-கனடா)
பேரின்பநாதன்
தியாகராஜா } சகோதரர்கள் (கனடா)

'நாதன் வாசம்'
கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை.

தொ.பே.இல.:077 445 0238

(20484)(5-6-7)



# MA. MCom, MBA, Msc, P.G Diploma

### காமராசர் பல்கலைக்கழகம், மதுரை (வெளிவாரி)

* மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டுக்கான (May 2013 பரீட்சை எடுப்பதற்கான) புதிய பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
* MA இல் பொருளியல், வரலாறு, அரசியல் விஞ்ஞானம், பொது நிர்வாகம், சமூகவியல், சமயமும் தத்துவமும், தமிழ், ஆங்கிலம் Journalism & Mass Communication ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவு செய்யமுடியும்.

M.com இல் வர்த்தகம், வங்கியியல், கூட்டுறவு ஆகியவற்றில் ஒன்றினை தெரிவு செய்யமுடியும்.

P.G. Diploma : ஒரு வருட கற்கை நெறியாக Management, Marketing Management, Hospital Management, Jornalisam & Mass Communication, Computer Application ஆகியவற்றில் ஒன்றினை தெரிவு செய்யமுடியும்.

* பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.

குறிப்பு : இப்பட்ட நெறிகளானது இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
பரீட்சைகள் யாவும் புதிய உயர் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள பரீட்சை மண்டபத்தில் நடைபெறுகின்றன.

யாழ். இணைப்பாளர்.
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை), புதிய உயர்கல்லூரி,
T.P : 021 222 8148 ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(C/1542)(6-7-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனைகள் சாதனைகள் ஆகட்டும்

(3)



வேலை கிடைப்பது கஷ்டம் என்கிற யதார்த்தத்தை முதலில் அவன் ஏற்றுக்கொள்ள வேண்டும். வேலை கிடைப்பது கஷ்டம் என்பதால், வேலையே கிடைக்காது என்றாகி விடாது.

வேலை கிடைக்கும் இடத்தைக் கண்ணால் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று முதலில் அவன் எண்ணத் தொடங்கவேண்டும். எப்படியும் தனக்கு வேலை கிடைக்கும் என்கிற நம்பிக்கையை அவன் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்ட மாத்திரத்திலேயே அவனுடைய முகத்திலுள்ள சோகக்குறி மறைந்து போகும்.

புதிய இடத்துக்கு வேலை தேடிச்செல்லும் போது உற்சாகம் மிகுந்த மனிதனாக அவன் தோற்றம் அளிப்பான். கவலைக் குறியோடும், சோகமான முகத்தோடும் நீங்கள் சென்றால் எவனும் உங்களுக்கு வேலை கொடுக்க மாட்டான். உங்களுடைய முகத்தில் காணப்படும் மகிழ்ச்சியே உங்கள் மீது மற்றவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும். நீங்கள் சுறுசுறுப்பானவர், எந்த வேலையைக் கொடுத்தாலும் உற்சாகமாகச் செய்யக்கூடியவன் என்கிற எண்ணம் அப்போது தான் அவர்களுக்கு ஏற்படும்.

துயரமே உருவானவரை வேலைக்கு வைத்துக் கொள்ள எவரும் சம்மதிக்க மாட்டார்கள். அப்படிப்பட்டவர்களை வேலைக்கு வைத்துக்கொண்டால், அவர்களின் சோகம் தங்களுடைய அலுவலகத்திலுள்ள மற்றவர்களையும் பாதித்து விடுமோ என்று அச்சப்படுவார்கள்.

ஒருவருடைய மகிழ்ச்சி மற்றவர்களை எளிதில் பற்றிக் கொள்ளுவதைப் போலவே, சோகமும் பற்றிக்கொள்வதில் சந்தேகமில்லை. வேலை கிடைக்கவில்லையே என்று சோகமாக இருந்தால் வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் குறையவே செய்யும். அதனால் உங்களுக்கு எந்த லாபமும் இல்லை.

நீங்கள் மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் இருக்கும் போது, எங்காவது வேலை வாய்ப்புகள் இருந்தால், நீங்கள் அதற்குப் பொருத்தமானவன் என எண்ணி மற்றவர்கள் உங்களுக்கு உதவ முன்வரக்கூடும்.

எந்தக் கஷ்டத்தையும் சுமையாக எண்ணாதீர்கள். முயற்சி செய்தால் கஷ்டம் நீங்கிவிடும் என்கிற நம்பிக்கையை முதலில் பெறுங்கள். இப்படி நம்பத் தொடங்கும்போது புதிய உற்சாகம் உங்களிடம் தோன்றுவதை நீங்களே உணர்வீர்கள். இந்த நம்பிக்கையும், உற்சாகமும் புதிய வாய்ப்புகளை உங்களுக்குக் கட்டாயம் ஏற்படுத்திக் கொடுக்கும். இதில் உங்களுக்குச் சந்தேகமே வேண்டாம்.

இதைப் பரீட்சை செய்த பலர் மகத்தான வெற்றி கண்டிருக்கிறார்கள். வாழ்க்கையில் சோதனைகள் வரத்தான் செய்யும். மிகக் கடுமையான சோதனைகளுக்கும் நாம் தயாராகவே இருக்கவேண்டும். அவற்றை உற்சாகமாக எதிர்கொள்ளும்போது, அந்தச் சோதனைகளிலிருந்து விடுபடும் வழிகள் தாமாகவே தோன்றும்.

உற்சாகப்படுத்த இதை நாம் சொல்லுவதாக நீங்கள் எண்ண வேண்டாம். மிகக் கடுமையான சோதனைகளுக்கு உள்ளான பலர், அந்த சோதனைத் தீயில் புடம் போட்ட தங்கமாக வெளி வருகின்றனர்.

**திக்குத் தெரியாத காட்டில்...**

தனிமனிதர்களுக்கு மட்டுமல்ல; சமூகங்களுக்குங்கூட வரலாற்றில் கடுமையான சோதனைகள் ஏற்படுவதுண்டு. இந்தச் சோதனைகளில் மீண்டு' வருகின்ற சமுதாயங்கள் செல்வாக்குப் பெற்றுத் திகழ்வதை வரலாற்றில் பார்க்க முடிகிறது.

ஒரு நாட்டில் வாழுகின்ற மக்கள் எதிர்பாராத சரித்திர விபத்துக்களின் காரணமாக அகதிகளாக இன்னொரு நாட்டில் சென்று தஞ்சமடைவதும்உண்டு. உதாரணமாக இந்தியத் துணைக்கண்டம் இந்தியாவாகவும் பாகிஸ்தானாகவும் பிரிக்கப்பட்ட போது, இந்தியாவிலிருந்து முஸ்லிம்கள் சிலர் பாகிஸ்தானுக்குச் சென்று குடியேறினார்கள். பாகிஸ்தானில் வாழ்ந்த இந்துக்கள் இந்தியாவுக்கு அகதிகளாக வந்து சேர்ந்தார்கள்.

அப்படி இந்தியாவுக்கு வந்த இந்துக்கள் தங்களுடைய சொந்த வாசஸ்தலமான பஞ்சாப், வங்காளம் போன்ற பகுதிகளிலிருந்து இந்தியாவிற்கு வந்தார்கள். அங்கே தங்களுக்கு உரிமையான வீடு, வாசல், சொத்து, சுதந்திரம் ஆகிய அனைத்தையும் இழந்துவிட்டு இந்தியாவிற்கு வெறும் கையுடன் வந்தார்கள்.

அப்படி வந்தவர்களுக்கு இந்திய அரசு சில உதவிகளைச் செய்தது. ஆயினும், அவர்கள் தங்கள் வாழ்க்கையைப் புதிதாகத் தொடங்க வேண்டிய நிலையிலேயே இருந்தார்கள். அதாவது அனாதைகளைப் போல வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டிய அவல நிலையில் இருந்தார்கள்.

-பி.சி.கணேசன்- (தொடரும்)

# ஆற்றல் வாய்ந்த அறிஞரை தமிழ் உலகம் இழந்து விட்டது

## செபஸ்தியானின் மறைவு குறித்து தமிழ் நேசன் அடிகளார்

தமிழ் இலக்கண இலக்கியங்களில் சிறந்த தேர்ச்சியும், சிறந்த தமிழ்ப் புலமையும், கேட்போரை வசீகரிக்கச் செய்யும் பேச்சாற்றலும் மிக்க திறமை வாய்ந்ததொரு தமிழ் அறிஞரைத் தமிழ் உலகம் இழந்து விட்டது.

இவ்வாறு மன்னார் மாவட்டம் நறுவிலிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த ஆசிரியர் த.செபஸ்தியானின் மறைவு குறித்து வெளியிட்ட இரங்கல் செய்தியில் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆசிரியர் செபஸ்தியான் மட்டக்களப்பு புனித மிக்கல் கல்லூரியில் நாடறிந்த தமிழ் அறிஞர் இலக்கிய கலாநிதி வித்துவான் சா. இ.கமலநாதன் அவர்களின் மாணவனாக இருந்தார்.

தனது மேடைப் பேச்சுக்களின் போதும், சொற்பொழிவுகளின் போதும் அவர் தமிழ் இலக்கியங்களை மேற்கோள்காட்டிப் பேசுவது மிகவும் சுவையுடையதாக இருக்கும். திருக்குறளிலும் சித்தர் பாடல்களிலும் அவர் சிறந்த பரிச்சயம் உள்ளவராக விளங்கினார். அது மட்டுமல்லாமல் மன்னார் மாதோட்ட நாட்டுக்கூத்துக்களிலும் அவர் ஆர்வம் உள்ளவராக இருந்தார்.

> தனது மேடைப் பேச்சுக்களின் போதும், சொற்பொழிவுகளின்போதும் அவர் தமிழ் இலக்கியங்களை மேற்கோள்காட்டிப் பேசுவது மிகவும் சுவையுடையதாக இருக்கும்.

தமிழ் நாட்டின் சிறந்த பேச்சாளர்களுக்கு இணையாகப் பேசுகின்ற ஆற்றல் அவரிடம் இருந்தது. ஆற்றொழுக்குப்போல் சென்று கொண்டிருக்கும் அவருடைய அழகான தமிழ் பேச்சைச் செவிமடுப்பவர்கள் நேரம் போவதே தெரியாமல் அந்தப்பேச்சின் சுவையில் கட்டுண்டு கிடப்பர். இத்தகைய ஆற்றல் வாய்ந்த அறிஞர் இன்று நம்மிடமிருந்து விடைபெற்றது ஆழ்ந்த கவலையை அளிக்கின்றது.

அன்னாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற வேண்டுவதோடு அவரின் பிரிவால் துயருறும் அவரின் அன்பு மனைவி திருமதி சுகந்தி செபஸ்தியான், உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றேன் என்று மேலும் அவரது இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-12)

# கலாசார போட்டி முடிவுகள்

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி சிறுவர் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட இலக்கிய மற்றும் கலாசாரப் போட்டி முடிவுகள் காரைநகர் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு.

**பெற்றோர் பாடல்**

**கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம் சு.பவிராஜ் (சுப்பிரமணிய வித்தியசாலை), 2ஆம் இடம் சி.கீர்த்திகா (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி), 3 ஆம் இடம் ச.சுகந்தினி (ஊரி அ.மி.த.க பாடசாலை).

**மத்திய பிரிவு**

1ஆம் இடம் ச.ஜீவதாஸ் (யாழ்ற்றன் கல்லூரி), 2ஆம் இடம் சி.கல்யாணி (யாழ்ற்றன் கல்லூரி), 3 ஆம் இடம் ம.கபிலேசன் (யாழ்ற்றன் கல்லூரி)

**மேற்பிரிவு**

1ஆம் இடம் ஹ.மேனரூபி (யாழ்ற்றன் கல்லூரி),2ஆம் இடம் க.தர்மிலா (யாழ்ற்றன் கல்லூரி), 3ஆம் இடம் சி.பவதாரணி (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி)

**நாட்டார் பாடல்**

**கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம் ஈ.தமிழ்ச்சுடர் (தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாலயம்)

**மத்திய பிரிவு**

1ஆம் இடம் ச.ஜீவதாஸ் (யாழ்ற் றன் கல்லூரி), 2ஆம் இடம் சி.கல்யாணி (யாழ்ற்றன் கல்லூரி) 3 ஆம் இடம் ம.கபிலேசன் (யாழ்ற்றன் கல்லூரி)

**மேற்பிரிவு**

1ஆம் இடம் ஹ.மேனரூபி (யாழ்ற்றன் கல்லூரி), 2ஆம் இடம் கே.றேம்சிகா (யாழ்ற்றன் கல்லூரி), 3 ஆம் இடம் க.தர்மிலா (யாழ்ற்றன் கல்லூரி)

**அறிவிப்பாளர்**

**கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம் ஈ.தமிழ்ச்சுடர் (தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தி)

**மத்திய பிரிவு**

1ஆம் இடம் மே.கிருத்திகா (யாழ்ற்றன் கல்லூரி), 2ஆம் இடம் ச.ரோகினி (யாழ்ற்றன் கல்லூரி), 3ஆம் இடம் சு.கயந்தன் (யாழ்ற்றன் கல்லூரி)

**மேற்பிரிவு**

1ஆம் இடம் பா.கவிதா (யாழ்ற்றன் கல்லூரி) , 2ஆம் இடம் சி.எடிசன் (யாழ்ப்பாணக் கல்லூரி),3 ஆம் இடம் யு.லோஜிகா (யாழ்ற்றன் கல்லூரி)

**குழுநடனம்**

**கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம் ஊரி பாலர் பாடசாலை.

**மத்திய பிரிவு**

1ஆம் இடம் யாழ்ற்றன் கல்லூரி, 2ஆம் இடம் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், 3 ஆம் இடம் யாழ்ற்றன் கல்லூரி

(தொடரும்)

# புதிய அதிபர்

யாழ்ப்பாணம், ஜூலை 19

அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்துக்குப் புதிய அதிபராக திருமதி ஜெயந்தினி சிவபாலன் கடந்த ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளார்.

தீவக வலயக் கல்விப் பணிப்பாளரால் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வின் அடிப்படையிலும், வடமாகாணக் கல்விப்பணிப்பாளரின் பரிந்துரையின் அடிப்படையிலும் கடமை நிறைவேற்று அதிபராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார் என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(எ-14)

# முதலாமிடம்



அகில இலங்கை தமிழ் தின போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி இ.ஜனரஞ்சனி பிரிவு நான்கு பேச்சுப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

(எ)



யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் தமிழ் பேரவையின் முத்தமிழ்விழாவும், தமிழ் அலைகள்- 4 நூல் வெளியீடும் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கல்லூரியின் முன்னாள் அதிபர் நா.[illegible], பாடசாலை அதிபர் மு.மகேந்திரன் ஆகியோர் நூலை வெளியீடு செய்து வைத்தனர். இதில் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மானு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## பயிற்சிகள் தொடர்கதை

மீண்டும் ஒரு முறை இலங்கை தன் முகத்தில் தானே வலியச் சென்று கரியைப் பூசிக் கொண்டுள்ளது. தமிழகத்தில் உள்ள குன்னூர் வெலிங்டன் இராணுவக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் இருந்து இலங்கை இராணுவத்தினர் வெளியேற்றப்பட்டுள்ளனர். இதேபோன்று தாம்பரம் விமானப் படை பயிற்சித் தளத்தில் இருந்தும் இலங்கைப் படையினர் தமிழகக் கட்சிகளின் கடும் எதிர்ப்பால் அங்கிருந்து வேறு தளத்துக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

கடந்த 3 வருடங்களாக இலங்கைப் படையினர் தமிழகத்துக்கு பயிற்சி பெறச் செல்வதும் பின்னர் அங்குள்ள தமிழக அரசியல் கட்சிகளின் கடும் எதிர்ப்பால் அவர்களை இந்திய மத்திய அரசு இலங்கைக்கு திரும்பவும் அனுப்புவதும் அடிக்கடி நிகழ்ந்துவரும் ஒன்றாக மாறிவிட்டது. ''எமது தொப்புள் கொடி உறவுகளான ஈழத் தமிழர்களை ஈவிரக்கமின்றி கொன்று குவித்த இலங்கைப் படைக்கு இங்கு இடமில்லை.'' என்று தமிழகக் கட்சிகளும் மக்களும் தொடர்ந்தும் போர்க்கொடி தூக்கிவருகின்ற போதும் அதனை அடிக்கடி மறந்துபோகும் இந்திய மத்திய அரசு, விக்கிரமாதித்தன் போல தன் முயற்சியில் சற்றும் தளராது இலங்கைப் படைக்கு பயிற்சி வழங்கும் அனுமதியை வழங்கிக் கொண்டே இருக்கிறது.

''சார்க் நாடுகளின் கூட்டமைப்பில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தில், அயல் நாடுகளுக்கு இன்னொரு நாடு இராணுவப் பயிற்சியை வழங்குதல் என்ற விடயம் உள்ளது. அதன் படியே இந்தப் பயிற்சிகள் இலங்கைப் படையினருக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதைவிட ஈழத் தமிழர்களையும், தமிழக மக்களையும் இந்திய மத்திய அரசு மதிக்காது இந்தச் செயலில் ஈடுபடுவதாக சொல்லப்படுவதெல்லாம் வெறும் கட்டுக் கதைகள் தான்'' என்று தன்னுடைய செயலுக்கு 'சார்க்' ஒப்பந்தத்தை சாட்டுக்கு இழுக்கிறது இந்திய அரசு.

ஆனால் இந்த ஒப்பந்தத்தை தாம் தப்பிப்பதற்காகவே இந்திய அரசும், ஆளும் காங்கிரஸ் கட்சியும் கையில் எடுத்துள்ளன. இந்த விடயத்தை ஒரு தொலைக்காட்சி விவாதத்தில் பழ.நெடுமாறன் போட்டுடைத்துள்ளார்.

''சார்க் ஒப்பந்தத்தின் படி அயல் நாடுகளுக்கு பயிற்சி வழங்குவது கட்டாயம் என்றால் ஏன் இதுவரை பாகிஸ்தானுக்கு இந்தியா பயிற்சிகளை வழங்கவில்லை? அதுவும் அயல்நாடு தானே. தனது எதிரி நாடு என்பதாலேயே இந்தப் பயிற்சி வழங்கும் திட்டத்தில் பாகிஸ்தானுக்கு இந்தியா இடமளிக்கவில்லை. ஆனால் இலங்கைக்கு வழங்குகிறது. இலங்கைக்கு பக்கத்தில் உள்ள ஒரே ஒரு நாடு இந்தியா தான். எனவே அதனுடன் சச்சரவில் ஈடுபடக் கூடிய நாடு இந்தியா தான். எனவே தனக்கெதிராக போர் புரிவதற்காகவா இந்திய அரசு இலங்கைப் படைகளுக்கு பயிற்சி அளிக்கிறது?

உண்மையில் இங்கு வழங்கப்படும் பயிற்சிகள் எல்லாம் இலங்கையில் உள்ள எமது உறவுகளான ஈழத் தமிழர்களுக்கு எதிராக பிரயோகிக்கப்படவுள்ளன. அப்பாவிகளை நோக்கியே இந்த ஆயுதங்கள் திரும்பப் போகின்றன. அப்பாவிகளைக் கொல்லவே இந்திய அரசு தமிழகத்தின் எதிர்ப்பையும் மீறி பயிற்சிகளை வழங்குகிறது'' என்று பழ நெடுமாறன் போட்ட போடில் குறித்த தொலைக்காட்சி விவாதத்தில் இணைந்துகொண்டிருந்த காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் வாயடைத்துப் போனார்.

இந்திய அரசின் கொள்கை வகுப்பாளர்களின் மனதில் ஏதாவது மாற்றம் வந்தால் மட்டுமே இந்தப் பயிற்சிகளுக்கு முற்றுப்புள்ளி விழும். இல்லாவிட்டால், என்ன தான் தமிழகக் கட்சிகள் கத்திக் குளறினாலும் முடிவுறாத இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை போல, இந்தப் பயிறசி வழங்கும் சிக்கலும் நீளத்தான் போகிறது.


# சேவை மனப்பாங்குள்ள சமூகத்தை உருவாக்குவோம்

■ பஞ்சவர்ணன்

அண்மைக் காலமாக இளைஞர், யுவதிகளின் பாதை திசைமாறிய பயணமாக இருக்கின்றது. கலாசார சீரழிவுக்கு இவர்கள் துணைபோகின்றார்கள் என்ற குற்றச்சாட்டுகளும், தாராளமாகவே இவர்கள் மேல் வைக்கப்படுகின்றன.

மதுப்பாவனை, புகைத்தல், போதைப் பொருள் பாவனை, தவறான பாலியல் நடத்தைகள், கோஷ்டி மோதல்கள் என இவர்கள் மேல் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஏராளம், ஏராளம். இதில் பாடசாலை மாணவர்களும் கணிசமான இடத்தைப் பிடித்திருப்பது சிந்திக்க வேண்டியதே.

நாட்டின் நாளைய தலைவர்களாக வரவேண்டிய இவர்கள் இப்படியான சீரழிவுகளுக்குள் சிக்கிக் கொள்வதால் நாளை எமது சமூகத்தின் தலைமைத்துவத்துக்குக் கேள்விக்குறி வந்துவிடுமா? என்ற வினாவும் தொக்கியே நிற்கின்றது. எனவே மாணவர்களை நேர்வழிப்படுத்த வேண்டுமானால், பாடசாலைகள் இதய சுத்தியுடன் செயல்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது.



பாடசாலையின் ஒவ்வொரு வகுப்பறையும் குடும்பமாக இருக்கவேண்டும். அதேபோல் வீடுகளில் ஒவ்வொரு குடும்பத்திலும் வகுப்பறை இருக்க வேண்டும். ஏனெனில் பெற்றோர்கள் என்றாலும் சரி, ஆசிரியர்கள் என்றாலும் சரி அவர்களது வழிகாட்டல்கள் கல்வியை மையப்படுத்தியே காணப்படுகிறது. அதிலும் குறிப்பாக பாடத்திட்டத்தைப் பூரணப்படுத்தினால் போதும் என்ற அளவிலேயே செயற்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

வைத்தியராக, பொறியியலாளராக, கணக்கியலாளராக, தொழில்நுட்பவியலாளராக வரவேண்டுமென இவர்களது குறிக்கோள்கள் இருக்கின்றதே தவிர, முதலில் நல்ல மனிதனாக வரவேண்டும் என்பதை ஆசிரியரோ, மாணவரோ இன்று மறந்துவிட்டார்கள். ஏன் பெற்றோர்கள்கூட மறக்கிறார்கள் எனலாம்.

அறிவை அடையும் வழிதான் கல்வி. அதனாலேதான் ''கல்விச்சாலை'' என்கின்றார்கள். சாலை சரியாக இருந்தால் போய்ச்சேர வேண்டிய இடத்தை சுலபமாகவும் விரைவாகவும் அடையலாம். எனவே கல்விச் சாலைகளை சரியாகச் செப்பனிட வேண்டிய தேவை உள்ளது.

மாணவன் முழுமையான மனிதனாக வேண்டுமானால் அவனிடம் அறிவு வளர்ச்சி மட்டும் போதாது. உணர்வு வளர்ச்சியும் அவசியம். அறிவு வளர்ச்சி என்பது மூளை சம்பந்தப்பட்டது. உணர்வு சார் வளர்ச்சி என்பது இதயம் சார்ந்தது. எனவே அறிவுசார் கல்வியும், பண்புசார் கல்வியும் ஒருவனிடம் ஒருங்கே வளர்த்தெடுக்கப்படும்போது மட்டும் தான் அவன் பூரண மனிதனாவான். இதில் ஒன்றைச் சுருக்கி மற்றையதை அதிகம் வளர்ப்பானேன்? அதனால் தீங்கு தான் ஏற்படும்.

அறிவு வளர்ச்சி அதிகரித்துச் செல்வதால்தான் இன்றைய சமுதாயம் பிரச்சினைகள் பலவற்றுக்கு முகம் கொடுக்கக் வேண்டி ஏற்படுகிறது. அறிவைப் பயன்படுத்தி ''பொருளை'' ஈட்டும் குறிக்கோளிலேயே இன்றைய மனிதர்களது செயற்பாடுகள் காணப்படுகின்றன. குறைந்த முயற்சியில் நிறைந்த பொருளை ஈட்ட அவன் அறிவை எவ்வாறு பயன்படுத்தலாம் என்றே சிந்திக்கின்றான். மூளை செயலாற்றுகிறது. இதனால் மனிதனுடைய புறவாழ்வு பயன் அடைகின்றது. ஆனால் உணர்வை வளர்க்கத் தவறியதால் அன்பைத் தொலைத்து விடுகிறான் மனிதன். இதயசுத்தி இல்லாமல் போகிறது. அகவாழ்வு சீரழிகிறது. எனவே இன்றைய மனிதனது வாழ்வு சமச்சீர் அற்றதாகி நிம்மதியைத் தொலைக்கின்றான்.

இவற்றையெல்லாம் சீர்ப்படுத்த அவனது அடிப்படையை செப்பனிடுதல் அவசியம் ஆகின்றது. அடிப்படை என்பது பாடசாலையே. எனவே ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வியியலாளர்கள் போன்றோரது தன்னலமற்ற பங்கு இதில் முக்கியமாகின்றது. இவர்கள் இதயசுத்தியுடன் செயற்பட்டால் மட்டுமே இன்றைய இளைஞனை நாளைய நல்ல சமூகத் தலைவன் ஆக்கலாம். அதற்கும் அப்பால் நல்ல மனிதர்களாக்கலாம். இதற்குப் புத்தகக் கல்வி மட்டும் உதவப்போவதில்லை. பல்வேறுபட்ட இணைபாட விதானச் செயற்பாடுகள் முக்கியமாகின்றன.

பாடசாலைகளில் மாணவர்கள், விளையாட்டுப் போட்டிகள், சாரணர் கழகம், சமூக சேவைக் கழகம், சமயம் சார்ந்த மன்றங்கள், மொழிசார் மன்றங்கள் போன்றவற்றில் படிக்கும் போதே ஈடுபட வேண்டும். இன்று பல பாடசாலைகளில் இவ்வாறான மன்றங்களில் மாணவர்களது செயற்பாடுகள் வெகுவாகவே குறைந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

சில பாடசாலைகளில் மாணவர்கள் இவற்றில் ஈடுபாடாக இருந்த போதிலும் ஆசிரியர்கள் தடை விதிக்கிறார்கள். மாணவர்களது கல்வியில், புள்ளி குறைந்துவிடும் என்ற வியாக்கியானத்தை ஆசிரியர்களும், அதிபர்களும் இதற்குக் காரணமாக முன்வைக்கின்றார்கள்.

மாணவர்களுக்கு சுயாதீனமான நேரம் அதிகமாகக் கிடைப்பதாலேதான் அவர்களது தேவையற்ற செயல்களில் ஈடுபடவோ, அவர்கள் சந்தித்து தீய வழிகளில் குழுக்களாகச் சேர்ந்து இயங்கவோ முடிகிறது என்ற வாதமும் உண்டு. எனவே இவர்களை இப்படியான இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் தீவிரமாக்கும்போதும், அவர்களுக்கு அவற்றில் ஈடுபாட்டை ஏற்படுத்தும் போதும் தேவையற்ற வேலைகளில் ஈடுபட நேரமற்றவர்கள் ஆகிவிடுவார்கள். அது மட்டுமல்லாமல் சேவைமனப்பாங்கு உள்ள சமூத்தையும் எதிர்காலத்தில் உருவாக்க முடியும். அடிப்படையில் செழிப்பான குடும்பத் தலைவர்களை ஆக்க முடியும்.

''சோக்கட்டி'' பிடித்தவர்கள் எல்லாம் ஆசிரியர் அல்லர். பாடப் புத்தகத்தைக் கற்பித்து பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்தவர் எல்லோரும் ஆசிரியரும் அல்லர். மாணவர்களை இந்தச் சமூகத்திற்கு தலைமைத்துவப் பண்பு மிக்க நல்ல மனிதனாக ஆக்கித் தருகின்ற நல்ல சிற்பி எவரோ அவரே ஆசிரியன். எனவே அதிபர்கள், ஆசிரியர்கள் தியாக உணர்வுடன் செயற்பட வேண்டும். அப்படி அவர்கள் செயற்படுவார்களானால் மாணவர் அந்த ஆசிரியர்களைக் கை கூப்பி, தலை சாய்த்து வணங்குவர். ஏணியென நினைத்து நிற்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூலை எப்போதும் கறுப்புத்தான்

வீயெஸ்ரி

இலங்கையைப் பொறுத்த வரை, ஜூலை மாதம், தற்போதும் கறுப்பு நிறம் கொண்டதே. ஜூலை மாதத்தில் ஒட்டிக் கொண்டுள்ள அந்தக் கறுப்புக் கறையைப் போக்க முயல்வது நம் எல்லோரதும் பொறுப்பும் கடமையுமாகும். இது குறித்துச் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது கிடைத்த செய்தியொன்று என்னை ஒரு கணம் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

வவுனியா சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவமொன்றையடுத்து மஹர சிறைச்சாலைக்கு இடமாற்றப்பட்ட கைதிகளில் ஒருவர் ராகம வைத்தியசாலையில் உயிரிழந்தார் என்பதே அச்செய்தி. இச்செய்தியால் என் கண்முன்னால் கறுப்பு ஜூலை நினைவுகள் மேலும் இருளடைந்தன. அறிமுகமான மனிதர்கள் மத்தியில் முன்பின் அறிமுகமில்லாத அந்த விடுதலைப் புலிச்சந்தேகநபரின் முகம் என் கண்முன்னால் தோன்றி மறைந்தது.

கொல்லப்பட்டவர் வவுனியா நெளுக்குளத்தைச் சேர்ந்த நிமலரூபன் என்பவராவார். கொல்லப்பட்ட நிமலரூபன் மற்றும் சிறைவாசம் அனுபவிக்கும் ஏனையோர் சார்பாக உயிருடனிருக்கும் நாமே பேசியாக வேண்டும்.

ராகம வைத்தியசாலையிலேயே இறப்பு சம்பவித்ததாக செய்தி வெளியானதால் சம்பவம் குறித்துத் தெரிந்து கொள்ள ராகம வைத்தியசாயுடன் தொடர்பு கொண்டோம். நான்காம் திகதி அதிகாலை 6.15 மணிக்கு மஹர சிறைச் சாலை அதிகாரிகள் சிலர் உயிரிழந்த ஒருவரின் சடலத்தை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர் என்று ராகம வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் டாக்டர் சம்பா அளுத்வீர தெரிவித்தார்.

அத்துடன் யாராவது வெளியில் இடம் பெற்ற சம்பவம் தொடர்பாக சடலமொன்றை வைத்தியசாலையில் ஒப்படைத்தால், உரிய பரிசோதனை மூலமாக அன்றி இறப்புக்கான காரணத்தை உறுதிப்படுத்த இயலாததாகையால், அச்சடலத்தை வைத்தியசாலை நிர்வாகம் பொறுப்பேற்க நேர்வதாகவும், பொறுப்பேற்க மறுப்பது வைத்தியசாலை கொள்கை நிலைப்பாட்டுக்கு பொருத்தமற்றதெனவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட தினத்தன்று பிற்பகல் 3.30 மணிக்கு மஞ்சுள பத்திராஜ, நாமல் ராஜபக்ஷ, பிரியஞ்சன் ஜயசிங்க, மற்றும் உதுல் பிரேமரத்ன ஆகிய வழக்கறிஞர்கள் சம்பவம் தொடர்பாக தகவலறிய மஹர சிறைச்சாலைக்குச் சென்றிருந்தனர். வவுனியா சிறைச்சாலையிலிருந்து மஹர சிறைச்சாலைக்கு இடமாற்றப்பட்ட கைதிகள் தொடர்பாக தகவலறிந்து தெரிவிக்குமாறு கைதிகளின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாகவே வழக்கறிஞர்கள் அங்கு சென்றிருந்தனர்.

மனித உரிமைகள் அமைப்பொன்றைச் சேர்ந்த அந்த நான்கு வழக்கறிஞர்களும் சிறைச்சாலை அதிகாரிகளின் அவமதிப்புக்கு உள்ளாக நேர்ந்தது மட்டுமன்றி அவர்கள் அங்கு அரை மணிநேரம் த்டுத்து வைக்கப்படவும் நேர்ந்ததென்றால், உயிரிழந்த நிமலரூபன் என்ற சந்தேக நபருக்கு என்ன கதி நேர்ந்திருக்கும் என்பதை ஊகிக்க முடியுமல்லவா?

1983 ஆம் ஆண்டில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குட்டிமணி உட்பட்ட 56 தமிழ்ச் சிறைக்கைதிகள் படுகொலை செய்யப்பட்ட விதத்திலேயே மஹர சிறைச்சாலையிலும் நிமலரூபன் படுமோசமாகத் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.

உறுதிப்படுத்தப்படாத வைத்தியசாலை வட்டாரத் தகவல்படி மஹர சிறைச்சாலையில் வைத்து மனிதாபிமானமற்ற வகையில் கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளான மற்றும் சில தமிழ் சந்தேகநபர்கள் தற்போது ராகம வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தெரிய வந்துள்ளது. உயிரிழந்த நிமலரூபனின் இறப்பு இயற்கையானதெனக் காட்டிக் கொள்ள அரசு தயாராகி வருகின்றது. எனவே அது சிறுநீரகச் செயலிழப்பு அல்லது இருதயநோயினால் ஏற்பட்ட இறப்பு என மருத்துவப் பரிசோதனை அறிக்கை வழங்கப்படவும் வாய்ப்புண்டு.

சிறுநீரகச் செயலிழப்பாலோ, இருதய நோய் காரணமாகவோ மனிதர்கள் உயிரிழப்பதுண்டு. கடுமையாகத் தாக்கப்படும் மனிதரொருவர் உயிரிழக்கத்தக்க காரணங்களில் அத்தகைய நோய்ப் பாதிப்பு இருக்கக்கூடும். எனவே கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகி அதன் காரணமாக உயிரிழப்பது தொடர்பான மருத்துவ விஞ்ஞான விளக்கமொன்றை வைத்தியர் ஒருவரிடம் பெற்றுக் கொள்ள முயன்றோம். தசைநார்கள் கடுமையாக தாக்கமுறுவதன் காரணமாக உடலில் உருவாகும் மயோக்லொபின் (Mayoglobin) இரசாயன மாற்றம் காரணமாக சிறுநீரகம் செயலிழப்பதுண்டு என, அவர் கூறினார்.

நிமலரூபன் வவுனியா சிறைச்சாலையிலிருந்து வேறு 28 சந்தேகநபர்களுடனேயே மஹர சிறைச்சாலைக்குக்கொண்டு செல்லப்பட்டார். வவுனியா சிறையில் இடம்பெற்ற கைதிகள் கிளர்ச்சியொன்றே இதற்குக் காரணமாய் அமைந்தது. அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்களில் ஒருவரான சரவணபவன் என்பவரை பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் கடுமையாகத் தாக்கியதுடன், சிறைச்சாலையிலிருந்து வெளியில் அழைத்துச் சென்றிருந்தனர். வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனையோர், சரவணபவனை மீண்டும் வவுனியா சிறைச்சாலைக்கு கொண்டு வர வேண்டுமெனக் கோரி நின்றனர். வெளியில் கொண்டு செல்லப்பட்ட சரவணபவன் உயிருடன் உள்ளாரா அல்லது கொல்லப்பட்டு விட்டாரா என்ற சந்தேகம் அவர்கள் மத்தியில் நிலவியது. தமது கோரிக்கை அலட்சியப் படுத்தப்பட்டதால் பொறுமை இழந்த அவர்கள் அங்கு கடமையிலிருந்த மூன்று சிறைச்சாலை உத்தியோகத்தர்களை சிறைச்சாலையின் ஒரு பகுதியில் தடுத்து வைத்ததன் மூலம் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். சுமுகமாகப் பிரச்சினையைத் தீர்க்க முயலாமல் அரச தரப்பிலும் பதிலுக்குப் பதில் நடவடிக்கை முடுக்கி விடப்பட்டமையே நிலைமை இவ்விதத்தில் மோசமடையக் காரணமாகியது.

விசேட அதிரடிப்படை வீரர்களால் குறைந்த பட்ச பலத்தைப் பயன்படுத்தி சிறைச்சாலைச் சுவர்களில் ஏறியிருந்த கைதிகளை அடக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அரச தொலைக்காட்சி ஒளிபரப்பில் அது பெரும் போர் நடவடிக்கையொன்றாகக் காண்பிக்கப்பட்டது. சந்தேக நபர்களால் பணயக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மூவரையும் விடுவித்த எஸ்.ரீ.எவ். படையணி நடவடிக்கை காரணமாக கைகால் முறிவுற்று, தலைகளில் காயமுற்ற சிறைக் கைதிகள் அங்கிருந்து வேறு சிறைச்சாலைகளுக்கு இடமாற்றப்பட்டனர்.

கைதிகள் மீது தாக்குதல் மேற்கொள்வதற்காக கொழும்பிலிருந்து 28 சிறைச்சாலைப் பொலிஸார் வவுனியாவுக்கு அனுப்பப்பட்டனர். இவர்களில் மூவர் அதிகாரிகள் தரத்தினர். ஏனையோர் சிப்பாய்கள்.

வவுனியா சிறைச்சாலையில் கடமையாற்றிய சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கைதிகள் மீது தாக்குதல் மேற்கொள்ள மறுத்ததன் காரணமாகவே கொழும்பிலிருந்து பொலிஸாரை அனுப்ப நேர்ந்தது என்பது வழக்கறிஞர் உதுல் பிரேமரத்ன தெரிவித்த தகவல்.

அதேவேளை பெரும்பாலான இலத்திரனியல் மற்றும்அச்சு ஊடகங்கள் இது புலிக்கிளர்ச்சி முறியடிப்புச் சம்பவமென வர்ணித்து செய்தி வெளியிட்டிருந்தன. வவுனியா சிறைச்சாலைக்குள் கைதிகள் பதுங்கு குழிகள் அமைத்திருந்தனர், உயிரிழந்த முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு நினைவுத்தூபி அமைத்திருந்தனர், அதியுயர் தொழில் நுட்பத்திறன் கொண்ட தொலைபேசிகள், மன்னாக்கத்திகள், வாள்கள் மற்றும் இரும்புக் கம்பிகள் வைத்திருந்தனர்.என்றெல்லாம் பரபரப்புச் செய்திகளை ஊடகங்கள் வெளியிட்டன.

அவர்களது செய்திகளின்படி சிறைச்சாலைக்குள் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் வசம் இல்லாதிருந்தவை துப்பாக்கிகளும் கைக்குண்டுகளும் மட்டுமே. ஒரு மாதத்துக்குத் தேவைப்படும் அளவான உணவுப்பொருள்களை அவர்கள் களஞ்சியப்படுத்தி வைத்திருந்ததாகக்கூட செய்திகளை வெளியிட்டிருந்தன. குறிப்பிட்ட ஊடகச் செய்திகளின்படி விசேட அதிரடிப் படையினரால் கைதிகளின் கிளர்ச்சி முறியடிக்கப்படாதிருந்திருந்தால் ஐந்தாவது ஈழப்போர் வவுனியா சிறைச்சாலையிலிருந்து ஆரம்பிக்கப்பட வாய்ப்பிருந்தது.

அரசுக்கு ஒத்து ஊதும் சில ஊடகவியலாளர்களின் கருத்துப்படி தாக்குதல் காரணமாக உயிரிழந்த நிமலரூபன் சில சமயம் ஐந்தாம் ஈழப் போருக்கு தலைமை தாங்கி வழி நடத்தவும் வாய்ப்பிருந்தது. ஆதலால் விடுதலைப் புலிப் போராளிகள் உயிரிழப்பது தவறாகக் கொள்ளப்பட முடியாதது என்பது அவர்களது நிலைப்பாடு.

உயிரிழந்த நிமலரூபனின் பிரேத பரிசோதனை அறிக்கை வெளிவருவதற்கு முன்னரே முன்னாள் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சருமான சந்திரசிறி கஜதீர, நிமலரூபனின் மரணம் இருதய நோயினால் ஏற்பட்டதொன்றெனத் தெரிவித்திருந்தார். மரணத்துக்கான காரணம் குறித்து மேலும் பல வெவ்வேறு விமர்சனங்கள் எதிர்வரும் நாள்களில் வெளியிடப்படக்கூடும்.

1990 ஆம் ஆண்டில் மகசின் சிறைச்சாலையில் கைதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட இத்தகையதொரு தாக்குதல் சம்பவத்தில், சிங்கள சந்தேகநபர் ஒருவர் உலக்கையால் தாக்கப்பட்டு உயிரிழந்தார். தென் பகுதியில் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிங்கள இளைஞர்கள் குறிப்பிட்ட அந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஒவ்வொருவராக வெளியில் இழுத்து வரப்பட்டு பொல்லுகளால் தாக்கப்பட்டனர். இருபதுக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்களின் கைகால்கள் தாக்குதலில் அடித்து முறிக்கப்பட்டன. அதேபோன்ற விதத்தில் தற்போது விடுதலைப் புலி சந்தேகநபர்கள் என்ற போர்வையில் தமிழ் இளைஞர்கள் தாக்கப்பட்டு கை, கால்கள் முறிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் நிமலரூபனுக்கு நேர்ந்த கதி இனவாத செயற்பாடாகவே நோக்கப்படவேண்டியதொன்று.

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களிடம் பிரபாகரனின் படம் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டமை அரசுக்கு வாக்காலத்து வாங்கும் ஒரு சில பத்திரிகையாளர்களுக்கு வெறும் வாயைமென்றவர்களுக்கு மெல்லுவதற்கு அவல் கிடைத்தமை போன்றாகியுள்ளது.

அவர்களால் உயிரிழந்த விடுதலைப் புலிகளது நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டதென்ற செய்தி எம்மைப் பொறுத்த வரை ஆச்சரியமான தொன்றல்ல. அவர்களது அரசியல் அபிலாஷை சரியாகவோ பிழையாகவோ இருக்கலாம். அவர்கள் வாழைக்குலை திருடினார்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்களல்லர். விடுதலைப்புலிகள் அமைப்புடன் தொடர்பு வைத்திருந்ததான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களே அவர்கள். அதனால் அத் தமிழ் இளைஞர்களிடம் பிரபாகரனின் படம் இருந்தமையொன்றும் புதுமையானதல்ல.

விடுதலைப்புலிகளது கிளர்ச்சி குறித்து சந்தேகமும் அச்சமும் கொண்டுள்ள தரப்பினர் எப்போதுமே இத்தகைய புனைகதைகளைக் கட்டவிழ்த்து விடுவது வழமையான தொன்றே. இத்தகைய கிளர்ச்சிச் சிந்தனை குறித்து மனச்சாட்சியுள்ள எவரும் சிந்தித்துப் பார்ப்பதற்காக உதாரணத்துக்கு ஒரு தகவலைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அவளது பெயர் திருமகள். கடந்த 16 ஆண்டுகள் காலமாக வெலிக்கடை சிறையின் பெண்கள் பிரிவில் சந்தேக நபர்என்ற பெயருடன் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறாள். இந்த 16 ஆண்டுகளில் 429 தடவைகள் அவள் சிறையிலிருந்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதிலும், இதுவரை அவள் மீதான குற்றமெதுவும் நிரூபிக்கப்படவில்லை. இருந்தாலும் அவள் தொடர்ந்தும் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறாள். தான் நிரபராதி என நிரூபிக்க அவள் இன்னமும் எத்தனை வருடங்கள் நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டியிருக்குமோ? அவளுக்கு விடுதலை கிட்டுவது எப்போது?

திருமகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுப் போன்ற குற்றச்சாட்டின் பேரில் மேலும் நான்கு பேர் மகசீன் சிறைச்சாலையில் கடந்த 16 ஆண்டுகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களும் அதே போன்று 429 தடவைகள் சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றத்துக்கும், நீதிமன்றத்திலிருந்து மீண்டும் சிறைசாலைக்கும் சென்று திரும்பி கொண்டிருப்பவர்கள். இவர்களுக்கு விடுதலை கிட்டுவது எப்போது? ஒன்றில் அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது தண்டனை வழங்கப்பட வேண்டும். இவர்களுக்கு ஆரம்பத்திலேயே சிறைத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால், இன்று ஒரு வேளை அவர்கள் தமது தண்டனைக் காலம் முடிந்து விடுதலையாகியிருக்கலாம். இது ஒரேயொரு உதாரணம் மட்டுமே. இதனைப் போன்ற உதாரணங்கள் இன்னமும் எத்தனையோ உள்ளன. இத்தகைய நிலையில் இருப்போர் கிளர்ச்சி குறித்துச் சிந்திகாதிருந்தால் மட்டுமே நாம் ஆச்சரியப்பட இயலும்.

1983 ஆம் ஆண்டில் குட்டிமணி உட்பட பல தமிழ் இளைஞர்கள் வெலிக்கடைச் சிறையில் படுகொலையுற நேர்ந்தது. இன்று நிமலரூபன் மஹர சிறைச்சாலையில் மரணத்தைத் தழுவநேர்ந்துள்ளது. அன்று முதல் இன்று வரை களுத்துறை சிறைச்சாலையிலும், பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமிலும், இந்நாட்டின் தமிழ், முஸ்லிம், சிங்கள இளைஞர்களின் இரத்த ஆறு ஓடியிருக்கிறது.

அண்மையில் கொலையுண்ட நிமலரூபன் இன்று எம் மத்தியில் இல்லை. ஜூலை மாதத்தின் இரவு இருள் நம்மைச் சுற்றிச் சூழ்ந்துள்ளது. தொடரும் நியாயமற்ற படுகொலைகளால் ஜூலை மாதத்துக் கறை மென்மேலும் இறுக்கமாகப் படிந்து வருவதை வெறுமனே கைகட்டி வாய்பொத்திப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

சந்திர ஒளி மறைந்து காரிருள் மட்டுமே மீந்திருக்கிறது. ஜூலையின் இந்த காரிருள் அகன்று வெளிச்சம் தோன்றவேண்டும். அவ்விதம் ஒளியைக் காண வேண்டுமானால், அந்த ஒளியைப் பெறுவதற்கான எமது மனித முயற்சிக்குத் தைரியமும் ஊக்கமும் அவசியம். அத்தகைய முயற்சியை நாம் கைநழுவ விடாதிருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாலட்சுமிக்கு வாய்த்த சாபம்

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. காலை மெதுவாக எழுந்து,கல்யாண மாலை நிகழ்ச்சி பார்க்க. சண்தொலைக்காட்சியில் நுழைந்தாள் சுசீத்ரா. கணவன் மனைவி ஒரே மேடையிலேயே ஒருவரை ஒருவர் காலை வாரி விடும் விவாதமேடை. ஆனந்தமாக ரசிக்க நினைத்ததால் கணவன் ராகவன் எழுந்து "தேநீர்" என்று கழுத்தை அறுத்தான்.நிகழ்ச்சி பார்க்க முடியவில்லையே என்ற முணு முணுப்புடன் தேநீரைப் போட்டு எடுத்து வருவதற்குள் நிகழ்ச்சி முடிந்துவிட்டது. அதற்குள் பிள்ளைகளும் எழுந்துவிட்டனர்.

தொலைக்காட்சி விளம்பரத்தில் நரசுஸ் நேதீரை நீட்டியபடி "இதை... இதை... இதைத்தான் எதிர்பார்த்தேன்" என்று இந்திய மனைவி மகிழ்ந்து தலையைத் தலைய ஆட்டிக் கொண்டிருந்தாள்.சுசீத்ராவுக்கு எரிச்சல் எரிச்சலாய் வந்தது. அவள் எதிர்பார்ப்போ வேறு... அமைந்துவிட்ட வாழ்க்கையோ வேறு.

பத்திலிருந்து, ஐந்து வரை அலுவலகத்துக்குப் போய்(முடிந்தால்), சனி ஞாயிறுகளில் லீவு கிடைக்கிற, ஊர்சுற்றும் புருஷனோடு வாழத்தான் கனவு கண்டாள். ஆனால் ஞாயிற்றுக் கிழமைகளில் கூட எம்.டி. ஜி.எம்.,என்று ஏர்செல் இறக்கைகளில் பறக்கிற தனியார் நிறுவன முகாமையாளர் அவளுக்கு வாய்த்தவன். உல்லாசமாக இருக்க நினைத்தவள் அவள். பிள்ளை வளர்ப்பு உட்பட் எல்லாமே அவள் தலையில். ஆனால் ராகவனுக்கு கம்பனி தான் முக்கியம். சில ஆண்களுக்குக் நிறுவனத்தில் கள்ளக்காதலி இருப்பாள். ராகவனுக்கோ கம்பெனி தான் கள்ளக்காதலி... எப்போது பார்த்தாலும் வேலை; வேலை. இன்று ஞாயிற்றுக்கிழமை. என்ன வேலை வைத்திருக்கிறானோ? என்று சுதீத்ராவுக்கு உள்ளூர கோபம்.

"இன்று ஐயா ஓய்வு. நாம் வாங்கி இருக்கிற புதுக்கார்ல உல்லாசமாக எங்காவது போகலாம். உல்லாசமாக எங்க போகலாம் ? என்று பிள்ளைகளைப் பார்த்துக் கேட்டான். தன் மூலமாகத்தானே இந்தப்பிள்ளைகளைப் பெற்றார். இருந்தும் தன்னை மதித்து ஒரு வார்த்தை கேட்கவில்லையே என்று கவலை சுசீத்ராவுக்கு. இதெல்லாம் இந்த மனுஷன் மரமண்டைக்குத் தோன்றாது என்று மன்னித்துவிட்டு "ரொம்ப நாளா பெரியபாளையத்தம்மன் கோயிலுக்குப் போக வேண்டியது கடமை இருக்கு. பெரியவன் பிறக்கிறபோது வேண்டினது. 12 வருஷமாச்சு. இன்று போய்ட்டு வந்துடனும்"என்று யோசனை சொன்னாள் சுசீத்ரா.

பிள்ளைகள் இருவரும் கோரஸாக "நாங்க வரலை"என்று கூட்டணிப் பிரகடனம்வெளியிட்டார்கள். "ஏன்?"ஆச்சரியத்துடன் கேட்டாள் அம்மா. "கோயிலுக்கா... உன்னோடயா? நீ சாமியையே பேத்துட்டு வருவியே. ஒவ்வொரு சந்நிதியிலும் ஒரு மணி நேரமாகும். போர் அடிக்கும்.

நாங்க வரலைப்பா" என்று அண்ணனும் தங்கையும் அதிசய ஒற்றுமையுடன் அறிவித்தார்கள்.

"சரி விடுங்க... வேறெங்க போகலாம்"என்று சுசீத்ராவின் யோசனையைப் படு அலட்சியமாக கை நழுவ விட்டான் ராகவன். சுதீத்ரா நொறுங்கிப் போனாள். "பிள்ளைகள் உங்க ரத்தம். உருகிப் போவீங்க. நான் என்ன உங்க ரத்தமா. எங்கே இருந்தோ வந்தவள் தானே?" என்று தன்னை அவர்கள் அந்நியப்படுத்தியதை அசிங்கப்படுத்தினாள் சுதீத்ரா. ராகவன் அவளைக் கண்டுகொள்ளவே இல்லை.

"கிஸ்கிருந்தா போகலாம் . ஜம்னு ஆடலாம்"என்று பெரியவன் ரமேஷ் ஆவலாகப் பாய்ந்தான். அவன் ராமாயண காலத்திலே கிட்கிந்தையில்இருந்தவன். ஜன்மாந்திரத் தொடர்பு."கிட்கிந்தான்னா நான் வரலை. அங்க விளையாட எனக்கு பயம். தண்ணி எனக்கு சரிவராது. வேணும்னா உல்லாசமாக ஹோட்டலுக்குப் போகலாம். அப்புறம் உல்லாசமாக மாதவன் படம் பார்க்கலாம்" என்றாள் சின்னவள் மது. "போடி. மாதவன் ஒரு இது. அவன் படத்துக்குப் போறதாம். தமிழ்ப்படமே போறப்பா" என்று தன் தமிழ்ப்பற்றை வெளிப்படுத்தினான் ரமேஷ். மாதவனைக் குறை சொன்னதால் மது நிலைகுலைந்து போனாள். "கோயிலுக்குப் போவதில்லை" என்ற தன் கொள்கைக் கூட்டணியை உ.பி.மாயாவதி ஸ்டைலில் முறித்துக் கொண்டாள். ரமேஷின் பலகால ஊழல்களைப் பட்டியலிட்டு அப்பா என்ற ஆளுனரிடம் மனுக் கொடுத்தாள். ரகளை ஆகிவிட்டது.

ஒரு பழைய கதை, பெரிய பணக்காரர் ஒருவர் நாள்தோறும் மகாலட்சுமியைப் பூசை செய்வார். லட்சுமி பக்தர். விடாமல் வழிபாடு செய்கிறவர். ஒரு நாள் அவர் எதிரில் மகாலட்சுமி தோன்றி, "அப்பா, உன் ஜாதகப்படி நாளை முதல் உனக்குக் கஷ்டகாலம். நான் இனி இந்த வீட்டில் இருக்கமுடியாது. நீ ஆழமான பக்தியுடன் என்னை வழிபட்டால் போகும் முன் ஏதாவது ஒரு நல்ல வரம் தந்துவிட்டுப் போக விரும்புகிறேன். என்ன வரம் வேண்டுமோ கேள் " என்றாள். "தாயே... இவ்வளவு நாள் நீ எங்கள் வீட்டில் இருந்தாய். அள்ள அள்ள செல்வம் வந்துகொண்டே இருந்தது. நீ போய்விட்டால் தரித்திரம் வரும். அதனால் குடும்பத்தில் சண்டைகள் கூட வரலாம். அப்படி வரக்கூடாது என்பது தான் என் விருப்பம். இவ்வளவு காலம் ஒற்றுமையாக இருந்தோம். வறுமை வந்தாலும் நாங்கள் ஒற்றுமையாக வாழுகிற வரம் தர வேண்டும் " என்றார் பெரியவர். மகாலட்சுமி சிரித்துக்கொண்டே "அப்படியே ஆகட்டும். இந்தக் குடும்பம் ஒற்றுமையாகவே இருக்கும் வரம் தந்தேன் " என்று சொல்லிவிட்டாள்.

மறுநாள் குளித்துவிட்டு பூசையறைக்குள் வழக்கம் போல வந்த பெரியவர் , மகாலட்சுமி அங்கே இருக்கமாட்டாளே என்று கவலையோடு உள்ளே வந்தார். என்ன ஆச்சரியம். ஜகஜ்ஜோதியாய் அங்கு மகாலட்சுமி வீற்றிருந்தாள். "தாயே ...நேற்றே நீங்கள் போகவேண்டும் என்றீர்கள். இன்றைக்கு எப்படி...!என்று இழுத்தார் பெரியவர். தாயார் சிரித்தபடி "நீதான் என் பலவீனம் தெரிந்து கட்டிப்போட்டுவிட்டாய்" என்றாள்.


பெரியவர் "எப்படி? நானா? உங்களைக் கட்டிப் போட்டேனா?"என்று இழுத்தார்.

"ஆமாம்... ஒற்றுமையான குடும்பத்தை விட்டு நான் போகவே முடியாது என்பது எனக்குள்ள சாபம். அதைத் தெரிந்து நீ குடும்ப ஒற்றுமையைக் கேட்டாய். நான் வசமாக சிக்கிக் கொண்டேன்" என்றாள் மகாலட்சுமி. ஒரு குடும்பத்தின் பலமே அதன் ஒற்றுமை தான்!அது சரி, ஒற்றுமை எதனால் கெடுகிறது?



சுகி.சிவம்

# விளையாட்டிலும் முக்கிய இடம் பிடித்த ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி



> " 140ஆவது ஆண்டு நிறைவில் காலடி பதித்திருக்கும் இக்கல்லூரி தொடந்தும் வளர்ச்சிப் படியில் முன்நோக்கிச் செல்ல கல்வித் துறையின் அண்மைக்கால அபிவிருத்தித் திட்டமான 1000 பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் முதற் தொகுதிப் பாடசாலைகளுள் ஒன்றாக இணைத்துக் கொள்ளப்படும் என்ற ஆளுநரின் அறிவிப்பின் பிரகாரம் துரித வளர்ச்சி காண ஆவலுடன் காத்திருக்கின்றது.

என்.சசிக்குமார்

1997இல் தனது 125ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூர்ந்த இக்கல்லூரிக்கு அதனைச் சிறப்பாகக் கொண்டாடக்கூடிய நிலைமை அப்போது காணப்படவில்லை. எனினும் அவ்வாண்டில் புனித கென்றி அரசர் கல்லூரியில் உப அதிபராகவிருந்த ஜே.எ.ஜேசுதாஸ் ஆசிரியர் குழாமில் இணைத்துக் கொள்ளப்பட்டது ஓர் குறிப்பிடத்தக்க விடயமாகும். 1997-99 காலப்பகுதியில் ஜி.ரி.இசன் நிறுவனத்தினால் 6 பாடசாலைகள் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட போது புனித அந்தோனியார் கல்லூரியும் அவற்றில் ஒன்றானது. கல்லூரிச் சமூகத்தின் வேண்டுகோளுக்கிணங்க சிதைவுற்ற நிலையில் காணப்பட்ட இக் கல்லூரி அதன் முன்னைய கலையம்சம் மிக்க நிலைக்கு மீண்டும் கொண்டுவரப்பட்டது. அதிபர் திரு. மு. இரட்ணசங்கம் இப்பணியை சிறப்பாக செய்து முடித்தார், 1999.02.10 புனரமைக்கப்பட்ட கல்லூரி சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

2000.04.01 அதிபர் மு. இரட்ணசிங்கம் ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச்செல்ல பிரதி அதிபராகக் கடமையாற்றிய அருள்திரு ஜே.எ.ஜேசுதாஸ் அடிகளார் அதிபர் பெறுப்பினை ஏற்றுக் கொண்டார். நூற்றாண்டு காலமாக அருள் சகோதரர்களினாலும் குருமாரினாலும் வழி நடத்தப்பட்ட கல்லூரி மீண்டும் குருமாரின் தலைமைத்துவத்தில் கொண்டுவரப்பட்டது வரலாற்றில் ஓர் குறிப்பிடத்தக்க அம்சமாகும். கட்டடங்கள் யாவும் புனரமைக்கப்பட்டபின் பாடவிதான மற்றும் இணைப்பாட விதான விடயங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டிய காலமாக ஜே.எ.ஜேசுதாஸ் அடிகளாரின் காலம் அமைந்திருந்தது. இம் முயற்சியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்த அவர் கல்வியிலும் விளையாட்டிலும் முழுக்கவனத்தையும் செலுத்திவந்தார். முன்னைய புகழையும் பெருமையையும் மீண்டும் நிலைநாட்டுவதில் அவர் வெற்றி கண்டார். பொதுப்பரீட்சைகளில் குறிப்பிடத்தக்களவு படிப்படியான சித்தி வீத உயர்வும் விளையாட்டில் அகில இலங்கை சம்பியனாக உடற்பயிற்சி அணி 2008இல் தெரிவு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கவையாகும்.

கல்லுரியின் வள மேம்பாட்டைப் பொறுத்தவரை கணினிக் கற்கை நிலையம், விஞ்ஞான ஆய்வு கூடம் மற்றும் நூலகம் போன்றவை அவர் மேற்கொண்ட தீர்க்கமான முடிவுகளின் பயனாகக் கிடைத்த வளங்களாகும். விளையாட்டுத்துறை விருத்திக்காக 400m ஓடுபாதை கொண்ட மைதான உருவாக்கத்திற்கான ஆரம்ப முயற்சிகளையும் அவர் மேற்கொண்டிருந்தார். பாடசாலையின் வளர்ச்சியில் பக்கபலமாகத்திகளும் பழைய மாணவர் சங்கங்களை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அமைத்தும் புதுப்பித்தும் பல நன்மைகளை கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெற்றுக் கொடுத்தார். ஏழை மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டு ஆரம்பித்த "கிறிஸ்துஇல்ல" விடுதியானது கல்லூரியின் ஓர் பயன்மிக்க ஆதாரமாக அமைந்ததை யாரும் மறுக்க முடியாது. மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றிவந்த அடிகளார் யாழ் ஆயரின் பணிப்பிற்கிணங்க 09.02.2009இல் ஒத்துமாறல் அடிப்படையில் புனித இளவாலைக் கென்றியரசர் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். அங்கு அதிபராகக் கடைமையாற்றி வந்த அருள்திரு க. ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளார் ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி அதிபரானார். நவாலி றோ.க. வித்தியாலயத்தில் அங்கு ஆசிரியராகக் கடமையாற்றி வந்த அருள்திரு அ.றொபின்சன் ஜோசவ் அடிகளாரும் புனித அந்தோனியார் கல்லூரிக்கு இடமாற்றப்பட்டதுடன் "கிறிஸ்து இல்ல" விடுதியை நிர்வகிக்கும் பெறுப்பும் ஆயரால் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அருள்திரு க.ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளார் கல்வி ஒழுக்கம் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் என்பவற்றில் அதிக அக்கறை கொண்டவராகச் செயற்பட்டு வருகின்றார். 2011லும் எமது கல்லூரி உடற்பயிற்சிஅணி அகில இலங்கை சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டமையும் அஞ்சலோட்டப் போட்டியில் தேசிய மட்ட வெற்றிகளைப் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத் தக்கவையாகும். மேலும் கணினி அறிவை மாணவர்கள் ஆசிரியர்கள் மத்தியில் வளர்த்து அதன் பயன்பாட்டை அதிகரிக்கச்செய்ததுடன், 2010இல் தகவல் தொழில்நுட்பப் போட்டியில் வெற்றி பெற்றது டன், கல்லூ ரியை அகில இலங்கைப் பாடசாலைகளின் கணினி வலையமைப்பில் இணைத்துக்கொண்டதும் பெருமைக்குரிய விடயங்களாகும். அத்தோடு கூடைப்பந்தாட்டம் மற்றும் றக்பி போன்ற விளையாட்டுக்கள் 2012இல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதையும் குறிப்பிட முடியும். அருள்திரு அ.றொபின்சன் ஜோசவ் மேற்படிப்பிற்காக 2011 செப்ரெம்பரில் வெளிநாடு சென்றதைத் தொடர்ந்து "கிறிஸ்து இல்ல" விடுதியை நிர்வகிக்கும் பெறுப்பையும் அதிபர் பெறுப் பேற்றுள்ளார். கல்லூரியின் வளர்ச்சிக்கு பெரும் துணையாக விளங்கும் பழைய மாணவர்களுடன் தொடர்பு கொண்டு பழைய மாணவர் சங்கத்தின் வளர்ச்சிக்கு மெருகூட்டி அவர்களின் உதவிகளுடன் பல முன்னேற்றகரமான வேலைத்திட்டங்கள் பலவற்றை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றார் பாடசாலை முதல்வர்.

140ஆவது ஆண்டு நிறைவில் காலடி பதித்திருக்கும் இக்கல்லூரி தொடந்தும் வளர்ச்சிப் படியில் முன்நோக்கிச் செல்ல கல்வித் துறையின் அண்மைக்கால அபிவிருத்தித திட்டமான 1000 பாடசாலை அபிவிருத்தித்திட்டத்தில் முதற் தொகுதிப் பாடசாலைகளுள் ஒன்றாக இணைத்துக் கொள்ளப்படும் என்ற ஆளுநரின் அறிவிப்பின் பிரகாரம் துரித வளர்ச்சிகாண ஆவலுடன் காத்திருக்கின்றது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுத்தப்பட்ட நிவாரணத்தை சம்பூர் மக்களுக்கு வழங்குக


## திருகோணமலை நகரசபை உறுப்பினர் வேண்டுகோள்

திருகோணமலை, ஜூலை19

மூதூர் கிழக்கு,சம்பூர் பிரதேசத்திலிருந்து 2006 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து தற்போது நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் 262 குடும்பங்களைச் சேர்ந்த 4036 பேருக்கான உலர் உணவு நிவாரணத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு திருகோணமலை நகரசபை உறுப்பினர் சி.நந்தகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உலக உணவுத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டு பல மாதங்கள் கடந்து விட்ட நிலையில் 160 முன்பள்ளி மாணவர்களும் பாடசாலைகளுக்கு செல்கின்ற 918 மாணவர்களும் போஷாக்கு



இன்மையாலும் பட்டினியாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு உலர் உணவு வழங்க அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் அவசரமாக தலையிட்டு அவர்களுக்கான உதவிகளைச் செய்ய வேண்டும்.

முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் 99 பேர் கர்ப்பிணிகள். 178 பேர் பாலூட்டும் தாய்மார்கள். 256 பேர் கணவனை இழந்த விதவைகள். 31 பேர் தாய் மற்றும் தந்தையரை இழந்தவர்கள். 160 பேர் முன்பள்ளி செல்லும் மாணவர்கள். 918 பேர் பாடசாலை செல்லும் மாணவர்கள் ஆவர்.

உலர் உணவு நிறுத்தப்பட்டதன் காரணமாக முகாம்களில் உள்ள ஆண்கள் நாளாந்தம் கூலித்தொழில் மற்றும் சில காலங்கள் சிறு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவருகின்றார்கள். போதிய வருமானம் இல்லாததன் காரணமாகவும் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படாமையாலும் சிறார்கள், பள்ளி செல்லும் மாணவர்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார் போதிய போஷாக்கின்றியும் பட்டினியாலும் துன்பப்படுகின்றனர். இதனால் அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலையும் காணப்படுகின்றது.

எனவே அரசு உடனடியாகத் தலையிட்டு உலர் உணவு நிவாரணத்தை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

---

கிழக்குத் தேர்தலில்

# திறமையானவர்களை தெரிவு செய்யுங்கள்

## மு.காவின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் வேண்டுகோள்

சாய்ந்தமருது, ஜூலை 19

தேர்தலில் திறமையான பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்யவேண்டும் என அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் எஹியாகான் கோரிக்கை விடுத்துள்ளார்.

சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம்.உதுமாலெவ்வையின் 35 வருட அரச சேவைப் பூர்த்தியைப் பாராட்டி நடைபெற்ற சேவை நலன் பாராட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முகம் கொடுக்கத் தயாராகவுள்ள தருணம் இதுவாகும். இந்தத் தேர்தலில் மக்கள் திறமையான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவேண்டும்.

ஏனெனில், மக்களுக்கான சேவைகள் மக்களின் காலடிக்குச் சென்று வழங்கும் பணியை எங்களது கட்சியின் தலைவர் அமைச்சர் றிஷாட் பதியுதீன் செய்து வருகிறார். அந்தக் கட்சியின் தலைமையின் கீழுள்ள நானும் எனது பணிகளை மக்களின் காலடிக்குச் சென்று வழங்கி வருகின்றேன். மக்கள் சேவைக்கு எங்களிடம் கட்சி வேறுபாடுகள் இல்லை. - என்றார். (ச)

---

# நீர்க் குழாய் வெடித்து 7 பேர் படுகாயம்

கண்டி,ஜூலை19

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியின் கொட்டக்கலை - ரொசிடா நகர சபைக்கு அண்மையில் உள்ள பாலத்தில் நீர் குழாய் ஒன்று வெடித்ததில் 7 பணியாளர்கள் காயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெற்ற இந்த வெடிப்பில் காயமடைந்த 7 பேரும் கொட்டக்கலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த பாலத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளை இவ்வெடிப்பு இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

---



அம்பாறை, நாவிதன்வெளிப் பிரதேசத்தையும் கல்முனைப் பிரதேசத்தையும் இணைக்கும் கிட்டங்கிப் பாலத்தின் இரண்டாம் கட்ட கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

---

# மலையக மக்கள் முன்னணியை முன்மாதிரியாக கொள்ளுங்கள்

## ம.ம.முன்னணித் தலைவி கருத்து

இரத்தினபுரி,ஜூலை19

சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலில் மலையக மக்கள் முன்னணி வழங்கியுள்ள ஒத்துழைப்பை எதிர்காலத்தில் சகல மலையக அமைப்புகளும் முன்னுதாரணமாகக் கொள்ளவேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவி திருமதி சாந்தினிதேவி சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலில் ம.ம.மு -இ.தொ.கா - ஜ.ம.மு ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்து போட்டியிடுவது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

மலையக மக்கள் ஓர் அணியில் இணைய வேண்டும் என்று குரல் கொடுக்க வேண்டிய நாம் ஒன்றிணைந்து

> கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படாவிட்டால் மக்களை ஒன்று திரட்டுவது என்பது கேலியாகிவிடும்.

செயற்படாவிட்டால் மக்களை ஒன்று திரட்டுவது என்பது கேலியாகிவிடும். தலைமைகள் மக்களுக்கு உதாரணமாக விளங்க வேண்டும் என்பதற்கான சமிக்ஞையை இப்போது மலையக மக்கள் முன்னணி வழங்கியுள்ளது. மலையகத்தின் ஏனைய அமைப்புகளும் இதன்வழியே தமது ஒத்துழைப்பை வழங்கினால்தான் நாம் மக்கள் பிரதிநிதிகளாக இருப்ப தில் அர்த்தமிருக்கும்- என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

---

# மக்களின் உணர்வுகளை மதித்து செயற்படும் தலைமையே தேவை

## பேராசிரியர் காதர் தெரிவிப்பு

எருவில்,ஜூலை19

மக்களின் உணர்வுகளை மதித்து மக்களின் சக்தியை உணர்ந்து மக்களுக்காகப் பேசக்கூடிய புதிய அரசியல் தலைமைத்துவத்தைக் கொண்டு வர மக்கள் முன் வரவேண்டும் என்று தென்கிழக்கு பல்கலைக்கழக ஸ்தாபக துணைவேந்தர் பேராசிரியர் எம்.எல்.ஏ. காதர் தெரிவித்தார்.

மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய புதிய யுகத்துக்கு ஏற்றவாறு அரசியலில் மாற்றங்கள் கொண்டு வரப்படவேண்டும். தற்போது எல்லாமே அரச அதிகாரத்தின் கீழ்த்தான் நடக்கிறது.

இதனால் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தீர்க்கப்படுவதில்லை. அரசு எதை நினைக்கின்றதோ அதை மக்களுக்குச் செய்வதாகக் காட்டிக்கொண்டு தனது இலக்கை அடைந்துகொள்கிறது.

முன்னைய காலப்பகுதியில் எந்த விடயமாக இருந்தாலும் நாடாளுமன்றத்தில் கொண்டுபோய் விவாதித்து தீர்வு காணப்பட்டது. ஆனால், இப்போது அரசு எதை நினைக்கின்றதோ அதைத்தான் செய்கின்றது. ஆகவே, மக் கள் விழிப்படைந்து மக்க ளின் தேவைகளை நிறைவேற்றுகின்ற - மக்களுக்காகக் குரல் கொடுக்கின்ற புதிய அரசியல் தலைமைகளை உருவாக்க முன் வரவேண்டும் - என்றார். (ச-31)

---

# நீதியான தேர்தலை நடத்த அனைவரும் ஒத்துழையுங்கள்

## அம்பாறை மாவட்ட தேர்தல் திணைக்களம் கோரிக்கை

எருவில்,ஜூலை19

அம்பாறை மாவட்டத்தில் அமைதியானதும், நீதியானதுமான வன்முறைகளற்ற தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு சகல தரப்பினரதும் ஒத்துழைப்பை அம்பாறை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் கோருகின்றது.

இதுகுறித்து அம்பாறை மவட்ட தேர்தல் திணைக்களம் செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இதற்கு மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், கல்வி சமூகத்தினர், சிவில் சமூகத்தினர், ஊடகவியலாளர்கள், வர்த்தக சமூகத்தினர்

> பொது அமைதிக்குக் குந்தகம் விளைவித்தால் எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

என அனைவரும் பூரண ஒத்துழைப்பை நல்க வேண்டுமெனத் தேர்தல்கள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் வேட்பு மனுக்களைக் கையளிக்க முடியும் என்று அம்பாறை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

வேட்பு மனு தாக்கல் செய்யும் காலப்பகுதியில் ஊர்வலமாகச் செல்லுதல், சட்டவிரோதமாகக் கூட்டம் கூடுதல், பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தல், பொது அமைதிக் குக் குந்தகம் விளைவித்தல் போன்றவற்றுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைஎடுக்குமாறு பொலிஸ் திணைக்களத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-31)

---

# தோல் நோய்களுக்கு சிகிச்சை

எருவில், ஜூலை19

மட்டக்களப்பு, காத்தான்குடி சுகாதார அலுவலகத்தில் தோல் நோய்களுக்கான நடமாடும் சேவை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி யு.எல். நசிர்தீனின் ஏற்பாட்டில் நடைபெற்ற நடமாடும் சேவையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தோல் வைத்திய நிபுணர் டாக்டர் தமிழ்வாணன் உட்பட பல தோல் வைத்தியர்கள் கலந்து கொண்டு சிகிச்சையளித்தனர்.

தொழுநோய் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்றுவரும் நடமாடும் சேவைகளில் ஒன்றாகவே இந்தத் தோல் சிகிச்சை நடமாடும் சேவை நடைபெற்றது. (ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** வீண் செலவுகள் குறையும். புதிய முயற்சிகளில் நிதானம், ஆலோசனை அவசியம். சிக்கலான சூழ்நிலைகளை தைரியமாகச் சமாளித்து நல்ல திருப்பங்களைக் காண்பீர்கள். அலுவலக பணியாளர்கள், மேலதிகாரிகளிடம் வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் விற்பனை கூடிய போதும் லாபம் குறைவாகவே இருக்கும்.

**இடபம்:** நல்லவர்கள் உதவியால் நலம் பெறுவீர்கள். தொழிலில் மேன்மையான நிலைமை காணப்படும். தெய்வீக நம்பிக்கை அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு, நெருங்கிய நபர்கள் மூலம் சில பயனுள்ள விடயங்களைச் செய்து கொள்வீர்கள்.

**மிதுனம்:** மாற்றங்களை எதிர்நோக்கிச் சில பணிகளை மேற்கொள்வீர்கள். உடல்நிலையும், மன நிலையும் ஒத்துழைப்பது சற்றுக் கடினமாக இருக்கும். மற்றவர்களின் அதிருப்திக்கு ஆள்படுவீர்கள். கடன் வசூலிப்பு முயற்சிகளில் எதிர்பார்த்த பலன் இருக்காது.

**கடகம்:** ஒரு பணிக்காக வீட்டில் இருந்து தாமதமாகச் செல்வீர்கள். நிதானம் தவறாதீர்கள். புதிய முயற்சிகளை தள்ளி வைக்க வேண்டும். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமையை காணலாம். பயணங்களைத் திட்டமிட்டுக் கொள்வதல் வீண் சிரமங்களை தவிர்க்கலாம்.

**சிங்கம்:** எடுத்த விடயங்களில் இடையூறற்ற வெற்றி உண்டு. நேரம் தவறி உணவு உட்கொள்ள நேரிடும். அதிகரிக்கும் பணத் தேவைகள், வரவுகளால் பூர்த்தியாகும். அலுவலகப் பணிகளில் சக ஊழியரின் விடுப்பின் காரணமாக வேலைப் பளு கூடும்.

**கன்னி:** திட்டமிட்ட செயல்பாடுகள் இருக்கும். மனநிலையில் மகிழ்ச்சி காரணமாக குடும்பத்துக்காகச் செலவிடுவீர்கள். தொழிலில் பங்குதாரர்களுடன் சுமூகமான போக்கை ஏற்படுத்திக் கொள்ளுதல் அவசியம். வியாபாரத்தில் நிதானமான அணுகுமுறை தேவை. விருந்துகளில் பங்கேற்கலாம்.

**நாளை**

ஆடி 05 வெள்ளிக்கிழமை 20.07.2012
திதி: பிரதமை மு.ப 10.32 வரை
நட்சத்திரம்: பூசம் பி.ப 12.36 வரை
சுபநேரம்: 06.01- 07.31 வரை
ராகு காலம்: 10.31- 12.01 வரை

**துலாம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள். பாசமானவர்களின் சந்திப்பு ஏற்படும். எந்த ஒரு விடயத்திலும் துணிவுடன் செயல்படுவீர்கள். வரவேண்டிய பணம் வந்து சேரும். அலுவலகப் பணிகளில் மேலதிகாரிகளின் உத்தரவுகள் சிரமம் தரும். தொழில், வியாபார ரீதியான தொல்லைகள் குறையும்.

**விருச்சிகம்:** சில விடயங்கள் தங்களின் எதிர்பார்ப்புக்கு எதிர்மறையாக இருந்தபோதும், அதுவும் நன்மைக்கே என்று எண்ணும் அளவில் இருக்கும். மாணவர்களுக்கு, மேற்படிப்பு விடயங்களில் கூடுதல் கவனம் இருக்கும். மரியாதை நிமித்தமாக பெரிய மனிதர்களின் சந்திப்பை ஏற்படுத்திக் கொள்வீர்கள்

**தனுசு:** சில காரணங்களுக்காக அவசர கதியில் செயல்படுவீர்கள். குழந்தைகளால் குதூகலம் காணப்படும். தொழிலில் நிலவும் இடர்பாடுகளை நீக்க சிலரின் ஆலோசனையை நாடுவீர்கள். நீண்ட நாள் கனவு நிறைவேறும்.

**மகரம்:** சிறப்புகள் கூடும். சிந்தனைகளால் லாபங்கள் கூடும். உறவினர்கள் உங்களிடம் பாசமுடன் நடந்து கொள்வர். உங்களின் முயற்சிகளுக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். நிதி நிலைமையில் முன்னேற்றம் காணப்படும்.

**கும்பம்:** தொழிலில் எதிர்பாராத வகையில் சிக்கல்கள் ஏற்பட்டபோதும், அதை சாதுரியமாகக் கையாள்வீர்கள். நிதி நிலையில் நிலவும் ஏற்ற, இறக்கங்களை சீர் செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள். தந்தை வழியில் உதவிகள் உண்டு. தொழிலில் புதிய தொடர்புகள் ஏற்படும்.

**மீனம்:** எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு விடங்களிலும், புத்தி சாதுர்யத்துடன் செயற்பட்டு திறமையை வெளிப்படுத்துவீர்கள். எதிர்பாராத வகையில் சிலரின் சந்திப்புகள் ஏற்படும். மேலதிகாரிகள் உங்களிடம் அனுசரணையாக நடந்து கொள்வர். எல்லோரிடமும் அனுசரித்துச் சென்று பாராட்டுப் பெறுவீர்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 3 | | | | 9 | | |
| | 5 | | 8 | 9 | 1 | 2 | 6 | 3 |
| | | | | | | | 4 | |
| 3 | | 5 | 6 | | | | | 8 |
| | 8 | 7 | | 5 | | 6 | 3 | |
| 1 | | | | | 9 | 7 | | 5 |
| | 6 | | | | | | | |
| 5 | 3 | 2 | 9 | 6 | 7 | | 8 | |
| | | 1 | | | | 3 | 9 | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 5 | 6 | 8 | 9 | 2 | 4 | 7 |
| 8 | 9 | 7 | 4 | 1 | 2 | 6 | 5 | 3 |
| 6 | 4 | 2 | 5 | 7 | 3 | 1 | 8 | 9 |
| 2 | 8 | 4 | 9 | 6 | 7 | 5 | 3 | 1 |
| 7 | 6 | 3 | 1 | 2 | 5 | 4 | 9 | 8 |
| 5 | 1 | 9 | 8 | 3 | 4 | 7 | 6 | 2 |
| 4 | 2 | 6 | 3 | 9 | 1 | 8 | 7 | 5 |
| 9 | 7 | 8 | 2 | 5 | 6 | 3 | 1 | 4 |
| 3 | 5 | 1 | 7 | 4 | 8 | 9 | 2 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்

## பீற்றர் பொன்கலன் (கில்லறி) யூட் அருளானந்தம் (ஜெனா)

### (உரிமையாளர் - றெக்ஸ் ரெயிலறிங் - யாழ்ப்பாணம்)



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், G.P.S. வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பீற்றர் பொன்கலன் (கில்லறி) யூட் அருளானந்தம் (ஜெனா) 17.07.2012 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பீற்றர் பொன்கலன் (கில்லறி) மற்றும் அனா தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்ற சிறிதரன் (உரிமையாளர் - கிருஷ்ணா அப்பளக் கொம்பனி) மற்றும் செல்வராணி தம்பதியரின் அன்பு மருமகனும் ஸ்ரீரஞ்சினியின் பாசமிகு கணவரும், ஆர்த்திகன், அபிஷனா, அக்ஷனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், றெக்ஸ்சின் (பிரான்ஸ்) அன்புச் சகோதரரும், ரேகா (பிரான்ஸ்), ஸ்ரீறஞ்சித்தன் (கனடா), ஸ்ரீசுபாசினி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், றொயிஸின் அன்புப்பெரியப்பாவு மாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (19.07.2012) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு. திருநெல்வேலி பிரான்சிஸ் சவேரியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

G.P.S. வீதி, கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(20592)(6-7-8)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆள்கடத்தலில் ஈடுபடும் படகுகளின் அனுமதி ரத்து

## கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை

கொழும்பு,ஜூலை19
கடல் வழியாக சட்ட விரோத ஆள்கடத்தலில் ஈடுபட்டு கைப்பற்றப்பட்டுள்ள ஆழ்கடல் படகுகளில் கடற்றொழில் செய்வதற்காக வழங்கப்பட்ட பதிவுகள் அனைத்தையும் ரத்துச் செய்யக் கடற்றொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரட்ணவின் ஆலோசனைக்கமைய கடற்றொழில் திணைக்களம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது என்று கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நிமல் ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**ஆழ்கடல் படகுகளில் தொழில் புரியும் மீனவர்கள் ஆள்கடத்தல் தொழிலில் ஈடுபடுவதில்லை. படகுகளின் உரிமையாளர்களே இதனைச் செய்கின்றனர்.**

எந்தக் காரணம் கொண்டும் ஆள்கடத்தலில் ஈடுபட்ட படகுகளுக்கு இனி மேல் கடற்றொழில் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது.

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு ஆள்கடத்தலில் ஆழ்கடல் படகுகள் ஈடுபடுத்தப்படுகின்றன. இதனால் ஆழ்கடல் கடற்றொழில் செய்பவர்களுக்கு பாதிப்பை இவர்கள் ஏற்படுத்துகின்றனர்.

இந்த ஆண்டில் மட்டும் இதுவரை ஆள்கடத்தலில் ஈடுபட்ட சுமார் ஆறு ஆழ்கடல் படகுகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்ட ரீதியான வழக்குகள் முடிவடைந்ததும் நீதிமன்றம் ஊடாக அவை உரிமையாளரிடம் ஒப்படைக்கப்படும். அதன் பின்னர் அவர்கள் அவற்றைக் கடற்றொழிலுக்காகப் பயன்படுத்த முடியாதபடி பதிவுகள் அனைத்தும் ரத்துச் செய்யப்படும்.

ஆழ்கடல் படகுகளில் தொழில் புரியும் மீனவர்கள் ஆள்கடத்தல் தொழிலில் ஈடுபடுவதில்லை. படகுகளின் உரிமையாளர்களே இதனைச் செய்கின்றனர். சிலர் உரிமையாளர்களிடமிருந்து பணத்தைக் கொடுத்து ஆழ்கடல் படகுகளை கொள்முதல் செய்து ஆள்கடத்தலுக்காகப் பயன்படுத்துகின்றனர். எனவே, இவ்வாறனவர்களின் பெயரில் இனி மேல் ஆழ்கடல் படகுகள் பதிவு செய்யப்படமாட்டாது- என்றார்.(ச)

## உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் ரத்து

### பரீட்சைத் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு,ஜூலை19
2011 ஆம் ஆண்டுக்கான ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. புதிதாகப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட இருப்பதனால் முன்னர் வெளியிடப்பட்ட அனைத்துப் பெறுபேறுகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் நாட்டின் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட உள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைப் பெறுபேறுகளில் மாற்றம் ஏற்படாது. இசட் புள்ளி மற்றும் மாவட்ட நிலை ஆகியவற்றில் மாற்றங்கள் ஏற்படும்'என்று தெரிவிக்கப்படுகின்றது. அடுத்த இரண்டு வாரங்களுக்குள் புதிய பெறுபேறுகள் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

## தந்திச் சேவையை நிறுத்த அரசு திட்டம்

கொழும்பு, ஜூலை 19
காலனி ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட தந்திச் சேவையை நிறுத்துவதற்கு இலங்கை அரசு திட்டமிட்டுள்ளதாக அஞ்சல் துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்தார்.

மின்னஞ்சல் மற்றும் ஏனைய நவீன தொடர்பாடல் முறைகளின் வளர்ச்சியால், தந்திச்சேவையை மேற்கொள்வதில் இலாபம் கிடைக்காததனாலேயே குறித்த சேவையை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இலாபம் கிடைக்காத தந்திச் சேவையை அரசு நடத்தி வருவதாகவும், தற்போது நாளொன்றுக்கு 50 தந்திகள் வரையே அனுப்பப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தந்தித் திணைக்களத்தை மூடிவிட்டு அதில் பணியாற்றும் 1800 பணியாளர்களை அஞ்சல் திணைக்களத்தின் ஏனைய பிரிவுகளில் இணைத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அரசதுறையான அஞ்சல் சேவை, கடந்த ஆண்டில் 3 பில்லியன் ரூபா நட்டத்தைச் சந்தித்துள்ளது. காலனி ஆட்சிக் காலத்தில்,இருந்து தந்திச் சேவை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

வங்கிகள் மற்றும் பொதுச் சேவை நிறுவனங்கள் இதனை அதிகளவில் பயன்படுத்தி வந்தன. ஆனால் தற்போது இணையம், மின்னஞ்சல், தொலைநகல், குறுந்தகவல் போன்றவற்றினால் தந்திச்சேவை வாடிக்கையாளர்களை இழந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.(ச)

## காலாவதியான அரிசி மூட்டைகள் சிக்கின

**காலாவதியான அரிசி மூடைகள் கொழும்பில் விநியோகிப்பதற்காக பொலநறுவையிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.**

கொழும்பு, ஜூலை19
கொழும்பு, கொட்டாஞ்சேனை பகுதியில் காலாவதியான நிலையில் விநியோகத்துக்குத் தயாராகவிருந்த 1075 அரிசி மூடைகளை நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

ஒவ்வொன்றும் 10 கிலோ கிராம் நிறை கொண்ட 1075 அரிசி மூடைகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டதாக அதிகார சபையின் அதிகாரியொருவர் கூறினார்.


காலாவதியான அரிசி மூடைகள் கொழும்பில் விநியோகிப்பதற்காகப் பொலநறுவையிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளன. கொட்டாஞ்சேனையில் வைத்து இவை விநியோகிக்கப்படும்போது கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து, மூடைகளை ஏற்றி வந்த லொறியை முற்றுகையிட்டனர். இந்த அதிகாரி கள் குறித்த அரிசி மூடைகளை கைப்பற்றியுள்ளனர்.

ஒவ்வொரு அரிசி மூடையிலும் 2012-01-28 என்று காலா வதி திகதி குறிப்பிடப்பட் டுள்ளது. காலாவதியான அரி சியை விநியோகித்த விநி யோகஸ்தர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ச)



நோர்வேயில் வசிக்கும் இலங்கையர் குழுவொன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் சந்தித்துள்ளது. இதன்போது குறித்த குழுவினால் வட மாகாண பாடசாலை மாணவர்களுக்கு அன்பளிப்புச் செய்யவுள்ள பாடசாலை உபகரணங்களின் ஒரு தொகுதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்படுகின்றது.

## உத்தியோகபூர்வ வாகனங்களை ஒப்படைக்காதோர் மீது நடவடிக்கை



கொழும்பு, ஜூலை19
உத்தியோகபூர்வ கடமைகளுக்காக வழங்கப்பட்டிருந்த வீடுகள் மற்றும் வாகனங்களை திருப்பி ஒப்படைக்காத, கலைக்கப்பட்ட மாகாண சபைகளின் முன்னாள் உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

50 சதவீதமான வாகனங்கும் சில உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களும் இதுவரை மீள ஒப்படைக்கப்படவில்லை என்று அவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கூறினார்.

நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படுவது நிறைவடைவதற்குள் இந்த வாகனங்களையும், வீடுகளையும் மீள ஒப்படைக்காவிட்டால் இந்தவேட்பாளர்கள் பொதுச்சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாவர் என்று அவர் கூறினார்.

நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள கட்சிகளின் செயலாளர்களுடனான கூட்டத்தில் இந்த விடயம் குறித்து ஆராயப்படும் என்று அவர் தெரிவித்தார்.

முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் பலர் உத்தியோகபூர்வ வாகனங்களையும் வாசஸ்தலங்களையும் இதுவரை மீள ஒப்படைக்கவில்லை. வேட்புமனுத்தாக்கல் நிறைவுதினமான இன்று வியாழக்கிழமைக்கு பின்னர் அவர்கள் இவற்றை வைத்திருப்பது தேர்தல் விதிகளை மீறுவதாக அமையும் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பிச்சை எடுத்தமைக்கு பத்து ரூபா அபராதம்

கொழும்பு, ஜூலை 19
கொழும்பு, கொள்ளுப்பிட்டி பகுதியில், பிச்சையெடுத்தமைக்காகப் பிச்சைக்காரர்கள் 6 பேருக்கு கொழும்பு, கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தலா 10 ரூபா அபராதம் விதித்துள்ளது.

இவர்கள் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். பாதசாரிகளுக்கு இடையூறு ஏற்படுத்தி, நாடோடிகள் கட்டளைச் சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவை இவர்கள் மீறியுள்ளதாக பொலிஸார் குற்றம் சுமத்தினர்.

இந்த ஆறு பேரும் தாம் குற்றவாளிகளென ஒப்புக்கொண்டதையடுத்து அவர்களுக்கு நீதிவான் கனிஷ்க விஜேரட்ன தலா 10 ரூபா அபராதம் விதித்தார். இவ்வாறான நடத்தையில் ஈடுபடாதிருக்குமாறும் மீண்டும் குற்றவாளியாகக் காணப்பட்டால் அவர்கள் புனர்வாழ்வுக்கு அனுப்பப்படுவார் கள் என்றும் நீதிவான் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அடுத்த வருடம் இலங்கைக்கு ஒன்பது முதலமைச்சர்கள்

கொழும்பு,ஜூலை19
அடுத்த வருடம் 9 மாகாண சபைகளுக்கு முதலமைச்சர்கள் நியமிக்கப்படுவர் என்று தென் மாகாண சபை முதலமைச்சர் சான் விஜயலால் டி சில்வா தெரிவித்தார்.

அடுத்த வருடம் வட மாகாணத்துக்குத் தேர்தல் நடத்தப்படவுள்ளதால் அதில் வடக்குக்கும் முதலமைச்சர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுவரை காலமும் 8 முதலமைச்சர்கள் மத்திய அரசுடன் இணைந்து செயற்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்குக்கு முதலமைச்சர் நியமிக்கப்பட்டதும் 9 முதலமைச்சர்களும் மத்திய அரசுடன் இணைந்து செயற்பட வாய்ப்புக் கிட்டும் என்று அவர் மேலும் கூறினார்.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமையல் ஆள்தேவை**

பிரபல Restaurent ஒன்றுக்கு சமையலுக்கு ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு:- 021 222 1322, 0771815917

(20597)(2-6-7)


# தொலைபேசி இயக்குநர் பதவிகளில் மாற்றம் இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 19

வடக்கில் மாகாண வைத்தியசாலைகளில் தொலைபேசி இயக்குநர்களாக நியமிக்கப்பட்ட 18 பேரும் தொடர்ந்தும் தொலைபேசி இயக்குநர்களாகப் பணியாற்றுவார்கள். அவர்களது நியமனங்களில் மாற்றமேற்படுத்தவில்லை என்று வடமாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி நியமனம் வழங்கப்பட்டவர்களில் ஒரு பகுதியினரின் நியமனங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு அவர்கள் முன்னர் வகித்த பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஊடாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் அதனால் தாம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தமது பதவியுயர்வு தடுக்கப்பட்டதாகவும் அவர்கள் முறைப்பாட்டில் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாக ரவீந்திரனிடம் கேட்ட போதே அவர்கள் தொலைபேசி இயக்குநர்களாகப் பணிபுரிய முடியும் என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நியமனம் வழங்கப்பட்ட 18 பேரும் தமது தொலைபேசி இயக்குநர் பணிக்குச் சென்றதால் அவர்கள் முன்னர் செய்து வந்த வைத்தியசாலை ஊழியர் பணியை செய்ய ஊழியர் பற்றாக்குறை நிலவியது. வைத்தியசாலைத் தரப்பினர் அது பற்றிக் கூறினர்.

அதனால் ஊழியர்களாக சில மாதங்களில் நியமனம் செய்யப்பட இருப்பவர்கள் பணிக்கு வரும்வரை முன்னர் வகித்த பணியைச் செய்யுமாறும் அதற்கேற்ற பதவியுயர்வு, சம்பளம் என்பன கடந்த 11 ஆம் திகதியிலிருந்து இருக்கும் என்று கூறப்பட்டது. அதனை அந்த ஊழியர்கள் மறுத்ததால் அவர்களை தொலைபேசி இயக்குநர் பணியை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4)

## பவளவிழா

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அறங்காவலரும், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியருமான சரவணமுத்து விநாயகரத்தினத்தின் பவளவிழா எதிர்வரும் முதலாம் திகதி தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சப்ரகமுவப் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி அதிபர் க.வேல்சிவானந்தன் கலந்து கொள்வார்.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பாடசாலையின் பழைய மாணவர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ள இந்த நிகழ்வில் பணி நயப்புரையை சட்டத்தரணிகள் இ.செல்வஸ்கந்தன், நடராஜா, சிறிபவானந்தன், விரிவுரையாளர் ஸ்ரீமதி நவதர்ஷினி கருணாகரன் ஆகியோர் நிகழ்த்துவர். (ம-14)


Point Pedro Traders இன்
இன்னுமொரு தரமான சேவை
P.P.T EXPRESS
Colombo - Jaffna



இலங்கையில் முதல் முறையாக முதல் தரமான
அதி நவீன சொகுசு வசதிகள்
Fully Adjustable & Side way Adjustable Seats
Wi-Fi (Internet), Video, Mobile Charging
Mic, Security Camera, Coolbox (Fridge).
Point Pedro Traders இன் பிற சேவைகள்
Parcel Service, Transport Service

COLOMBO
No. 16, Sangamitha Mw, Colombo- 13.
Tel : 011 4375790, 077 5755175

JAFFNA
No. 183, K.K.S. Road, Jaffna.
Tel : 021 4923240, 077 5731318

21 ஆம் திகதி முதல் சேவையில் ஆசனப்பதிவுகளுக்கு முந்துங்கள்

www.pptxpress.com


## முல்லைத்தீவு மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் அறிவித்தல்

முல்லைத்தீவு மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் 28.07.2012 சனிக்கிழமை அன்று மு.ப. 11.00 மணிக்கு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே முல்லைத்தீவு மகாவித்தியாலய பழைய மாணவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன், எமது பாடசாலை போர் மற்றும் சுனாமி காரணமாக பல்வேறு இடர்களையும், இழப்புக்களையும் சந்தித்துள்ளதால் பல்வேறு தேவைகளை வேண்டி நிற்கின்ற இவ் வேளையில் எமது பாடசாலையை முன்னர் போல வளர்த்தெடுக்க தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அனைவரும் ஒன்றுபட்டு மேற்கொள்வதற்கான ஒரு நல்ல ஆரம்பமாக இக் கூட்டம் அமையும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

**தலைவர்/செயலாளர்,**
**முல்லைத்தீவு மகாவித்தியாலய**
**பழைய மாணவர்சங்கம்,**
**முல்லைத்தீவு.**

(சி/1554)(6-7-8)


ANDRA DIGITAL IMAGE ஆதரவில் மாபெரும் இசைநிகழ்ச்சி



யாழ்குடா நாட்டில் முதன் முறையாக
உலகத் தமிழர்களை தன் செல்லக்குரலால் வியக்கவைத்த
விஜய்TV ஜீனியர் சுப்பர் சிங்கர் புகழ் பாடகி
அல்கா அஜித்துடன்
மற்றும்பல முன்னணிக் கலைஞர்கள் கலந்து கலக்கும்

இம்மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு வடமராட்சி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய கலையரங்கில்
இம்மாதம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில்

அல்காவின் ஆனந்த ராகங்கள்
(பழைய, இடைக்கால & புதிய பாடல்கள்)

Aircom Travelss & Tours தொ.பே : 021 2219113
WESTERN UNION Money Master

திருமண அழைப்பிதழ்கள்



10%
ANDRA WEDDING CARDS
Tel : 0212228929, 0217200000
Mob : 0776622981, 0777481696.
திருமண அழைப்பிதழ்களின் சாம்ராட்சியம்

நுழைவுச்சீட்டுக்கள் : 200/= 300/= 500/= மற்றும் VIP
Event Manegement : CEYLON ART CREATION


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# 13ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக இரத்து செய்க

## குணதாச அமரசேகர கோரிக்கை

கொழும்பு, ஜூலை 19
13 ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்யவேண்டும் என்று தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு சவ்சிறிபாய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



நாட்டுக்கு எதிரான சூழ்ச்சித் திட்டங்களுக்கு 13 ஆவது திருத்தச் சட்டமே பிரதான உந்து சக்தியாக அமைந்துள்ளது. முதலில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்கும் சரத்து இரத்து செய்யப்பட வேண்டும். பின்னர் முழுமையாக 13 ஆவது திருத்தச் சட்டம் இரத்து செய்யப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் சில சக்திகள் இயங்கி வருகின்றன. நாட்டில் தற்போது நிலவும் சமாதான சூழ்நிலையை தக்க வைத்துக் கொள்ள வேண்டுமாயின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்து செய்ய வேண்டும். 13 ஆவது திருத்தச் சட்டத்தை அரசியல் அமைப்பிலிருந்து முழுமையாக நீக்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## சிக்கியது ஹன்ரர் வாகனம்

வலி. வடக்கு, ஜூலை 19
கடந்த வாரம் ஏழாலையில் இளம் பெண் மரணம் அடையக்காரணமாக இருந்த கன்ரர் வாகனம் சுன்னாகம் பொலிஸாரினால் கடந்தஇரண்டு நாள்களுக்கு முன்னர் சுன்னாகத்தில் உள்ள வீடொன்றில் மறைத்து வைத்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஏழாலை உத்தமன் சிலையடியில் கன்ரர் வாகனத்தினால் மோதி ஆசிரியை உட்பட இருவர் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் வாகனத்தை செலுத்தி வந்தவர் வாகனத்துடன் தப்பி ஓடியுள்ளார்.

இதனையடுத்து பொது மக்கள் சுன்னாகம் பொலிஸாருக்கு வாகனம் சம்பந்தமான விவரத்தை உடனடியாக வழங்கிய நிலையில் சம்பவம் இடம்பெற்று ஒரு வார காலத்தின் பின்னர் பொலிஸார் வாகனத்தைக் கைப்பற்றியுள்ளார்கள். (வ-86)

# சர்வதேச தரத்தில் முதலாவது அரசியல் பயிற்சி நிலையம்

## நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை19
இலங்கையில் சர்வதேச தரத்தில் சகல வசதிகளையும் கொண்ட முதலாவது அரசியல் பயிற்சி நிலையம் ஒன்று ஸ்ரீ ஜயவர்த்தனபுர , ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய நிலையத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.



கண்டி- சுவிஸ் ஹோட்டலில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இந்த நிர்மாணப்பணி தொடர்பாக விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏழு அடுக்கு மாடிகளைக் கொண்டு நிர்மாணிக்கப்படும் இந்தப் பயிற்சி நிலையம் 2லட்சத்து 80 ஆயிரம் சதுர அடியைக் கொண்டதாகும்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வரலாற்றில் இதுவே முதலாவதாக அமையப்படவிருக்கும் அரசியல் பயிற்சி நிலையம் என்று அவர் சுட்டிக்காட்டினார். இந்தப் பயிற்சி நிலையத்தில் ஓர் அமர்வில் 2500 பேர் கலந்துகொள்ளும் வகையில் கட்டடம் அமைக்கப்படவுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ச)



நுரைச்சோலை அனல் மின் நிலையத்திலிருந்து புத்தளம் கல்பிட்டியூடாக அதிக வலுவுடைய மின்பிறப்பாக்கியொன்றை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து புத்தளம் மீனவர்கள் நேற்று புதன்கிழமை காலை ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர். வளர்பிறை மீனவர் கூட்டுறவுச் சங்கம் ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள், கடற்பரப்பில் படகுகளில் ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச)

## "தியோ காவியம்" நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 19
ஈழத்தில் மூத்த நாட்டுக்கூத்து ஆய்வாளர் கலாபூசணம் தேவதாசனால் பாடப்பட்ட "தியோ காவியம்" எனும் முன்னோடி காவிய நூல் தமிழ்நாட்டில் அடுத்த மாதம் வெளியீடு செய்யப்படவுள்ளது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இராயப்பு யோசப்பின் ஆசியுடன் வெளியீடு செய்யப்படவுள்ள இந்த நூல் திருச்சிராப்பள்ளி முன்னாள் மறைமாவட்ட ஆயர் கலாநிதி தோமஸ் பெர்னாண்டோ ஞாபகார்த்தமாக வெளியீடு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-14)

## இன்னல்களுக்கு மூலகாரணம் ஐம்புலன்கள்

புலன்கள் மிகவும் சக்திவாய்ந்தவை. இதனால் அவற்றைத் துஷ்பிரயோகம் செய்வது மனிதனுக்குச் சகலவிதமான இன்ப துன்பங்களையும் வழங்கக் காரணமாக விளங்கும்.

ஆகவே, புலன்களது இயல்பையும், பங்கையும் பற்றி நாம் நன்கு அறிந்து, எமக்கு நல்ல பலனைத் தரக்கூடியதாக அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் எப்போதும் சத்தியம், நேர்மை தவறாத நீதி வழியில் நடத்தல் வேண்டும்.

துரதிஷ்டவசமாக, மனிதன், ஐம்புலன்களது தாக்கத்துக்கு இலக்காகிறான். அவை அவனை வழிபிறழச் செய்து எல்லையில்லாப் பிரச்சினைகளுக்கு ஆளாக்குகின்றன.

ஞானக்கதிர்

ஒரு புலனின் பலவீனம் காரணமாகப் பல்வகைப்பட்ட மிருகங்கள் வலையுள் சிக்கித் தமது உயிரை இழக்கின்றன. இவ்விதம், மானுக்கு ஓசையின் பலவீனம், யானைக்கு ஸ்பரிசத்தின் பலவீனம், அந்துப்பூச்சிக்கு பார்வையில் பலவீனம், தேனீக்கு முகத்தில் பலவீனமும் உண்டு. ஆனால் மனிதனோ ஐம்புலனுக்கும் இலக்காகின்றான். இந்த ஐம்புலன்களில் ஏதாவது ஒன்றுக்கு அடிமையானாலும் அது அவனுக்கு எல்லையற்ற துன்பத்தை விளைவிக்கும்.

## வீதியோரத்தில் குழி; பயணிகளுக்கு ஆபத்து



கொழும்புத்துறை, ஜூலை 19
கோயில்வீதியில் கைலாச பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக வீதியோரமாக காணப்பட்ட குழியில் நீண்டகாலமாகக் கழிவுநீர் தேங்கிநின்று சுகதாரச் சீர்கேட்டையும் பயணிகளுக்கு ஆபத்தையும் ஏற்படுத்தி வருகிறது.

இந்தப் பகுதியில் உள்ள இராணுவ முகாமிலிருந்து வெளியேறும் கழிவு நீரே யாழ்.மாநகர சபையால் அனுமதிக்கப்படாத தற்காலிக வாய்க்கால் குழியில் தேங்கி நிற்பதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதியின் அருகே அமைந்திருக்கும் இந்தக்குழி பயணிகளுக்கும், வாகன சாரதிகளுக்கும் ஆபத்துக்களை விளைவிக்கக் கூடிய நிலையில் காணப்படுகிறது.

இந்தப் பகுதியில் தேங்கி நிற்கும் கழிவு நீரில் நுளம்புப் பெருக்கம் காணப்படுவதாகவும் அருகில் உள்ள பால்சாலைக்கும், குடியிருப்புகளுக்கும் சுகாதாரச் சீர்கேட்டை விளைவிப்பதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இந்த வீதிக்குக் காப்பெற் இடப்பட்டுள்ளபோதிலும் வீதி அகலிப்பு இடம்பெற வேண்டிய இடத்திலுள்ள இந்தக் கழிவுநீர்தேக்கத்தைச் சீர் செய்யாது வீதி புனரமைக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய சீரமைப்பு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-135)

## சமய சந்நிதிகளில்

தென்மராட்சி,ஜூலை 19
சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாத சிவன் ஆலயத்தில் விஷேட அபிஷேகமும் பூசையும் இன்றுவியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலய அமிர்தபாஷினி அம்பாளுக்கு நடைபெற்றுவரும் ஆடிப்பூரத் திருவிழாக் காலத்தில் சுமங்கலி பூசையாக 100 தம்பதிகளுக்கு விஷேட அபிஷேகம் நடத்தப்படவுள்ளன. "சிவ ஞான சம்பந்தப் பிரியன்" சிவப்பிரம்மஸ்ரீ உமாசுதக் குருக்கள் தலைமையில் இந்த அபிஷேகம் நடைபெறவுள்ளது. (ச-9)

* * *

காரை - அரசடிக்காடு கதிர்காம வேலாயுத சுவாமி ஆலய பெருந்திருவிழா நேற்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 31 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், முதலாம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ச)

* * *

வவுனியா-சிதம்பரபுரம் யாத்திரிகர்கள் மலை திருப்பழனி முருகன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்று புதன்கிழமை ஆரம்பமாகியது.

16 நாள்கள் நடைபெற இருக்கும் அலங்கார உற்சவத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது.

திருவிழாக் காலங்களில் தினமும் முற்பகல் 11 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி விசேட பூசையும் மாலை நித்திய பூசையும் நடைபெற இருக்கின்றது என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச-16)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை 19
அல்வாய் கிளானை மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் ஆடிப்பூரத் திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சக்தி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 மணிக்கு யாக ஆரம்பப் பூசை நடைபெறும். (ச-78)

* * *

வடமராட்சி, ஜூலை 19
பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை தேவாலயத்தின் 191ஆவது ஆண்டு விழாவும், நன்றி செலுத்தும் வழிபாடும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக்குரு அருட்திரு என்.டபிள்யூ. தேவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தநிகழ்வில் அருட்திரு றுடிட் சுதர்சன் சிறப்புரை நிகழ்த்துவார். (ச-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொலைபேசிப் பாவனையால் அதிகம் பாதிக்கப்படுவது...

# ஆண்களா? பெண்களா?

எமது தமிழர் பிரதேச கலாசாரப் பண்பாடுகளில் பெண்களுக்கே பல கட்டுப்பாடுகள் உள்ளன. எமது பிர தேசத்தில் ஆண்களை விடப் பெண்க ளையே சமூகம் அதிகம் உற்று நோக்குகிறது. இதனால் கைத்தொலை பேசிப் பாவனை பெண்களையே அதிகம் பாதிக்கிறது.



இன்று எமது பிரதேசத்தில் இள வயதினரைப் பெரிதும் பாதிக்கும் இலத்திரனியல் உபகரணமாகக் கைத் தொலைபேசியுள்ளது. ஒவ்வொரு வரிடமும் கைத்தொலைபேசி இல்லையென்றால் அது நாகரிகமற்ற விடயமாகக் கருதப்படுகின்றது. கைத்தொலைபேசி 'தொல்லைபேசி யாக' மாறுகின்ற சம்பவங்களையே கூடுதலாக அன்றாடம் காண்கின்றோம்.

கைத்தொலைபேசிப் பாவனையில் ஆண்களால் பெண்கள் பாதிப்படைவதோடு ''யானை தன் தலைமேல் தன் கையால் மண் அள்ளிப் போடுவது போல'' பெண்கள் தங்களாலேயே தாங்களும் பாதிப் படைகிறார்கள்.

ஆண்கள் பித்துப்பிடித்தவர்கள் போல கைத்தொலைபேசியுடன் அலைகின்றனர். இதனால் அவர்களின் நேரம்,பணம் என்பன விரய மாவதோடு பெண்களையும் பாதிப் படையச் செய்கின்றனர். யாராவது பெண்பிள்ளையின் தொலைபேசி எண் கிடைத்துவிட்டால் அவர்களை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. தொடர்ந்து தொல்லை கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். ஆபாசப் படங்கள், ஆபாசம் கலந்த காதல் குறுஞ்செய்திகளை அனுப்பிக் கொண்டே இருப்பார்கள். மேலும் கைத்தொலைபேசி மூலம் பெண் களைக் கண்டகண்ட இடங்களி லெல்லாம் படமெடுப்பார்கள். இதனால் பெண்கள் படும்பாட்டை வார்த்தைகளில் வடிக்க இயலாது.

கைத்தொலைபேசிப் பாவனை யில் பெண்கள் ஆண்களால் தான் பாதிக்கப்படுகிறார்கள் என்று கூறிவிட முடியாது. பெண்கள் தங் கள் நடத்தையாலும் பாதிக்கப் படுகின்றனர். தங்கள் கைத்தொலை பேசிக்கு அறிமுகமில்லாத ஆண் ஒருவரின் அழைப்பு வந்தால் அதற் குப் பதிலளிக்க வேண்டிய தேவை யில்லை. அந்த அழைப்புக்குப் பெண்கள் பதிலளிக்கும்போது அவரைச் 'சனீஸ்வரன் தொடர்கிறது' என்றே கூறலாம். அறிமுகமில்லாத கைத்தொலைபேசி அழைப்பு நட்பாகி, அது காதலாகி, கடைசியில் அது பெண்ணைச் சாக்கடையில் தள்ளி விடுகிறது.

கைத்தொலைபேசிகள் பல நவீன வசதிகளோடு விற்பனையாகின்றன. இவற்றில் இணையத்தள வசதிகள் வேறு. இதனால் கைத்தொலை பேசிகள் மூலம் ''பேஸ்புக்'' பாவ னையாலும் பெண்கள் சீரழிகின் றனர். ''பேஸ்புக்'' இல் அறிமுக மில்லாத ஆண்களோடு நட்புக் கொள்வதன் மூலம் எத்தனையோ பெண்கள் தமது வாழ்க்கையைத் தொலைக்கின்றனர். இத்தகைய கைத்தொலைபேசிகளின் பாவனை பெண்களையும் ஆபாசப் படம் பார்க்கத் தூண்டுகிறது. இதனால் கலாசாரச் சீரழிவுகள் பல்கிப் பெருகுகின்றன.

எமது தமிழர் பிரதேச கலாசாரப் பண்பாடுகளில் பெண்களுக்கே பல கட்டுப்பாடுகள் உள்ளன. எமது பிர தேசத்தில் ஆண்களை விடப் பெண்க ளையே சமூகம் அதிகம் உற்றுநோக் குகிறது. இதனால் கைத்தொலை பேசிப் பாவனை பெண்களையே அதிகம் பாதிக்கிறது. இதற்குப் பெண்கள் தங்களுக்குத் தாங்களே ''சுயகட்டுப்பாடு'' என்னும் வேலி யைப் போட்டுக் கொள்ளலாம். பெற்றோர்களும் தங்கள் பெண் பிள்ளைகளின் கைத்தொலைபேசி பாவனையில் கவனம் செலுத்த வேண்டும். பொதுவாக எம்மைப் போன்ற மாணவர்களுக்குக் கைத் தொலைபேசிப் பாவனை அதிகம் தேவையில்லை. கால சூழ்நிலை யின் தேவையைப் பொறுத்துக் கைத் தொலைபேசியைத் பெற்றோரின் கட்டுப்பாட்டின் கீழ் பாவிக்கலாம் தொலைபேசியைத்''தொல்லைபேசி யாக'' மாற்றாது விட்டால் எந்தப் பிரச் சினையும் ஏற்படாது.

பி.[illegible]
வ/கனகராயன்குளம் ம.வி.

# விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

கைத்தொலைபேசி பாவனையால் அதிகம் பாதிகப்படுவது ஆண்களா? பெண்களா?

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.



## ஊனம்



ஊனம் என்பது
உடலில் மட்டுமே
நெஞ்சில் உறுதி இருப்பவர்களுக்கு
வானம் வளைந்திடும்

உடற்குறைபாடுடையவர்
உலகில் எத்தனையோ?
திடம் மனதில் உள்ளதால்
சாதனை படைத்திட்டவர் உண்டு
மனக்குறைபாடு இருப்பின்
தோற்றுவிடும்
உன் உலகம்

ஊமைகள்
உயிர்வாழவில்லையா?
கண்ணிழந்தவர்
சீவிக்கவில்லையா?
காது கேளாதவர்
செயலாற்றவில்லையா?

உலகத்தை வெல்வதற்கு
உறுதி ஒன்றே போதும்
ஊனம் ஒரு தடையில்லை

சா.இந்துஜா
கோண்டாவில்.



## மீளும் நினைவு

நினைவழியா நாள்கள்
மீளும் நினைவுகளாக
தொடர்ந்து செல்கிறது
வாழ்வின் ஒவ்வொரு
விநாடியும்
சிதறித் தெறிப்பது
சந்தோசத் துளிகள் - அல்ல
கண்ணீர் சிதறல்கள் - அவை
உயிர்த்துடிப்புடன்
வாழ்ந்து கொண்டேயிருக்கும்

க.லக்சனா
கெற்பேலி மத்தி, மிருசுவில்



## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக் கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களை யும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் :-.........................

முகவரி :- .............................

.........................................

......................... .........................
திகதி கையொப்பம்

## தோழியே உனக்காக...

தூங்கி விழுந்தால் பூமியே உனக்குப் படுக்கையாகிறது. விழித்து நடந்தால் அதுவே உனக்குப் பாதையாகிறது.

ஒளி குறைந்த வீதியில் நடக்கும்போதும் உனது விழிகளுக்கு வழி தெரியும். இதயத்தில் தீபம் எரிந்து கொண்டிருந்தால்.

கவலைகளைத் தூக்கிக் கொண்டு திரியாதே. அவை கைக் வந்து கைகுலுக்க ஒரு [illegible]ருமில்லையா? உன்னு டன் நீயே கைகுலுக்கிக் கொள். எதற்காக இருக்கிறது இரண்டு கைகள்.

உழைப்பின் ரதங்கள் ஓடி [illegible]நும் பாதையில் தடையாக வைத்திருக்கும் தோல்வி என்னும் கற்கள் தூள்தூளாகும்.

நட நாளை மட்டுமல்ல, [illegible]ன்றும் உன்னுடையது தான் நட.

வந்தனா, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கில் 57 ஆயிரம் பேர் இதுவரை குடியமர்த்தப்படவில்லை

## சபையில் ஆதாரங்களுடன் முன்வைத்தார் சரவணபவன் எம்.பி

வடக்கு - கிழக்கில் 57 ஆயிரம் தமிழர்கள் இன்னமும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்தப் புள்ளி விவரங்கள் அனைத்தும் அரசாங்க அலுவலங்களால் வெளியிடப்பட்ட அறிக்கைகளில் இருந்து பெறப்பட்டவையே. இது தொடர்பில் ஐ.நா. போன்ற சுயாதீன அமைப்புக்களின் அறிக்கை எதுவும் கடந்த சில மாதங்களில் வெளியாகவில்லை என்பதால் உண்மையான புள்ளிவிவரங்கள் இதைவிட அதிகமாக இருக்குமா என்ற நியாயமான சந்தேகம் இருக்கின்றது.

இவ்வாறு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

மன்றில் அவர் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:-

போர் முடிந்து மூன்று ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் போரால் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் அனைவரும் மீளக்குடியமர்த்தப்படவில்லை. வடக்கில் செட்டிகுளம் முகாம்கள் இரண்டில் 1,081 குடும்பங்களைச் சேர்ந்த 6,031 தமிழர்கள் (கதிர்காமர் முகாமில் 769 குடும்பங்களைச் சேர்ந்த 2562 பேரும், ஆனந்தக் குமாரசாமி முகாமில் 2,827 குடும்பங்களைச் சேர்ந்த 9,235 பேரும்) இன்னமும் மீளக்குடியமர்த்தப்படாமல் இருக்கிறார்கள். அதேபோன்று கிழக்கிலும் சம்பூரைச் சேர்ந்த 7 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இன்னமும் மீளக்குடியமர்த்தப்படாமல் இருக்கிறார்கள். சம்பூர் அனல் மின் நிலையத்துக்கு எனச் சுவீகரிக்கப்பட்ட நிலப்பகுதியில் 4 ஆயிரம் தமிழர்கள் வசித்த 1,262 வீடுகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் வலி. வடக்கில் மட்டும் 26 ஆயிரம் தமிழர்கள் தமது சொந்த இடங்களைவிட்டு கடந்த 22 வருடங்களாக இடம்பெயர்ந்துள்ளார்கள். அவர்களும் இதுவரை மீளக்குடியமர்த்தப்படவில்லை.

இவர்கள் தவிர யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் மேலும் 22 ஆயிரம் தமிழர்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

மொத்தத்தில் 57 ஆயிரம் தமிழர்கள் வடக்கு - கிழக்கில் இன்னமும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இந்தப் புள்ளி விவரங்கள் அனைத்தும் அரசாங்க அலுவலங்களால் வெளியிடப்பட்ட அறிக்கைகளில் இருந்து பெறப்பட்டவையே. இது தொடர்பில் ஐ.நா. போன்ற சுயாதீன அமைப்புக்களின் அறிக்கை எதுவும் கடந்த சில மாதங்களில் வெளியாகவில்லை என்பதால் உண்மையான புள்ளிவிவரங்கள் இதைவிட அதிகமாக இருக்குமா என்ற நியாயமான சந்தேகம் இருக்கின்றது.

ஏனெனில் கிழக்கு மாகாணம் சம்பூரைச் சேர்ந்த 7 ஆயிரம் மக்கள் இன்னமும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக இருக்கையில், அரசின் மீளக்குடியமர்த்துகை அமைச்சு 08.05.2012 திகதிய அடிப்படையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கிழக்கில் மீளக்குடியமர்த்தப்படுவதற்கான மக்கள் எவரும் இல்லை என்பதாகத் தெரிவித்துள்ளது.

அப்பட்டமாகத் தெரியும் உண்மைகளையே அமைச்சுக்களும் அரச அலுவலகங்களும் இவ்வாறு அறிக்கையிடும்போது அவற்றின் நம்பகத் தன்மை குறித்து கேள்வி எழுவது நியாயமானதே.

எனவே வடக்கிலும் கிழக்கிலும் 57 ஆயிரம் தமிழர்களுக்கும் அதிகமானவர்கள் இன்னமும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்றே நம்பகமாக எதிர்பார்க்கலாம்.

ஏனெனில், இடம்பெயர்ந்தோருக்கான அனைத்துலக கண்காணிப்பு நிலையம் இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் விடுத்த அறிக்கையில் இலங்கையில் 95 ஆயிரம் பேர் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளது. இவர்களில் 54ஆயிரம் பேர் பழைய இடம்பெயரிகள் என்றும் (யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் இதற்குள் அடங்குவர்) 41ஆயிரம் பேர் புதிய இடம்பெயரிகள் (இறுதிப் போரில் இடம்பெயர்ந்தவர்கள்) என்றும் குறிப்பிட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி மனிக்பாம் முகாமில் 6,700 பேர் தங்கியிருந்தனர். அதன் பின்னர் 6 மாதங்கள் கடந்து விட்ட நிலையில் இந்த எண்ணிக்கையில் 669 பேர் மட்டுமே மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்று அரச புள்ளிவிவரங்களே தெரிவிக்கின்றன. இறுதிப் போர் உச்சமாக நடந்த இடங்களில் மீளக்குடியமர்வு எவ்வளவு வேகத்தில் நடக்கிறது என்று இதனைக் கொண்டே புரிந்துகொள்ள முடியும்.

2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாத இறுதிக்குள் முகாம்களில் உள்ள மக்கள் அனைவரும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டு விடுவார்கள் என்று இலங்கை அரசு சர்வதேச நாடுகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் உறுதியளித்திருந்தது. ஆனால், இன்று வரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

90 ஆயிரம் மக்கள் இன்னமும் மீளக்குடியமர்த்தப்படாமல் இருப்பதற்கு கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் இருப்பதே காரணம் என்று அரசு கூறுகின்றது. ஆனால், கடந்த 17 வருடங்களாக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளில் மீளக்குடியமர்த்தப்படாமல் இருக்கும் மக்களில் அரைவாசிக்கும் மேலானவர்கள் இராணுவத்தினரால் தமது காணிகள் அபகரிக்கப்பட்டதன் காரணமாக மீளக்குடியமர முடியாமல் உள்ளார்கள் என்பதே உண்மை.

வலி.வடக்கிலும், வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, யாழ்ப்பாணம், உடுவில், கோப்பாய், சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை போன்ற பிரதேச செயலர் பிரிவுகளிலும் இராணுவத்தினரும் பொலிஸாரும் கடற்படையினரும் விமானப் படையினரும் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை அபகரித்து வைத்திருப்பதாலேயே அவர்களை மீளக்குடியமர்த்த முடியாமல் இருக்கிறது.

இந்த மக்கள் சுமார் 20 வருடங்களுக்கும் மேலாக இடம்பெயர்ந்து வாழ்கிறார்கள். அவர்களின் பிரச்சினையை மனிதாபிமான நோக்கத்துடன் அணுக வேண்டிய அரசு இராணுவ நோக்கத்துடன் மக்களின் இந்த மனிதாபிமானப் பிரச்சினையை அணுகி வருவதே இந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றுக்குமான காரணம்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் உள்ள 16 கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு முற்றாக அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வடக்கில் போர்க் காலங்களில் இருந்ததைப் போலல்லாது இப்போது படையினர் குறைக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி அண்மையில்கூட கூறியிருந்தார். 10,000 படையினரே யாழ்ப்பாணத்தில் இருக்கின்றனர் என்றும் அவர் கூறியிருந்தார். (இது யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி மேஜர் [illegible] மஹிந்த ஹத்துருசிங்க [illegible] 15,600 படையினர் என்ற எண்ணிக்கையுடன் வேறுபடுகிறது என்பது வேறு கதை)

வடக்கில் படையினர் குறைக்கப்படுகின்றனர் என்றால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் படையினர் ஏன் தம்வசப்படுத்துகிறார்கள் என்பதை இந்த நாடாளுமன்றமோ பொறுப்பான அமைச்சர்களோ விளக்குவார்களா?

யாழ்ப்பாணத்தில் வலி. வடக்கில் இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் 8,000 ஏக்கர் நிலத்தை தமக்கே சொந்தமாக்கித் தரும்படி இராணுவத்தின் மேஜர் ஒருவர் அண்மையில் தெல்லிப்பழை மற்றும் கோப்பாய் பிரதேச செயலர்களிடம் கடிதங்களைக் கையளித்துள்ளார்.

இந்தப் பகுதி வளம்மிக்க விவசாய நிலப் பகுதி. அங்கிருந்த மக்கள் இடம்பெயர்வதற்கு முன்னர் தமது நிலத்திலிருந்து கிடைத்த வருமானத்தின் மூலம் வளமாக வாழ்ந்தவர்கள். 22 வருடங்களாகத் தமது சொந்த மண்ணுக்குத் திரும்பும் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். ஆனால், அவர்களின் எதிர்பார்ப்பை இராணுவத்தினரின் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் நொருக்கித் தள்ளுகின்றன.

இந்தப் பகுதியில் இப்போது நிரந்தமான முள்வேலி போடப்பட்டுள்ளது. அதற்குள் அடங்கும் பகுதிகள் ஒருபோதும் விடுவிக்கப்படப்போவதில்லை என்ற அச்சம் மக்கள் மனங்களில் எழுந்துள்ளது.

ஆனால், வலி.வடக்கில் 17 கிராம அலுவலர் பிரிவுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அண்மையில் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

அவரது கருத்து வெளியாகி ஓரிரு நாள்களில் இலங்கைக்கான பிரிட்டிஷ் உயர் ஆணையரைச் சந்தித்துப் பேசிய யாழ்ப்பாணக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க, பலாலி விமானப் படைத் தளத்தின் விரிவாக்கத்துக்காகவும் காங்கேசன்துறைமுக மேம்பாட்டுக்காகவும் அதனைச் சுற்றியுள்ள காணிகள் யாழ்ப்பாணக் கட்டளைப் பணிமனையால் சுவீகரிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார். அவர்களின் இணையத் தளத்தில் அந்தச் செய்தியை இப்போதும் பார்வையிட முடியும். காணிகளைச் சுவீகரிக்கும் அதிகாரம் இராணுவத்தின் ஒரு பிராந்தியக் கட்டளைத் தலைமையகத்துக்கு எப்போது வழங்கப்பட்டது என்று தெரியவில்லை. எனது சட்ட அறிவுக்கு எட்டியவரையில் காணி சுவீகரிப்பு என்பது அரசினால் மட்டுமே மேற்கொள்ளப்பட முடியும். ஒருவேளை, அரசும் இராணுவமும் வேறுவேறல்ல என்ற ரீதியில் கட்டளைத் தளபதி கருத்துத் தெரிவித்திருக்கவும்கூடும். அது அவரின் தவறல்லவே!

அதேபோன்று திருமுறிகண்டியிலும் படையினர் 4 ஆயிரம் ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்துள்ளனர். இந்த நிலப் பகுதியில் ஊனமுற்ற படையினருக்கான வீட்டுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதாக அந்தப் பகுதிப் பிரதேச செயலருக்குப் படையினர் எழுத்து மூலம் அறிவித்துள்ளனர். அதனால் அந்தப் பகுதியைத் தமக்குரியதாக்க நடவடிக்கை எடுக்கும்படியும் அவர்கள் கேட்டுள்ளனர்.

இறுதிப் போரில் இடம்பெயர்ந்த மக்கள், மந்தைகளாக அடைக்கப்பட்டுக் கிடந்த மனிப்பாம் முகாமிலிருந்து தமது சொந்த இடங்களுக்குத் [illegible] இந்த அரசுதான், திருமுறிகண்டியில், ஊனமுற்ற படையினருக்கு ஆயிரம் வீடுகளை 4 ஆயிரம் ஏக்கரில் அமைத்துக் கொடுக்கிறது.

வேடிக்கை என்னவென்றால், இந்த நாட்டில் எல்லா இனங்களும் சமமானவையே என்று சொல்லிக் கொள்ளும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசுதான் சிறுபான்மைத் தமிழ் மக்களை ஒரு மாதிரியாகவும் சிங்களப் படையினரை வேறொரு மாதிரியாகவும் நடத்துகிறது. ஒரு கண்ணுக்கு மையும் மற்றொரு கண்ணுக்குச் சுண்ணாம்பு இட்டுக்கொண்டு சமத்துவம் பேசும் கேவலம் இந்த நாட்டில் மட்டுமே நடக்கக்கூடியது.

மன்னார் மாவட்டத்திலும் இதுவரை படையினராலும் அரசின் திட்டங்களுக்காகவும் 5 ஆயிரம் ஏக்கர் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அரசு ஒரு திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு முன்னர் அது குறித்த சாத்திய அறிக்கைகள் மற்றும் மக்கள் விரும்பம் என்பன கேட்கப்படுதல் அவசியம்; அது கடப்பாடும்கூட. ஆனால் அப்படி எதுவும் செய்யாமலேயே மன்னார் மாவட்டத்தில் பறவைகள் சரணாலயம் அமைப்பதற்கும் காற்றாலைக்கு எனவும் 500 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. கிழக்கிலும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் இப்படி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் மக்களின் விருப்பு வெறுப்புக்களை அறியாமல் சுற்றுலாத்துறைக்கு எனவும் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் விவசாயத்துக்கு எனவும் அரசால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திலே 3,500 ஏக்கர் நிலம் இராணுவப் பயிற்சிக் கல்லூரிக்காகக் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக மக்கள் கூறுகின்றனர். நிலஅளவைத் திணைக்களத்தினரால் இந்த நிலப் பகுதி அண்மையில் இராணுவத்தினருக்காக எனக் கூறி எல்லையிடப்பட்டுள்ளது. தள்ளாடி வடக்கில் திருக்கேதீஸ்வரம் வரையில் 272 ஏக்கர் நிலம் அபகரிக்கப்பட்டுள்ளது.

இப்படி ஆயிரக்கணக்கான ஏக்கர்களை அபிவிருத்தி என்ற பெயரில் அரசு கையகப்படுத்துவதும் பெரும் சந்தேகங்களை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்துகிறது. அதிலும் குறிப்பாக தமிழ் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர விடாது ஆயிரம் ஆயிரம் ஏக்கர் காணிகளை அரசு கையகப்படுத்துவது, எதிர்காலத்தில் தீர்வு என்ற ஒன்று வழங்கப்பட்டால், அதற்கு முன்னதாக வடக்கு - கிழக்கில் முடிந்த வரையில் காணிகளை மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் உள்நோக்கம் கொண்டதா? என்பதே அந்த நியாயமான சந்தேகம்.

அரசு அவசர அவசரமாக, தமிழ் மக்களைக் கலந்தாலோசிக்காமல் அபிவிருத்தியின் பேரில் தமிழர் நிலங்களைக் கையகப்படுத்துவதால் இந்தச் சந்தேகங்களைத் தவிர்க்க முடியவில்லை.

இராணுவப் பாவனைக்கு என ஆயிரக்கணக்கில் நிலங்களை அபகரிக்கும் இந்த அரசு, மன்னார் - முள்ளிக்குளத்தில் 350 குடும்பங்களை மீளக்குடியமர அனுமதி வழங்காது இருக்கிறது.

வடக்கு - கிழக்கில் படையினரின் பயன்பாட்டுக்காவும் அபிவிருத்தி என்ற போர்வையிலும் மட்டும் நிலங்கள் பறிக்கப்படவில்லை, பௌத்த விகாரைகளை அமைப்பதற்காகவும் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. யாழ்ப்பாணம் மாதகலில், சங்கமித்தை வந்திறங்கிய இடம் என்று கூறி முதலில் அங்கு ஒரு தனியாரின் காணி ஆக்கிரமிக்கப்பட்டு விகாரை அமைக்கப்பட்டது. இப்போது அதன் அருகிலிருந்த தமிழர்களின் காணிகளும் ஆக்கிரமிக்கப்பட்டு யாத்திரிகர் விடுதி அமைக்கப்படுகிறது. இவற்றின் பாதுகாப்புக்கு என தமிழர்களுக்குச் சொந்தமான காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு கடற்படை முகாம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் காணிகள் அனைத்தும் உறுதிகள் உள்ளவை. தமிழர்களுக்குச் சொந்தமானவை. ஆனாலும் கேட்டுக் கேள்வியில்லாமல் அவை ஆக்கிரமிக்கப்படுகின்றன.

கிளிநொச்சி நகரில் அமைக்கப்பட்டிருந்த விகாரையிலும் அதன் விரிவாக்கத்துக்காகத் தனியார் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. முல்லைத்தீவிலும் அதேபோன்று தனியார் காணியில் புத்தர் சிலையை வைத்துக் கொண்டு பிக்கு ஒருவர் ஆக்கிரமிப்பு நடத்துகிறார். திருக்கேதீச்சரத்தில் தமிழரின் காணியில் ஆக்கிரமித்து வைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றும்படி பௌத்த சாசன அமைச்சு செயலர் கூறிய பின்னரும் அது அகற்றப்படாமலேயே உள்ளது.

இப்படித் தமிழர்களின் காணிகளை படை முகாம்களுக்காகவும் விகாரைகளுக்காகவும் அபகரித்துக் கொண்டு, எஞ்சியிருக்கும் காணிகளை அபிவிருதித்தித் திட்டங்களுக்கு எனக் கூறிச் சுவீகரித்துக் கொண்டிருந்தால் எப்படி தமிழர்களை அவர்களது இடங்களில் மீளக்குடியமர்த்த முடியும்?

தமிழர்களும் ஏனைய சிறுபான்மை இனத்தவர்களும் இந்த நாட்டில் சம குடிமக்களே என்று திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டே இந்த அரசு, தமிழர்களையும் ஏனைய சிறுபான்மை மக்களையும் இரண்டாம் தரக் குடிமக்களாகவே பார்க்கிறது, நடத்துகிறது.

இந்த அரசுக்கு தமிழர்களைப் பற்றி அக்கறையில்லை. அவர்களைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த வேண்டும் என்று அக்கறையில்லை. மீளக்குடியர்ந்த தமிழ் மக்கள் இயல்பு வாழ்வுக்கு திரும்புவதற்கு உதவ வேண்டும் என்பதில் அக்கறையில்லை. அப்படி அக்கறையிருந்திருந்தால் அவர்களுக்கு தேவையான உதவிகளை இந்த அரசு செய்திருக்கும். அப்படி உதவி செய்வதற்கு நிதி இல்லை வசதி இல்லை என்று கூறும் இந்த அரசுதான் உரிய காலத்துக்கு முன்னரே 66 மில்லியன் ரூபாவைச் செலவிட்டு 3 மாகாண சபைகளுக்குத் தேர்தல்களை நடத்துகிறது.


இந்த அரசுக்கு அதன் அரசியல் தேவைகள்தான் முக்கியமானவையே தவிர, தமிழர்களின் நலன்கள் அல்ல. அவர்களைச் சமத்துவத்துடன் நடத்துவதற்கும் இந்த அரசு தயாராக இல்லை. தமிழர்கள் மீதான தனது அடக்குமுறைகளுக்கு நியாயம் கற்பிப்பதற்காக ஒவ்வொரு காரணத்தை சர்வதேசத்திடம் முன்வைக்கத்தான் இந்த அரசு முயல்கிறதே தவிர, தமிழர்களையும் தம்முடன் சேர்த்துக் கொண்டு நாட்டில் நல்லாட்சி நடத்த அது முயலவில்லை.

இடம்பெயர்ந்துள்ள, எஞ்சிய தமிழ் மக்களையும் உடனடியாக அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தி, தமிழர்களை இயல்பு வாழ்வுக்குத் திரும்ப அனுமதித்து, இந்த நாட்டில் அவர்களும் சம மதிப்புக் கொண்ட குடிமக்கள் தான் என்பதை அரசு நிரூபிக்கத் தவறும் பட்சத்தில் சாத்வீகமான அரசியல் போராட்டங்களுக்கு மீண்டும் திரும்புவதைத் தவிர தமிழர்களுக்கு வேறு மார்க்கம் இல்லை என்பதை இங்கு ஆணித்தரமாகக் கூறிவைக்க விரும்புகிறேன்.

சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள், இல்லையேல் ஆயுதச் சண்டை இல்லாமல் போனதால் கிடைத்த அமைதி தொடர்வதற்கு வழியில்லாமல் போய்விடும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லில் இருந்து புறப்படும் அம்புகள்



வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட தடகளப் போட்டிகளில் பெண்களுக்கான ஓட்ட நிகழ்வொன்றில் சீறி விரையும் வீராங்கனைகள்.

# அரையிறுதியில் தாவடி காந்தி

பண்டத்தரிப்பு, ஜூலை 19

இருபாலை அம்மன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்துகின்ற அணிக்கு ஆறுபேர் கொண்டதும், ஐந்து பந்துப் பரிமாற்றங்கள் கொண்டதுமான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதிக்குத் தாவடி காந்தி விளையாட்டுக் கழக அணி தகுதி பெற்றுள்ளது.

சுற்றுத்தொடரின் காலிறுதிப் போட்டியொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் தாவடி காந்தி விளையாட்டுக் கழகமும், அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய தாவடி காந்தி விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் மூன்று இலக்குகளை மாத்திரம் இழந்து 49 ஓட்டங்களைக் குவித்தது. இதில் நிரோஜன் 18 ஓட்டங்களையும், கஜன் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பதிலளித்து ஆடிய அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 4.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 42 ஓட்டங்களை மட்டுமே பெற்று 7 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. தாவடி காந்தி விளையாட்டுக்கழகம் சார்பில் பந்து வீச்சில் கஜன், நரேன் ஆகியோர் தலா இரு இலக்குகளை வீழ்த்தியிருந்தனர்.

(ங-130)

# இந்துவிடம் பணிந்தது சென்.ஜோன்ஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்.இந்துக் கல்லூரிக்கும், சென்.ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையிலான கிரிக்கெட் ஆட்டத்தில், யாழ்.இந்து அணி சகலதுறைகளிலும் ஜொலித்து 94 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்.இந்துவின் ஜனவத் ஷர்மாவின் அதிரடியான துடுப்பாட்டமும், சிவலக்ஷனின் சிறப்பான பந்து வீச்சும் கைகொடுக்க இந்த இலகுவான வெற்றியை யாழ்.இந்துக் கல்லூரி அணி தனதாக்கியது.

இலங்கை கிரிக்கெட் சங்கத்தினால் பாடசாலை மட்ட 15 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் தொடர் நடத்தப்பட்டு வருகின்றது. இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குமிடையிலான ஆட்டம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்பம் முதலே சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி சீரான ஓட்ட வேகத்தில் நகர்ந்தது.

யாழ்.இந்து சார்பில் மூவர் அரைச் சதம் அடித்து அசத்த 50 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் *6 இலக்குகளை மாத்திரம் இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் ஜனவத்ஷர்மா 61 பந்துகளில் 9 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக 69 ஓட்டங்களையும், துவாரகன் 62 ஓட்டங்களையும், பானுகோபன் 50 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் ஷெலுமிலன், கிஷாந்துஜன் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.



254 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலளித்து ஆடத் தொடங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி, ஆரம்பத்தில் வெற்றியிலக்கை எட்டும் வகையில் சராசரி ஓட்ட வேகத்தில் துடுப்பெடுத்தாடியது. இருப்பினும் யாழ்.இந்துவின் சிறப்பான பந்து வீச்சுக்கு தொடர்ச்சியாக இலக்குகள் சரியத் தொடங்க அந்த அணி தடுமாறியது.

இறுதியில் 38.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 159 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 94 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் துடுப்பாட்டத்தில் பிளமிங் 43, சிவதர்ஷன் 19 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் யாழ்.இந்து சார்பில் சிவலக்ஷன் 7.2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 35 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 இலக்குகளையும், வழுதி 3 இலக்குகளையும், பானுகோபன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

யாழ்.இந்துக் கல்லூரியின் 15 வயதுப் பிரிவு அணி தனது முதலாவது ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரியை வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ங-5)

## உதைபந்தாட்ட இறுதிப் போட்டி



பண்டத்தரிப்பு, ஜூலை 19

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் ஈ.கே.குமாரையா ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. உரும்பிராய் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் ஊரெழு றோயல் அணியும், மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதவுள்ளன. (ங-130)

# பருத்தி நகரின் பெருஞ்சமர் சமநிலையில் முடிந்தது

அமரர் மணியம் கணபதிப்பிள்ளை ஞாபகார்த்தமாக வருடம் தோறும் நடத்தப்பட்டு வரும் 'பருத்தி நகரின் பெரும் சமரின்' இந்த வருடப் போட்டி சம நிலையில் முடிவடைந்தது.

கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற பருத்தி நகரின் பெரும் சமரில் தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகமும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பருத்தித்துறை ஐக்கிய வி.க. களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது. நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் நாவலர் அணி 188 ஓட்டங்களை எடுத்திருந்தது. அந்த அணியின் வினோதன் 33 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஐக்கியம் வி.க.அணியினர் ஓட்டங்களைப் பெற தடுமாறினர். நாவலர் அணியினர் துல்லியமாக பந்து வீசி, எதிரணியின் இலக்குகளையும் சீரான இடைவெளியில் சரித்துக்கொண்டே இருந்தனர். ஐக்கிய அணியின் முன்னிலை வீரர்கள் வெற்றி பெற வேண்டும் என்ற துடிப்புடன் ஆடிய போது அவர்கள் இலக்குகள் வீழ்த்தப்பட்டதும் அந்த அணியின் ஏனைய வீரர்கள் பொறுப்புடன் ஆடாததாலும், மிகப்பெரிய வெற்றியிலக்கை துரத்தமுடியாமையாலும் ஐக்கிய அணி தோல்வியை நோக்கி நகரத்தொடங்கியது. எனினும் இறுதியில் சுதாரித்துக் கொண்ட அந்த அணி ஆட்ட நிறைவில் ஐக்கியம் அணியால் 118 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை சமநிலைப்படுத்தியது. போட்டியின் ஆட்ட நாயகனாக 32 ஓட்டங்களை எடுத்ததோடு, 2 இலக்குகளையும் வீழ்த்திய நிஷாந்தனும் (ஐக்கியம்), சிறந்த பந்து வீச்சாளராக அன்ரனி ஜோன்சனும் (நாவலர் அணி), சிறந்த துடுப்பாட்ட வீரராக வினோதனும் (நாவலர் அணி) தெரிவானார்கள். (ங-253)



50 ஓட்டங்களைப் பெற்றதுடன் 11 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளை வீழ்த்திய பி.ஐங்கரன்

# விக்ரோறியா விஸ்வரூபம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

இலங்கைத் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் 15 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றில், யாழ்ப்பாணக் கல்லூரியை, விக்ரோறியாக் கல்லூரி 131 ஓட்டங்களால் வீழ்த்தியது.

இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற விக்ரோறியாக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி 43 பந்துப் பரிமாற்றங்களில் 174 ஓட்டங்களை எடுத்து சகல இலக்குகளையும் இழந்தது. விக்ரோறியாக் கல்லூரி அணி சார்பில் பி.ஐங்கரன் 50 ஓட்டங்களையும் அணித் தலைவர் கே.பிரசாத் 40 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் சி.கிருபாலன் 29 ஓட்டங்களைக் கொடுத்து 7 இலக்குகளை வீழ்த்தினார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி விக்ரோறியாவின் துல்லியமான பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் 14 பந்துப் பரிமாற்றங்களில் 43 ஓட்டங்களை மட்டும் பெற்று சகல இலக்குகளையும் இழந்தது. இதனால் 131 ஓட்டங்களால் விக்ரோறியாக் கல்லூரி அணி இலகுவான வெற்றியைப் பெற்றது. விக்ரோறியாக் கல்லூரி அணி சார்பில் பி.ஐங்கரன் 11 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளை வீழ்த்தி வெற்றிக்கு வழி சமைத்தார்.

(ங-23)

# கரத்தில் வென்ற கரங்கள்



அண்மையில் நடைபெற்ற வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கரம் போட்டியில் இரண்டாமிடம் பெற்ற வவுனியா வீரபுரம் மணிவாசகர் மகா வித்தியாலய வீரர்கள், அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை அணியும் தயார்

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இந்திய அணிக்கெதிரான ஒரு நாள் சர்வதேச தொடருக்கான அணி அறிவிக்கப்பட்டுள்ளது. 5 ஆட்டங்கள் கொண்ட தொடருக்கான முழுமையான அணியே அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள அணியில் பாகிஸ்தான் தொடருக்கான அணியில் இடம்பெற்றிருந்த டில்ஹார பெர்னாண்டோ, நுவான் பிரதீப், சஜீவ வீரக்கோன் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர். அந்தத் தொடரில் பங்குபற்றியிருக்காத சாமர கப்புக்கெதர மற்றும் ஒரு நாள் தொடரின் பிற்பகுதியில் சேர்க்கப்படாதிருந்த ரங்கன ஹேரத் ஆகியோர் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக்குக் கிரிக்கெட் பயணம் மேற்கொள்ளவுள்ள இந்திய அணி 5 ஒரு நாள் சர்வதேச தொடரில் பங்குபற்றவுள்ளது. எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள இந்தத் தொடரில் 21 ஆம், 24 ஆம் திகதிகளில் முதலிரண்டு ஆட்டங்கள் அம்பாந்தோட்டையிலும், 28 ஆம், 31 ஆம் திகதிகளில் கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் அடுத்த இரண்டு ஆட்டங்களும், 5 ஆவது ஆட்டம் பல்லேகலயில் ஒகஸ்ட் 4 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளது. (5)

**அறிவிக்கப்பட்டுள்ள இலங்கை அணி:**

மஹேல ஜெயவர்தன,
அன்ஜலோ மத்தியூஸ்,
திலகரட்ண டில்ஷான்,
குமார் சங்ககார,
உபுல் தரங்க,
டினேஷ் சந்திமால்,
நுவான் குலசேகர,
திஸ்ஸர பெரேரா,
லஹிரு திரிமன்ன,
லசித் மலிங்க,
சாமர கப்புக்கெதர,
ரங்கன ஹேரத்,
சச்சித்திர சேனநாயக்க,
ஜீவன் மென்டிஸ்,
இசுரு உதான



# 'சிங்குகள்' இடம்பிடித்தனர்

இலங்கையில் இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடருக்கான இந்தியாவின் 30 பேர் கொண்ட தற்காலிக அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள அணியில் யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங் ஆகியோர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

புற்றுநோய் காரணமாக ஐக்கிய அமெரிக்காவில் சிகிச்சை பெற்று, கடந்த ஏப்ரலில் இந்தியாவிற்குத் திரும்பிய யுவராஜ் சிங், அண்மையிலேயே கிரிக்கெட் பயிற்சிகளில் ஈடுபட ஆரம்பித்திருந்தார். அவர் இந்தியாவுக்காக இறுதியாக ஒரு நாள் சர்வதேச ஆட்டமொன்றில் பங்குபற்றியது, அவர் போட்டித் தொடர் நாயகன் விருதை வென்ற உலகக் கிண்ணத் தொடரின் இறுதி ஆட்டத்திலாகும். டெஸ்ட் ஆட்டமாக நவம்பரில் அவர் மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராகவும், 'ரி-20' சர்வதேச ஆட்டமொன்றில் கடந்த ஜனவரி 9 ஆம் திகதியும் பங்குபற்றியிருந்தார்.

யுவராஜ் சிங் தவிர, அண்மைக்காலமாக இந்தியத் தேர்வாளர்களால் நிராகரிக்கப்பட்டு வரும் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்கும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் 15 பேர் கொண்ட அணி அறிவிக்கப்படும் போது ரவிச்சந்திரன் அஸ்வின், பிரக்ஜான் ஓஜா, ரவீந்திர ஜடேஜா ஆகியோரைத் தாண்டி ஹர்பஜன் சிங்கிற்கு அணியில் இடம் கிடைக்குமா என்பது சந்தேகத்திற்குரியது.

புதிய வீரர்களாக கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி சார்பாக இவ்வாண்டு ஐ.பி.எல். தொடரில் மிகச்சிறப்பாக ஆடிய மன்டீப் சிங்கிற்கும் ஐ.சி.எல். அமைப்பில் இணைந்து அதன் பின்னர் தற்போது மும்பை இந்தியன்ஸ் அணிக்காக ஆடிவரும் அம்பத்தி ராயுடு ஆகியோர் இந்த அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (5)



**அறிவிக்கப்பட்டுள்ள 30 பேர் கொண்ட இந்திய அணி:**

மகேந்திரசிங் டோனி, விரேந்தர் சேவாக்,
கௌதம் கம்பீர்,
விராத் ஹோக்லி,
ரோகித் சர்மா,
சுரேஷ் ரெய்னா, ரவிச்சந்திரன் அஸ்வின், பிரக்ஜான் ஓஜா,
உமேஷ் யாதவ்,
அஷோக் டின்டா, அஜின்கியா ரஹானே, மனோஜ் திவாரி,
ராகுல் சர்மா,
வினய் குமார்,
சகீர்கான்,
யுவராஜ் சிங்,
ரொபின் உத்தப்பா,
இர்பான் பதான்,
யூசுப் பதான்,
மன்டீப் சிங்,
பியூஸ் சாவ்லா,
ரவீந்திர ஜடேஜா,
ஷீகர் தவான்,
அம்பத்தி ராயுடு,
ஹர்பஜன் சிங்,
முனாப் பட்டேல்,
நமன் ஓஜா,
டினேஷ் கார்த்திக்,
பிரவீன் குமார்,
லக்ஸ்மிபதி பாலாஜி.

# முடிவுக்காக என்றோ ஒரு நாள் வருந்துவார்



ஒரு நாள் சர்வதேசப் போட்டியிலிருந்து ஓய்வுபெற எடுத்த முடிவு குறித்து இங்கிலாந்தின் அதிரடி வீரர் கெவின் பீற்றர்சன் வருத்தமடைவார் என்று தென்னாபிரிக்க அணியின் தலைவர் கிரேம் ஸ்மித் தெரிவித்துள்ளார். அத்தோடு இந்த முடிவு கெவின் பீற்றர்ஸனின் வாழ்வில் மிகப்பெரிய ஓட்டையை ஏற்படுத்தும் என்று நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் பிறந்து இங்கிலாந்துக்காக விளையாடி வரும் கெவின் பீற்றர்சன் அதிகமான போட்டியில் பங்குபற்ற வேண்டியுள்ளதன் காரணமாக உடல், உள நலனைக் கருத்திற் கொண்டு ஒரு நாள் சர்வதேசப் போட்டி, 'ரி-20' சர்வதேசப் போட்டியிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார்.

தற்போது தென்னாபிரிக்க அணி இங்கிலாந்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நிலையில் தென்னாபிரிக்க அணியின் தலைவரான கிரேம் ஸ்மித், ஒரு நாள் சர்வதேசப் போட்டி கெவின் பீற்றர்சனின் வாழ்வில் மிக முக்கியமானவையாக அமைந்திருந்தன எனவும், அதிலிருந்து அவர் திடீரென விடுபட்டுக் கொள்ள முடியும் எனத் தான் எண்ணவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

வாழ்க்கையில் எதை இழக்கிறோம் என்பதை அதை இழக்கும் வரை தெரிவதில்லை எனத் தெரிவித்த கிரேம் ஸ்மித், ஒரு நாள் சர்வதேசப் போட்டியிலிருந்து விலகியதன் பின்பு தனது வாழ்வில் மிகப் பெரிய இடைவெளி ஒன்று காணப்படுவதை கெவின் பீற்றர்சன் உணர்வார் எனத் தெரிவித்தார்.

பீற்றர்சனுக்கு தற்போது 32 வயது மாத்திரமே ஆகிறது எனக்குறிப்பிட்ட கிரேம் ஸ்மித், பீற்றர்சனின் துடுப்பாட்ட திறன் அண்மைக்காலத்தில் மிகச்சிறப்பானதாகக் காணப்பட்டது எனவும், இவ்வாறான நிலையில் அவர் வெளியேற முடிவு செய்திருப்பது வித்தியாசமானது எனவும் தெரிவித்துள்ளார். (5)

# ஒலிம்பிக்கை தகர்க்க 8 தீவிரவாதிகள் ஊடுருவல்



லண்டனில் ஒலிம்பிக் போட்டிகள் தொடங்க இன்னும் 8 நாள்களே உள்ள நிலையில், தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படும் 8 பேர் ஊடுருவியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதற்குக் காரணம் விமான நிலையத்தில் பணி புரியும் பாதுகாப்பு அதிகாரிகளின் குறைவான எண்ணிக்கையும், அங்கு வேலை செய்பவர்களின் அனுபவமின்மையும் தான் எனக் கூறப்படுகின்றது.

அதாவது சந்தேகிக்கப்பட்ட 8 நபர்களில் 5 பேர் ஒரே நாளில் விமான நிலையத்திலிருந்து நழுவிச் சென்றுள்ளார்கள் எனவும், இவர்கள் அனைவரும் லண்டனின் தேசத்துக்கு விரோதமான தீவிரவாதிகளின் பட்டியலில் உள்ளவர்கள் எனவும் கூறப்படுகின்றது. மேலும் இந்த நபர்கள் விமான நிலையத்திலிருந்து தப்பிச் சென்ற பின் எங்கு செல்வார்கள், இவர்களது திட்டம் என்ன என்பவற்றைக் கண்டுபிடிக்க இயலாது என்று பிரிட்டன் எல்லைப் பகுதி பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் இந்த நபர்களைத் தப்பிக்க விட்ட விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட உள்ளது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடி பணிந்தது இலங்கைக் கிரிக்கெட் சபை




இலங்கைக் கிரிக்கெட் சபையால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு இலங்கை வீரர்கள் சம்மதித்துள்ளனர். இதன்படி கடந்த 5 மாதங்களாக கிரிக்கெட் சபைக்கும் வீரர்களுக்குமிடையில் ஒப்பந்தம் தொடர்பாக இடம்பெற்று வந்த இழுபறி நிலை முடிவுக்கு வந்துள்ளது.

இந்த ஒப்பந்தம் மார்ச் முதலாம் திகதி முதல் 2013 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வரை கைச்சாத்திடப்படவுள்ளது. அத்தோடு இதுவரை இலங்கைக் கிரிக்கெட் சபை இலங்கை வீரர்களுக்கு செலுத்த வேண்டியுள்ள நிலுவைகள் இந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படவுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற எஸ்.எல்.பி.எல். அறிமுக விழாவில் கலந்து கொண்ட இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவரும், வயம்ப யுனைட்டட் அணியின் தலைவருமான மஹேல ஜெயவர்தன, இலங்கைக் கிரிக்கெட் சபை தங்களுக்குரிய தேசிய ஒப்பந்தத்தை வழங்காவிடில் எஸ்.எல்.பி.எல். தொடரில் தங்களால் பங்குபற்ற முடியாது எனத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே மறுநாளே ஒப்பந்தத்திற்குரிய சமரசம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்த இலங்கைக் கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க, வீரர்களுக்குரிய ஒப்பந்தங்கள் விரைவில் கைச்சாத்திடப்படும் எனத் தெரிவித்தார். ஒப்பந்தம் இரு தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்குக் கிரிக்கெட் பயணம் மேற்கொண்டு இந்திய அணி சில தினங்களில் வரவுள்ள நிலையில், 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள அந்தத் தொடருக்கு முன்னதாக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுவிடும் என்று நிஷாந்த ரணதுங்க நம்பிக்கை வெளியிட்டார்.

(5)

# திணறுகிறது லண்டன்



உலகின் மிகப்பெரிய விளையாட்டு திருவிழாவான ஒலிம்பிக் போட்டி இந்த ஆண்டு லண்டனில் நடைபெறவுள்ளது. நவீன ஒலிம்பிக்கின் 30 ஆவது போட்டி இங்கிலாந்து தலைநகர் லண்டனில் எதிர் வரும் 27 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 12 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

இந்தப் போட்டியில் 204 நாடுகளிலிருந்து 10,500 வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் போட்டிக்காக அனைத்து ஏற்பாடுகளையும் போட்டி அமைப்பு குழு செய்துள்ளது. போட்டிக்கான மைதானம், தங்குவதற்கான இடம், பாதுகாப்பு உட்பட அனைத்து வசதிகளையும் செய்து இருக்கிறது.

போட்டி தொடங்க இன்னும் 8 நாள்கள் உள்ள நிலையில் ஒவ்வொரு நாட்டிலிருந்தும் வீரர், வீராங்கனைகள் லண்டனில் குவிய தொடங்கி விட்டனர்.

ஆஸ்திரேலியா, ரஷ்யா, இத்தாலி, சீனா, அமெரிக்கா, இந்தியா என்று அனைத்து நாட்டு வீரர், வீராங்கனைகள் மற்றும் அதிகாரிகளும் லண்டன் சென்றுள்ளனர். இதனால் நேற்று முன்தினம் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. 51 கிலோ மீற்றர் தூரத்துக்கு வாகனங்கள் நின்றன.

வீரர், வீராங்கனைகள் ஒலிம்பிக் கிராமத்துக்கு பேருந்துகளில் செல்ல 4 முதல் 5 மணி நேரத்துக்கு மேல் செலவிட வேண்டியுள்ளது. வீரர்கள் போக்குவரத்து நெருக்கடியில் மாட்டிக் கொண்டதற்காக இங்கிலாந்து நாட்டின் விளையாட்டு துறை அமைச்சர் ரொபர்ட்சன் மன்னிப்பு கேட்டுக் கொண்டுள்ளார். (5)

# நண்பேன்டா...

இன்னும் 8 நாள்களில் லண்டனில் ஆரம்பிக்கவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் என்ன நடந்தாலும் நானும் உசைன் போல்ட்டும் எப்போதும் நண்பர்களே என்று உசைன் போல்ட்டுக்கு இந்தாண்டு சவாலாகக் காணப்படுவார் எனக் கருதப்படும் யோஹன் பிளேக் தெரிவித்துள்ளார்.

ஜமைக்காவின் உள்ளூர்ப் போட்டிகளில் உலக சாதனையாளர் உசைன் போல்ட்டை 100 மீற்றர், 200 மீற்றர் போட்டிகளில் தோற்கடித்தன் மூலம் இவ்வாண்டு ஒலிம்பிக்கில் கவனிக்கப்பட வேண்டிய ஒரு வீரராக யோஹன் பிளேக் மாறியுள்ளார்.

இந்தநிலையில்கருத்துத்தெரிவித்துள்ளயோஹன் பிளேக், வெற்றிபெற்றாலோ தோல்வியடைந்தாலோ இருவரும் நண்பர்களே எனத் தெரிவித்தார். உசைன் போல்ட்டும் போட்டிகளை வெல்ல விரும்புகிறார், நானும் வெல்ல விரும்புகிறேன். ஆனால் என்ன நடந்தாலும் இருவரும் நண்பர்களே என்று அவர் தெரிவித்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு ஒகஸ்ட் வரை தனது பாடசாலைப் பயிற்றுவிப்பாளரிடம் பயிற்சி பெற்று வந்த யோஹன் பிளேக், அதன் பின்னர் உசைன் போல்ட்டுடன் இணைந்து கிளென் மில்ஸ் என்ற பயிற்றுவிப்பாளரின் கீழ் பயிற்சி பெற்று வந்தார். இந்த மாற்றம் தனது வாழ்க்கையில் பெருமளவு மாற்றங்களை ஏற்படுத்தியதாகத் தான் கருதுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தின் இறுதிப்போட்டி ஒகஸ்ட் 5 ஆம் திகதியும், 200 மீற்றர் ஓட்டத்திற்கான இறுதிப்போட்டி ஒகஸ்ட் 9 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளது. மிகவும் எதிர்பார்க்கப்படும் போட்டியாக இது அமைந்துள்ளது.

(5)


## மணல் விற்பனைக்கு

பூச்சு மணல், கண்டாவளை மணல் விற்பனைக்குண்டு.

தொடர்பு - சுண் - 0779589718

## A/L- 2012 கருத்தரங்கு

கலை, வர்த்தக, கணித, உயிரியல் துறை மாணவர்களுக்குரிய

**பொதுச்சாதாரணப் பரீட்சை**

ஆசிரியர் - த. குணசேகர்

* D.M.I யாழ்ப்பாணம்

சனி 2 மணி தொடக்கம் 5 மணிவரை (21.7.2012)

* எடிசன் கல்லூரி (கிளிநொச்சி)

திங்கள் (23.7.2012) மாலை 3 மணி ஏனைய நேரங்கள் வகுப்பில் தீர்மானிக்கப்படும்.

இப்பரீட்சைக்கான வழிகாட்டி நூலை புத்தக நிலையங்களிலும் வகுப்பிலும் பெற்றுக்கொள்ளமுடியும்.

## உடனடிப் பணியமர்வுக்கான நேர்முகத்தேர்வு

ஊடகத்துறையில் பணியாற்றவிரும்பும், பின்வரும் பதவிகளில் பணியாற்ற ஆர்வம் கொண்ட ஆண்/ பெண் இருபாலாரும் பங்குகொள்ளலாம்.

1. செய்தியாளர்கள் (ஆங்கிலம்)
2. மொழி பெயர்ப்பாளர்கள் (தமிழ்/ஆங்கிலம்)
3. தட்டச்சாளர்கள் ஆங்கிலம்

ஆங்கில மொழி மூல தராதரமும், அனுபவமும் இருப்பின் மேலதிக தகைமைகளாகக் கொள்ளப்படும்.

முகாமையாளர்,
ONLINE UTHAYAN
359, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி
0782845000

## அறிவித்தல்

கிளை பொதுச்சபைக்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர் பட்டியல் தொடர்பானது.

பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் அங்கத்தவர் பட்டியலில் இருந்து 15.06.2012 ஆம் திகதியில் உள்ளவாறாக கிளைப்பொதுச்சபைக்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு 19.07.2012 ஆம் திகதி தொடக்கம் 25.07.2012 ஆம் திகதி வரை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பட்டியல்களில் உள்ள பெயர், முகவரியில் வேறுபாடுகளிலிருப்பின் அல்லது பெயர் தவறவிடப்பட்டிருப்பின் அல்லது ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் சங்க செயலாளரிடம் எழுத்து மூலம் 25.07.2012 ம் திகதிக்கு முன் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
பச்சிலைப்பள்ளி
ப.நோ.கூ.சங்கம்,
பளை.

18.07.2012.

## VACANCY

கம்ப்யூட்டர் டுடே

Computer Today யின் Hardware Unit க்கு

- Computer Hardware Engineer
- Computer Hardware Technician

தேவை. ஆர்வமுடையவர்கள் சுயவிவரக்கோவையைக் கீழ்க்காணும் முகவரிக்குத் தபாலில் அல்லது மின்னஞ்சலில் அனுப்பி வைக்கவும்.

Uthayan IT Island,
359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 5677600 E.mail:- It@uthayan.com

## படிவம் விற்பனையாகிறது

வடக்கு மாகாண பொதுச் சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2012.

12 வகையான வேலை வாய்ப்பு மிகச்சரியான வடிவமைப்புடன் வர்த்த மானியும் இணைத்து 20/=

அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
0212229881 (சி/1583) (14.3)

## விற்பனையாகிறது

கணக்காய்வும் உறுதிப்பாடும்

ஆசிரியர் - ஞா. தேவஞானன்
விலை- 450/=

இந்த மாதம் நடைபெறவுள்ள கணக்காளர், கணக்காய்வாளர் போட்டிப்பரீட்சைகளுக்கான விசேட தொகுப்பு (சி/1565)

ஏக விநியோகத்தஸ்தர்
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்

## ஷாம்சன் இங்கிலீஷ் 3 மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி

தொழில் புரிவோர், தொழில் தேடுவோர், பட்டதாரிகள், இளைஞர், யுவதிகள், பாடசாலை, உயர் கல்வி மாணவர்கள் வெளிநாடு செல்வோருக்கான புதிய பயிற்சிப்பட்டறைகள் ஆரம்பம்.

காலம்- 21.07.2012 (சனி)

பிரிவுகள்

I) 8-10 III) 01-03
II) 10-12 IV) 03-05

ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்

ஷாம்சன் 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்ப்பாணம். TEL:- 0776214567


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வன்
## பாலசிங்கம் நிதர்சன்

அன்னை மடியில் :- 03.09.1992

ஆண்டவன் அடியில் :- 31.07.2011

திதி:- 19.07.2012

சிறு பாவம் செய்தவர்
சிறுவயதில் இறைவனடி சேர்வார்
சிறுவயதில் இறைவனடி சேர்ந்த
உம்மை இழக்க நாம்
பெரும்பாவம் செய்துவிட்டோம்.
பத்தொன்பது வருடங்கள்
உம் குரல் கேட்டு மகிழ்ந்த
நாள்களை மறப்போமா?
பரிதவிக்கும் உறவுகள்
மலைத்து நிற்கும் வேளையில்
நிதர்சா நீ எங்கு சென்றாய்?
அணைந்திடா எம் மனதில்
மீண்டும் பிறப்பெடுத்து
வருவீரெனக் காத்திருக்கும்

அப்பா, அம்மா, உறவினர்கள்.
நீர்வேலி தெற்கு.
லவுசான், சுவிஸ்.

(சி/1551)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட " A " தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

| | | |
|---|---|---|
| நல்லூர் பாம் சென்ரர்<br>#19, முருகேசர் ஒழுங்கை,<br>நல்லூர், யாழ்ப்பாணம்<br>தொ.பே : 021 2226944 | நல்லூர் பாம் சென்ரர்<br>கனகபுரம் வீதி,<br>கிளிநொச்சி<br>தொ.பே : 077 6225944 | சுட்டி பாம் சென்ரர்<br>வட்டுக்கோட்டை<br>தொ.பே : 077 8996085 |

(20259)(6-7-8)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## காணி விற்பனைக்கு

மல்லாகம் கே.கே.எஸ். வீதியில் 2¼ பரப்புக்காணி விற்பனைக் குண்டு. (பழைய சோடாக்கம்பனி ஒழுங்கை)
தொடர்பு: 077 753 2994
(20577)(5-6-7)

## German,Swiss மொழிகள்

தமிழ் மொழிபெயர்ப்புடன் நடை பெறுகிறது. அடுத்த புதிய வகுப்புக்கள் ஆரம்பம்.
10,Palay road, Jaffna. T.P. 077160 4823
(20551)(5-6-7)

## வீடு வாடகைக்கு

கச்சேரிக்கு அண்மையில்
4 அறைகளுடன் சகல
வசதிகளும் கொண்ட வீடு
வாடகைக்கு உண்டு.
தொடர்பு:-0773965369
(20595)(2-6-7)

NDB Savings Star Plus

# சேமிப்பு கணக்குகளுக்கும் 10%* அதி உயர் வட்டியைத் தருவது NDB

ரூ.50,000/- இற்கு மேற்பட்ட வைப்புகளுக்கு மட்டுமே.
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது. வ.செ.வ. 10.47% அழையுங்கள் 011 2 448 888

நெஷனல் டிவலப்மென்ட் பேங்க் பிஎல்சி ஆனது, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும். AA (lka) Fitch Rating

NDB வங்கி

(பி/13346)(5-6-7)

dimo TECHNOLOGY
www.facebook.com/DimoSriLanka
Mahindra Rise.

# பெரும் போகத்திற்கு டிமோவிடமிருந்து இணையற்ற இலாபம்!




உலகின் 1ம் தர Mahindra ட்ரக்டரிடமிருந்து
சிங்கர் 24" அங்குல LED FULL HD தொலைக்காட்சி அல்லது ஒரு 2000W ஜெனரேட்டர்

## இலவசம்!*




(இக்கொடுப்பனவு 2012 ஜூலை 31 வரை மட்டும் அல்லது இருப்புகள் உள்ளவரை மட்டுமே)

மேலதிக விபரங்களை அருகிலுள்ள மஹிந்ரா விற்பனை முகவரிடம் அல்லது கீழ்க்குறிப்பிடப்பட்ட தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

வடக்கு மாகாணம் - 0773 763019 கிழக்கு மாகாணம் - 0777 373683 திருகோணமலை - 0772 011510 அம்பாறை - 0773 813671

(பி/13343)(5-6-7)
Mel Ads


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**தோற்றம்**
**02.08.1944**

**மறைவு**
**20.06.2012**



*அன்புள்ள அப்பாவே!*
*கண் இமை போன்ற காவலரே!*
*எங்கள் இதயங்கள் அழும் ஓசை*
*உறங்கிய உங்கள் செவிகளுக்குக் கேட்டிடுமோ?*
*தள்ளாடும் கால்களும் தடுமாறும் இதயமும்*
*நிழல் தர நீங்கள் இன்றி*
*தணலாய் தவிப்பதை யார்க்கு உரைப்போம்?*
*நன்மைகளின் போதும் நல்ல நாள்களின் போதும்*
*எங்கள் மனதின் வலிகள் அதிகரிக்கின்றது.*
*அந்த வேளை எம் அருகில் வந்து ஆறுதல் தாரும்.*

# அமரர் செல்லப்பா பத்மநாதன்

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும், உள்நாடு, வெளிநாட்டில் இருந்து தொலைபேசி மூலமும், தந்தி, கடிதம் மூலமும் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியோருக்கும், மரணச் சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் வேறு பல வழிகளில் உதவிபுரிந்தவர்களுக்கும், உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று(19.07.2012) வியாழக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (20.07.2012) வெள்ளிக்கிழமை பகல் 10.00மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.)*

**சிங்கராயர் வீதி,**
**3ஆம் கட்டை, கல்வியங்காடு.**

**குடும்பத்தினர்**

(20593)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org